


# Mission IT-Rural

## Summary of Media Coverage (2017-24)

## Tamil

# www.fafaco.in

Formerly it-rural.com

இந்து தமிழ் திசை

தி இந்து
நிலமும் வளமும்
உழவே தலை
சனி, ஏப்ரல் 9, 2016

# தக்காளி விலை வீழ்ச்சி: தடுக்க வழி இல்லையா?

• சங்கர்ராம் •



நம் விவசாயிகளுக்கு இப்போதுவரை ஒரு விளைபொருளின் தேவை எவ்வளவு? நடப்புப் பருவத்தில் எத்தனை ஏக்கரில் ஒரு பயிர் பயிரிடப்பட்டிருக்கிறது? நாமும் அதைப் பயிரிட்டால் நல்ல விலை கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பது போன்ற அடிப்படைத் தகவல்கள் எதுவுமே தெரியாது.

### முன்னோடி முயற்சி

### ஏன் வருகிறது விலை வீழ்ச்சி?



### எப்படிச் செயல்படுகிறது?



### ஒத்துழைப்பு அவசியம்

இந்து தமிழ் திசை







> சந்தை நிலவரங்களை இடைத்தரகர்கள் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு விவசாயி தெரிந்துகொள்வதில்லை. இதனால், இடைத்தரகர் எவ்வளவு விலை குறைவாக கேட்டாலும் விவசாயி நம்ப வேண்டியிருக்கிறது!

# விவசாயத்துக்கு உடனடித் தேவை தகவல் தொழில்நுட்பத் திட்டமிடல்...




டி.எல்.சஞ்சீவிகுமார்

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக ரூ.120-ஐத் தாண்டி விற்ற தக்காளியின் விலை ரூ.50-க்கு இறங்கி வந்திருக்கிறது. இதையேதான் சில மாதங்களுக்கு முன்பு விலை கிடைக்காமல் சாலையில் கொட்டினார்கள். அடிக்கடி சந்திக்கும் இதுபோன்ற பிரச்சினைகள் சாதாரணமானவை அல்ல. விவசாயிகளின் உயிர் பிழைத்திருத்தல் தொடர்பானது. இது விவசாயிகளின் தற்கொலையில் நாட்டின் மூன்றாவது இடத்தில் இருக்கிறது தமிழகம். தேசிய அளவில் கடந்த 2014-ம் ஆண்டு 5,650 ஆக இருந்த விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கை கடந்த 2015-ம் ஆண்டு 8,007-ஆக உயர்ந்திருக்கிறது.

"மேற்கண்ட பிரச்சினைகளுக்கு வறட்சி அல்லது வெள்ளம் மட்டுமே காரணம் அல்ல. உற்பத்தி - விநியோகம் - தேவை இடையிலான முரண்பாடே பிரச்சினைகளுக்கு காரணம்" என்கிறார் [illegible]

[illegible]

— டி.எல்.சஞ்சீவிகுமார்

தொடர்புக்கு: [illegible]@thehindutamil.co.in

குங்குமம்



# விவசாயப் பிரச்னைகளை

நிச்சயம் ஈஸியா தீர்க்கும்!

"இப்பவரை இந்திய விவசாயிகளுக்கு ஒரு விளைபொருளை எவ்வளவு பயிரிடணும்... அதுக்கு நல்ல விலை கிடைக்குமாங்கிற தகவல் துளியும் தெரியாது. அதனாலதான் ஒரே பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் ஒரே விளைபொருளை அதிகமா உற்பத்தி பண்ணிட்டு விற்க முடியாம நஷ்டப் படுறாங்க.

குங்குமம்

இது ஒரு பக்கம்னா இன்னொரு பக்கம் உற்பத்தி குறைஞ்சதால விலையேறி நுகர்வோர்கள் கஷ்டப்படறாங்க. அப்படி ஒரு பிரச்னை இனி வரக்கூடாதுனுதான் இந்தத் தொழில்நுட்பத் திட்டத்தை பதினைஞ்சு வருஷங்களுக்கு முன்னாடி உருவாக்கினோம். ஆனா, இப்ப வரை இதை நடைமுறைப்படுத்த முடியலை. போராடிட்டு இருக்கோம்...”



வருத்தமும் வேதனையுமாக வெடிக்கிறது திருச்செல்வத்தின் குரல். தகவல் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியைப் பயன்படுத்தி விவசாயத்திற்காகவும், விவசாயிகளின் முன்னேற்றத்திற்காகவும் ஒரு முன்மாதிரி இணையத் திட்டத்தை உருவாக்கி இருக்கும் ஐடி இளைஞர் இவர்.

“விவசாயம்தான் நம் நாட்டின் முதுகெலும்புனு மார்தட்டுறோம். ஆனா, தினம் தினம் விவசாயிகள் தற்கொலை செஞ்சுட்டு இருக்காங்க. உணவுப் பொருட்கள் விலை ஏறிட்டு இருக்கு. இதைப் பத்தி ஆதங்கமும், கோபமும் காட்டறோமே தவிர தீர்வு குறித்து ஆராயறதில்லை. விவசாயிகளுக்கு வழிகாட்ட சரியான ஆட்களும் இல்லை. எங்க ஐ.டி. திட்டம் நூறு சதவீதம் அவங்களுக்கு தீர்வளிக்கும்...” என்கிற திருச்செல்வம் இந்தத் திட்டத்திற்காக தனது ஐடி வேலையை உதறிவிட்டு முழு மூச்சாக செயல்பட்டு வருகிறார்.

> **இந்தத் தொழில்நுட்பத் திட்டத்தை பதினைஞ்சு வருஷங்களுக்கு முன்னாடி உருவாக்கினோம். ஆனா, இப்ப வரை இதை நடைமுறைப்படுத்த முடியலை.**

“சொந்த ஊர் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை பக்கத்துல ஆலம்பட்டு கிராமம். 1996ம் வருஷம் மதுரைப் பல்கலைக்கழகத்துல எம்சிஏ முடிச்சேன். நான், வெங்கடேஷ் குமார், உத்தம்குமார், ஜெயகுமார், விஜய்னு அஞ்சு பேரும் ஒரே சிந்தனை கொண்ட நண்பர்கள். சென்னைல வேலை பார்த்தப்ப, இன்டர்நெட் தொழில்நுட்பத்தின் ஆற்றலை உணர்ந்து, getbusticket.comனு ஒரு வெப்சைட்டை உருவாக்கினோம். முதன்முதலா ஆன்லைன்ல பஸ் டிக்கெட் எடுக்கற முறையை உருவாக்கினது நாங்கதான்னு நினைக்கிறேன். சில காரணங்களால அதை தொடர்ந்து நடத்த முடியலை.

இந்த நேரத்துல ஆந்திராவுல விலை வீழ்ச்சி காரணமா விவசாயிகள் தக்காளியை ரோட்டுல கொட்டி போராட்டம் பண்ணினதை பேப்பர்ல படிச்சேன். கஷ்டப்பட்டு நாலஞ்சு மாசமா விளைவிச்ச தக்காளியை, கிலோ 50 பைசானு கொடுக்க யாருக்குதான் மனசு வரும்? இதுக்கு ஏதாவது செய்ய முடியுமானு யோசிச்சோம்.

எங்க துறையின் அடிப்படையே பகுத்தாராய்தல்தான். அப்படி அலசினதுல கண்ட அடிப்படை உண்மை, ‘தேவைக்கு அதிகமா உற்பத்தி செய்தல்’னு புரிஞ்சது. தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயப் பிரச்னைக்கு தீர்வு தர முடியும்னு நம்பினோம். அப்படிதான் எங்க ஐ.டி. புராஜெக்ட் உருவாக்க, ஒரு தக்காளியைப் பத்தின செய்தி எங்க

குங்குமம்



ஓட்டுமொத்த வாழ்க்கையையும் அர்த்தமுள்ளதா மாத்துச்சு.

விவசாயம் சார்ந்த பல்துறை வல்லுநர்களோடு ஆலோசித்து நிலையான, எளிதில் விரிவாக்கம் செய்யக் கூடிய ஒரு மாடலை உருவாக்கினோம். இந்தத் திட்டத்தை அரசும் தனியாரும் சேர்ந்தால் தான் சிறப்பா செய்ய முடியும். அதற்கு காலதாமதம் ஆகலாம். அதனால முழு நேர வேலையா இந்தத் திட்டத்தை நான் ஏத்துக்கிட்டேன். மத்தவங்க வேலைக்கு போய் எனக்கு பணம் அனுப்பணும்னு பேசினோம். கிட்டத்தட்ட 15 வருஷங்களா என் வாழ்க்கை இப்படிதான் ஓடிக்கிட்டு இருக்கு...'' என்ற திருச்செல்வம், இந்த ஐ.சி.டி. திட்டம் பற்றி விவரித்தார்.

''தேவைக்கேற்ப உற்பத்தி பண்றதுதான் இந்தத் திட்டத்தோட முதல் குறிக்கோள். இதன்படி ஒவ்வொரு கிராமத்திலும் அரசுடன் இணைந்து தனியார் தகவல் செயல் மையம் செயல்படும். இதுல இன்டர்நெட் வசதியோடு ஒரு கம்ப்யூட்டர், அதை ஆபரேட் செய்ய ஒரு கணினி பட்டதாரி, மையத்தை கவனிக்க பள்ளிக் கல்வி முடித்த உள்ளூர் இளைஞர் ஒருவர்னு ரெண்டு பேர் கொண்ட டீம் இருக்கும்.

இவங்ககிட்ட வேளாண்மை சார்ந்த துல்லியமான சமீபத்திய தகவல்கள், அரசின் சிறப்புத் திட்டங்கள், மானிய விவரங்கள், தான் பயிரிட விரும்பும் பயிர் எவ்வளவு ஏக்கர்களில் ஏற்கெனவே பயிரிடப்பட்டிருக்கிறது என்கிற விபரம், தனது நிலத்தில் அதிகபட்ச உற்பத்தி கிடைப்பதற்கான வழிகள், நோய் மற்றும் பூச்சி தடுப்பு பரிந்துரைகள்னு எல்லாத்தையும் உள்ளூர் விவசாயிகள் பெறலாம்.

> **அறுவடைக்கு**
> **முன்பாகவே சந்தை விலை விபரங்களை தெரிஞ்சு, நேரடியாக கொள்முதல் செய்ய விரும்பும் நிறுவனங்களுடன் விலை நிர்ணயமும் செய்துக்கலாம்.**

அப்புறம், விதை, உரம், பூச்சிகொல்லி போன்ற இடுபொருள்களை ஒப்பீடு செய்தும் தேர்ந்தெடுக்கலாம். அதற்கான பணத்தை மையத்துல கட்டி சொந்த இடத்துலயே பெற்றுக் கொள்ளலாம். அடுத்து, ஊரில் வேலை ஆட்கள், எந்திரங்கள் கிடைக்கலைன்னா, அருகிலுள்ள இடங்களில் இருந்து ஒப்பந்தம் வழியா வரவழைக்கும் வசதியும் இதிலிருக்கு.

குறிப்பா, அறுவடைக்கு முன்பாகவே சந்தை விலை விபரங்களைத் தெரிஞ்சு, நேரடியாக கொள்முதல் செய்ய விரும்பும் நிறுவனங்களுடன் விலை நிர்ணயமும் செய்துக்கலாம்.

மொத்தத்துல ஒரு விவசாயி தனது தேவைகளை எளிதா பூர்த்தி செஞ்சுக்கலாம். இதுக்கு 'i-rural மாதிரி'னு பெயர் வச்சிருக்கோம்...'' என்கிறார் உறுதியுடன்!

சரி, தமிழக அரசிடம் இந்தத் திட்டம் குறித்து பேசினீர்களா

குங்குமம்

என்று கேட்டோம்.

“ஆரம்பத்துல, தமிழ்நாடு அரசுகிட்ட இந்தத் திட்டத்தைக் கொண்டு போனோம். சிறப்பா போயிட்டு இருந்த நேரம் 2001ல தேர்தல் வந்துச்சு. இதனால திட்டம் கவனம் பெறலை. இப்ப வரை முயற்சி பண்ணிட்டே இருக்கோம். இதுக்கிடைல 2003ம் வருஷம் என் நண்பர்கள்ல ஒருத்தர் ஹைதராபாத்துல வேலைக்குப் போனார். அப்ப அங்க முதல்வரா இருந்த சந்திரபாபு நாயுடு ஐடி வழியா நிறைய பணிகளைச் செய்திட்டு இருந்ததைக் குறிப்பிட்டார்.

அங்க போய் பேசினோம். அந்த நேரத்துல ஆந்திரால தேர்தல் வந்துடுச்சு. இன்னொரு நண்பர் மூலமா ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டியைச் சந்திச்சோம். அவர், தேர்தல்ல ஜெயிச்சா நிச்சயம் இந்தத் திட்டத்தைக் கொண்டு வரலாம்னு வாக்குறுதி தந்தார்.

அவர் வெற்றி பெற்றவுடன், கடப்பா தொகுதிக்குள்ள புலிவெந்தலா ஏரியாவுல மட்டும் முப்பது கிராமங்கள்ல பரிசோதனை முயற்சியா இந்தத் திட்டத்தை செயல்படுத்துற வாய்ப்பு கிடைச்சது.



2004ல இருந்து 2006 கடைசி வரை ரெண்டரை வருஷம் சிறப்பா பண்ணினோம். இந்தத் திட்டத்தின் அனைத்து குறிக்கோள்களும் விவசாயிகளோட ஒத்துழைப்போட வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுச்சு.

முதல் முறையா சாத்துக்குடி, மாதுளை பழங்களை விவசாயிகளிடமிருந்து நேரடியா சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செஞ்சோம். இதனால, நிறைய விவசாயிகளுக்கு இந்தத் திட்டம் பிடிச்சுப் போச்சு. மத்திய, மாநில அரசின் உயர்மட்டக் கூட்டுக் குழுக்களும் இந்தத் திட்டம் இந்திய விவசாயத்துறையில் ஒரு புது பரிமாணத்தை ஏற்படுத்தும்னு பாராட்டி விரிவுபடுத்த அனுமதி வழங்கினாங்க.

மாநிலம் முழுவதும் கொண்டு போற நேரத்துல நிறைய தடங்கல்கள். இதுக்கிடைல 2009ம் ஆண்டு ஒய்.எஸ். ஆரும் விமான விபத்துல மறைஞ்சிட்டார். அப்படியே இந்தத் திட்டமும்





**ஆரம்பத்துல,**

**தமிழ்நாடு அரசுகிட்ட இந்தத் திட்டத்தைக் கொண்டு போனோம். சிறப்பா போயிட்டு இருந்த நேரம் 2001ல தேர்தல் வந்துச்சு. இதனால திட்டம் கவனம் பெறலை.**

முடங்கிப் போச்சு. அதுக்கப்புறம், நிறைய பேசிப் பார்த்துட்டோம். எதுவும் நடக்கலை...” என்கிறார் வருத்தம் பொங்க.

“ஜல்லிக்கட்டு போராட்டத்துக்குப் பிறகு இப்ப இளைஞர்களும், மாணவர்களும் விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் நிறைய பண்ணணும்னு நினைக்கிறாங்க. ரொம்ப சந்தோஷமா இருக்கு. உணவுத்தரம் பத்தின விழிப்புணர்வும் மக்கள்கிட்ட அதிகரிச்சிட்டு வருது.

இந்த நேரத்துல விவசாயிகளுக்கு உதவற இந்தத் திட்டத்தையும் அரசின் கவனத்துக்கு கொண்டு போக முயற்சி செய்யறோம். இதுக்கு மட்டும் தமிழக அரசு ஒப்புதல் கொடுத்தா... நிச்சயம் விவசாயிகளின் வாழ்க்கை மேம்படும். தமிழகமும் விவசாயத்துல தன்னிறைவு பெற்று இந்தியாவுக்கே முன்னுதாரண மாநிலமா மாறிடும்...”

நம்பிக்கையோடு சொல்கிறார் திருச்செல்வம்.



# விவசாயக் கடன்: நிரந்தரத் தீர்வு என்ன?

கிராஃபிக்ஸ்: ரெமோ ரீகன்

விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்யக்கோரும் விவசாயிகளின் கோரிக்கை வலுப்பெற்று வரும் நிலையில், அரசாங்கம் விவசாயக் கடனுக்கான வட்டி விகிதத்தைக் குறைத்து அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இதனால், அரசுக்குச் சுமார் 20,339 கோடி செலவாகும் என்று கூறப்பட்டுள்ளது. யதார்த்தம் என்னவெனில், கடனைத் தள்ளுபடி செய்வதோ வட்டி விகிதத்தைக் குறைப்பதோ விவசாயப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஆகாது. தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட முழு விவசாயத் தீர்வு என்பதை இலக்காகக் கொண்ட எங்கள் 15 வருட முயற்சியில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில், எங்கள் கருத்தை முன்வைப்பதைக் கடமையாகக் கருதுகிறோம்.

திருச்செல்வம்

**பிரச்சினைக்கு அடிப்படை**

விவசாயம் எதற்கு மிக முக்கியம் என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுவதில் ஏற்பட்டிருக்கிற குழப்பமே விவசாயப் பிரச்சினைக்கான காரணம். விவசாயத்தை நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கு முக்கியம் எனப் பார்ப்பதா, விவசாயம் சார்ந்த 70 கோடி மக்களின் வாழ்வாதாரம் மற்றும் கிராமப்புறப் பொருளாதாரம் சார்ந்த நாட்டின் வளர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதற்கு அத்தியாவசியம் எனக் கருதுவதா அல்லது விவசாயிகள் செய்யும் தொழிலாக, வியாபாரமாகப் பார்ப்பதா என்பதில் ஒரு தெளிவான நிலைப்பாடு இல்லை என்பது உண்மை. சில விஷயங்களில் நாட்டின் உணவுப் பாதுகாப்புக்காகவும், சில இடங்களில் பெரும்பான்மையான மக்களின் வாழ்வாதாரமாகவும், சில நேரங்களில் விவசாயிகள் செய்யும் தொழில் என்கிற கண்ணோட்டங்களில் பார்ப்பதால் ஏற்படும் குழப்படிதான் விவசாயப் பிரச்சினைக்கு அடிப்படை.

மழை, தேவையான அளவு சரியான நேரத்தில் பெய்யுமா என உறுதியாகத் தெரியாது. விவசாயி தான் வாங்கும் விவசாயக் கடனை விவசாயத்துக்குப் பயன்படுத்துகிறாரா, அதுவும் முழுமையாகப் பயன்படுத்துகிறாரா என்பதை அறிவதற்கு வழிமுறையில்லை. அதிகபட்ச விளைச்சலுக்குத் தேவைப்படும் சிறந்த தகவல்கள், தரமான இடுபொருட்கள் அனைத்து விவசாயிகளுக்கும் (குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள்) எளிதில் கிடைக்கும் வழிமுறை இல்லை. எவ்வளவு மகசூல் கிடைக்கும், என்ன விலை கிடைக்கும், எவ்வளவு நிகர லாபம் கிடைக்கும் என்பதற்கான உத்தரவாதமும் இல்லை.

**சலுகையல்ல... மூலதனம்!**

இவ்வளவு நிலையில்லாத் தன்மையைக் கொண்டிருக்கும் விவசாயத் தொழிலுக்கு அரசாங்கம் வங்கிக் கடன் ஏன் வழங்குகிறது... வழங்க வேண்டும்? விவசாயத்தை விவசாயியின் தொழிலாக, வியாபாரமாக மட்டும் பார்த்தால் இது சாத்தியமில்லை. இந்த இடத்தில், அரசாங்கம் விவசாயத்தை நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கான, பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரமாகப் பார்க்கிறது. கிராமப்புறம் சார்ந்த பொருளாதாரமாக இன்னும் நாடு இருப்பதால், நாட்டின் முன்னேற்றத்துக்கான மூலதனமாகப் பார்க்கிறது. அதனால்தான் சுமார் 15 லட்சம் கோடிகளுக்கு மேலான அளவு நிதியை விவசாயத்துக்கு அரசு துணிந்து ஒதுக்குகிறது.

நாட்டின் முக்கிய சமுதாயத் துறைகளுக்குச் செய்யப்படும் முதலீடுகளுக்கு, செலவுகளுக்கு நேரடி வருமானத்தை அரசு எதிர்பார்ப்பதில்லை, எதிர்பார்க்கத் தேவையில்லை என்கிற பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில், எல்லைப் பாதுகாப்பு, மருத்துவம், கல்வி போன்றவற்றின் வரிசையில் நாட்டின் உணவுப் பாதுகாப்பும் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. அப்படியெனில், விவசாயக் கடனுக்கு வட்டி என்கிறதே தவறானதாகிறது. விவசாயம் பொய்த்துப்போகும்போதோ, விலை வீழ்ச்சி ஏற்பட்டு நஷ்டமடையும்போதோ விவசாயக் கடனை வசூலிப்பதும்கூடத் தவறானதாகவே ஆகும். விவசாயத்தை விவசாயிகளின் தொழிலாக, வியாபாரமாக மட்டும் பார்க்கப்படுமேயானால், நிகர லாபம் உத்தரவாதமில்லாத தொழிலுக்குக் கடன் வழங்குவதே தவறு என்பதாகிவிடும்.

எனவே, நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரத்தைப் பாதுகாத்தல், உணவுப் பணவீக்கத்தைக் கட்டுக்குள் வைத்தல், கிராமப்புறப் பொருளாதாரம் சார்ந்த நாட்டின் வளர்ச்சி விகிதத்தை அதிகரித்தல் போன்ற மிக முக்கியமான விஷயங்களின் அடிப்படையாக இருக்கும் விவசாயத்தை வெற்றிகரமாகக் கையாளத் தேவைப்படும் முயற்சிக்கான பெரும் பொறுப்பை அரசாங்கம் கையில் எடுத்துக்கொள்வதுதான் நியாயம். அதில் ஏற்படும் ஆபத்தை அரசாங்கம் சமாளிப்பதுதான் தர்மம். எளிதும்கூட. ஆனால், தற்போது விவசாயம் செய்வதில் உள்ள ஆபத்தின் பெரும்பகுதியை விவசாயிதான் ஏற்கிறார்.

இதை ஒரு சிறு உதாரணத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம். வெங்காயம் விலை அதிகரிக்கும்போது வெளிநாடுகளிலிருந்து அவசர நிலையில் இறக்குமதி செய்யும் அரசு, அதே வெங்காயம் கிலோ ஒரு ரூபாய்க்கும், 50 பைசாவுக்கும் விற்கும்போது மௌனம் காக்கிறது, கண்டுகொள்ளாமல் விடுகிறது. மிகக்குறைந்த விலை கிடைக்கும்போது எப்படி விவசாயியால் கடனை திருப்பிச் செலுத்த முடியும்? இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு விவசாயிகளின் வாழ்க்கையைப் பணயம் வைத்துச் சாதிக்கப்படுவதாக இருக்கக் கூடாது.

நாட்டில் உள்ள அனைத்து விவசாயிகளின் தேவை நல்ல தரம், அதிக உற்பத்தி, உரிய விலை, விவசாயம் செய்வதில் உள்ள கடினத்தன்மையை இலகுவாக்குதல் மற்றும் வறட்சி, புயல் போன்ற இயற்கைச் சோதனைகளின்போது முழு இழப்பையும் ஈடுகட்டும் விதமான சிறப்புப் பயிர்க் காப்பீடு என்பதே ஆகும். இவை விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கும் விதமான ஒரு முழுத் தீர்வை அரசு ஏற்படுத்திக்கொடுப்பது மட்டும்தான் நிரந்தரத் தீர்வாக அமையும். அப்போதுதான் விவசாயிகளின் தற்கொலைகள், போராட்டங்கள், உணவு விலை ஏற்றங்கள், உணவுத் தரமின்மை போன்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் நாட்டில் தொடராது.

- திருச்செல்வம்,
வேளாண் தகவல் தொழில்நுட்பவியலாளர்.

தொடர்புக்கு: thirurm@gmail.com

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

Date: 21-11-17

**வேப்பங்குளம் திட்டம் தொடர்பாக மதுரையில் நடந்த பிரஸ் மீட்**

# தகவல் தொழில்நுட்பம் மூலம் விவசாய பிரச்னைக்கு தீர்வு

**மதுரை, நவ. 22–**

கிராமங்களில் தகவல், செயல் மேலாண்மை மையம் துவக்கினால் விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு காண முடியும்,'' என, மதுரையில் மிஷன் ஐ.டி., ரூரல் திட்ட இயக்குனர் திருச்செல்வம் ராமு கூறினார்.

அவர் கூறியதாவது:

விவசாயிகள் தற்கொலை, விலைவாசி உயர்வு, உணவுத் தரமின்மை பிரச்னைகள் நாட்டில் உள்ளன. விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வழிமுறைகளை ஏற்படுத்தாத வரை பிரச்னைகள் தீராது. கடன் தள்ளுபடி நிரந்தரத் தீர்வாகாது. விவசாயிகளின் லாபத்தை அதிகரிப்பது, நல்ல தரம், அதிக விளைச்சல், உரிய விலை மற்றும் விவசாயத்தை இலகுவாக்குவதே இன்றைய தேவை.

இதற்காக தகவல் தொழில்நுட்பம் மூலம் திட்டமிடுதல், விற்பனை செய்வது வரை சேவைகளை கம்ப்யூட்டர் வல்லுநர் குழு உருவாக்கியுள்ளது. இத்திட்டம் ஆந்திரா கடப்பா மாவட்டத்தில் 30 கிராமங்களில் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு கிராமத்திலும் அரசுடன் இணைந்து தகவல், செயல் மேலாண்மை மையம் துவக்கப்படும். இன்டர்நெட் வசதியுடன் கம்ப்யூட்டர், அதை இயக்க ஒரு பட்டதாரி மற்றும் உள்ளூர் இளைஞர்கள் குழு இருக்கும்.

வேளாண்மை சார்ந்த துல்லியமான தகவல்கள், அரசின் சிறப்புத் திட்டங்கள், மானியங்கள், ஒரு விவசாயி பயிரிட விரும்பும் பயிர், அதிகபட்ச உற்பத்திக்கான பரிந்துரைகள், நீர் மேலாண்மை, நோய் மற்றும் பூச்சித் தடுப்பு உட்பட பல தகவல்களை பெறலாம். இது சிறு, குறு விவசாயிகளுக்கு தீர்வாக அமையும்.

பிரதமர், முதல்வர் கவனத்திற்கு இத்திட்டம் கொண்டு செல்லப்படும். இத்திட்டத்தை சிவகங்கை கல்லல் அருகே வேப்பங்குளம், அரியலூர் இலுப்பையூரில் துவக்க உள்ளோம், என்றார்.

Date: 21-11-17

## வேப்பங்குளம் திட்டம் தொடர்பாக மதுரையில் நடந்த பிரஸ் மீட்

டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in



அக்ரி-டாக்டர் 10 — 22.11.2017 புதன்கிழமை

### இந்திய விவசாய பிரச்சனைகளுக்கு ஐ.டி. மூலம் தீர்வு தரும் இளைஞர் திருச்செல்வம்

மதுரை, நவ.21

THE HINDU

https://www.thehindu.com/todays-paper/tp-national/tp-tamilnadu/ict-based-solution

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

Date: 28-11-17

# விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்ற 'ஐடியா'

## செயல் வடிவம் கொடுக்க களம் இறங்கியது ஐடி வல்லுநர் குழு

மதுரை, நவ. 26-

இந்திய விவசாயிகளும், விவசாயமும் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தகவல் தொழில்நுட்பம் மூலம் எளிதாகத் தீர்வு காண முடியும் என்றும் அதேபோல் விவசாயத்தை முழுவதுமாக லாபகரமான தொழிலாக மாற்ற முடியும் என்று பல ஆய்வுகள் மேற்கொண்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர் குழு அதற்கு செயல்வடிவம் கொடுக்க களத்தில் இறங்கியுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஐடி வல்லுநர் திருச்செல்வம். அவர் மதுரையில் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப (ஐடி) வல்லுநர் குழு, கடந்த 16 ஆண்டுகளாக கடுமையாக உழைத்து, கிராமங்கள் மற்றும் விவசாயம் சார்ந்த பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறது.

அதன்மூலம், திட்டமிடுதலில் இருந்து விற்பனை வரை விவசாயத்துக்குத் தேவைப்படும் அனைத்துத் தரவுகளையும் உள்ளடக்கிய இந்தத் திட்ட மையங்கள் வாயிலாக விவசாயத்தை வெற்றிகரமான தொழிலாகவும் விவசாயிகளுக்கு மிக கண்ணியமான வாழ்க்கையையும் உருவாக்கித் தர முடியும். தனிப்பட்ட முறையில் அதற்காக 5 பேர் கொண்ட குழு விவசாயிகளுக்கான செயல்திட்டத்தை உருவாக்கியுள்ளது.

ஒன்றுபட்ட ஆந்திரா மாநிலத்தின் முதல்வராக இருந்த ராஜசேகர ரெட்டி, இந்த திட்டத்தை வரவேற்று கடப்பா மாவட்டத்தில் உள்ள புலிவேந்துலா ஒன்றியத்தில் 11 மையங்களை உருவாக்கி



திருச்செல்வம்

> "இந்த மையங்கள் வாயிலாக ஒட்டுமொத்த இந்தியாவின் விவசாயத்தையும் மிக நேர்த்தியாக ஒருங்கிணைக்க முடியும்..."

செயல்படுத்த திட்டமிட்டார். ஆனால் அவர் மறைவு மற்றும் தெலுங்கானா பிரிவு போன்ற காரணங்களால் அந்தத் திட்டம் முடங்கிவிட்டது. ஆந்திரா மாநிலத்தில் 30 ஐஏஎஸ் அதிகாரிகள் இந்தத் திட்டத்தை வரவேற்று ஒப்புதல் அளித்துள்ளனர்.

மண் வளம், பருவகாலச் சூழல், பாசனத் தேவை, விளையும் பயிர்கள், அதற்கான திட்டமிடல், தேவையான உரம், பூச்சிக்கொல்லிகள், சாகுபடி உத்திகள், விற்பனை என்று அனைத்தையும் ஒருங்கிணைப்புச் செய்யும் இந்த மையங்கள் வாயிலாக ஒட்டுமொத்த இந்தியாவின் விவசாயத்தையும் மிக நேர்த்தியாக ஒருங்கிணைக்க முடியும்.

இதன் 'மாடல்' திட்டத்தை முதற்கட்டமாக சிவகங்கை மாவட்டம், கல்லல் ஒன்றியத்திலுள்ள வேப்பங்குளம் கிராமத்தில் ஆரம்பிக்க உள்ளோம். பத்திரிகைகளில் வெளியான செய்திகளைக் கண்டு அரியலூர் மாவட்டம், இலுப்பையூர் கிராமத்தினர் இந்தத் திட்டத்தை செயல்படுத்த அழைப்புவிடுத்துள்ளனர். அங்கும் எங்கள் பணியைத் தொடங்க உள்ளோம்.

தண்ணீர் இருந்து விவசாயம் செய்யும் விவசாயிகளின் நிகர லாபத்தை அதிகரிப்பது, நல்ல தரம், அதிக மகசூல், உரிய விலையை உறுதி செய்வது, விவசாயம் செய்வதில் உள்ள நடைமுறைகளில் எளிய முறையை உருவாக்குவது என்பது தான் இந்த திட்டத்தின் நோக்கம். நதிநீர் இணைப்பு, விளைபொருட்கள் குடோன், எளிமைப்படுத்தப்பட்ட வங்கிக் கடன், சிறந்த பயிர்க் காப்பீடு உட்பட அரசின் முக்கியத் திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்பட இந்த 'மாடல்' வழிவகுக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது, ஓய்வு பெற்ற வேளாண்துறை துணை இயக்குனர் டாக்டர் ஜெயக்கொடி, அகில இந்திய விவசாய தொழில் சங்க திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் தங்கதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருச்செல்வம் மென்பொருள் துறையில் ஒரு லட்சம் ரூபாய் மாதச் சம்பளத்தில் பணிபுரிந்தவர். விவசாய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக 16 ஆண்டுகளுக்கு முன்னர் தன் பணியை உதறிவிட்டு தகவல் தொழில்நுட்பம் மூலம் தீர்வு காண முழுநேரமாக களம் இறங்கினார். அதற்கு அவருடைய தாய் ஒப்புதல் கொடுத்து நண்பர்கள் பண உதவியோடு இந்தப் பணியை மேற்கொண்டார்.

விவசாயிகள் தற்கொலை குறித்து பார்லிமென்ட்டில் எம்பிக்கள் குரல் எழுப்பியபோது, இதற்கு தீர்வு காண இளைஞர்களிடம் இருந்து ஆலோசனைகள் தந்தால் வரவேற்பதாக பிரதமர் மோடி அறிவித்தார். அந்த நேரத்தில் பிரதமர் அலுவலகத்திற்கு தன் திட்ட அறிக்கையை திருச்செல்வம் சமர்ப்பித்தார். அதை பிரதமர் அலுவலகம் ஏற்றுக் கொண்டு ஒப்புதல் கடிதம் அனுப்பியுள்ளது. ஆனால் அந்தத் திட்ட அறிக்கை இதுவரை செயல்படுத்தப்படவில்லை. அதுகுறித்து திருச்செல்வத்திடம் ஆலோசிக்கவும் இல்லை.

அதனால் அரசை நம்பியிருக்காமல் தாங்களாகவே விவசாயிகளிடம் பேசி செயல்படுத்த முடிவு செய்து களத்தில் இறங்கியுள்ளனர்.

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

வெட்டினால் மட்டுமே கண்ணீரை வரவழைத்த சின்ன வெங்காயத்தின் இன்றைய சந்தை நிலவரம், காதில் கேட்டாலே கண்ணீரை வரவழைத்துவிடும் நிலையில் உள்ளது. கடந்த ஆண்டில் கிலோ 20 ரூபாய்க்கு விற்பனையான முதல்தர சின்ன வெங்காயம், இப்போது கிலோ 200 ரூபாயைத் தொட்டு நிற்கிறது. அன்றாட பயன்பாட்டுப் பொருட்களில் சின்ன வெங்காயத்தின் தேவை தவிர்க்க முடியாததாகிவிட்ட நிலையில், இந்த கடும் விலை உயர்வு பொதுமக்களை மோசமாக பாதித்துள்ளது.




# கண்ணீரை வரவழைக்கும் சின்னவெங்காய விலை?

"நடப்பாண்டில் வெங்காய சாகுபடியை 40 சதவீத விவசாயிகள் கைவிட்டுவிட்டு, மாற்றுப் பயிறுக்கு..."


திருச்செல்வம்.

தமிழகத்தில் 5-6 மாதங்களாக வெங்காயம் கிலோ 130 முதல் 150 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. இப்போது திருப்பூர் போன்ற சில மாவட்டங்களில் வெங்காயம் கிலோ 200 ரூபாயை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தனைக்கும் உலகில் 2வது மிகப்பெரிய வெங்காய உற்பத்தி செய்யும் நாடு இந்தியாதான். உலகிலேயே சீனாதான் வெங்காய உற்பத்தியில் முன்னணியில் உள்ளது. மொத்த உற்பத்தியில் 100ல் 27 சதவீதம் சீனாவின் பங்கு. 2ம் இடம் இந்தியாவுக்குத்தான். மொத்த உற்பத்தியில் 20 சதவீதம் இந்தியாவின் பங்கு. இந்தியாவில் மட்டும் ஆண்டுக்கு 10 முதல் 11 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் வெங்காயசாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுக்கு அதிகபட்சமாக ஒரு கோடியே 70 லட்சம் டன் அளவு வெங்காயம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதில் முக்கியமான ஒன்று, எந்த ஒரு சீசனிலும் நாடு முழுவதும் வெங்காயம் ஒரே நேரத்தில் அறுவடையாகி சந்தைக்கு வருவதில்லை என்பதுதான். அப்படியிருக்கும்போது, இந்த ஆண்டில் ஏன் இப்படியொரு வரலாறு காணாத



விலை உயர்வு ஏற்பட்டது? இதற்கான பதில் கடந்த ஆண்டின் வெங்காய விளைச்சல் ஏற்படுத்திய பாதிப்பாகத்தான் இருக்கிறது. கடந்த ஆண்டில் வட மாநிலங்களில் ஏன் தமிழகத்திலும் வெங்காய விளைச்சல் அமோகமாக இருந்தது. ஒரே நேரத்தில் அதிகப்படியான விளைச்சல் சந்தைக்கு கொண்டு வரப்பட்டதால், விலை கடுமையாக வீழ்ந்தது. கிலோ 5 ரூபாய்க்குக்கூட வட மாநிலங்களில் வாங்குவதற்கு ஆட்கள் இல்லை. தமிழகத்தில் நிலைமை பரவாயில்லை எனலாம். இதனால், லட்சக்கணக்கான விவசாயிகள் நஷ்டமடைந்து வெங்காய சாகுபடியை கை கழுவினர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, நடப்பாண்டில் வெங்காய சாகுபடியை 40 சதவீத விவசாயிகள் கைவிட்டுவிட்டு, மாற்றுப் பயிறுக்கு சென்றுவிட்டனர். திடீரென சரிந்த வெங்காய சாகுபடி பரப்பளவு, வெங்காயத்தின் சந்தை வரத்தை அசைத்துப் பார்த்துவிட்டது. வரத்து நாளுக்குநாள் குறைய, அதன் சந்தை விலை மெல்ல மெல்ல உயர்ந்து, இப்போது எட்டாக்கனி போல் உயர்ந்து நிற்கிறது.

இதுகுறித்து விவசாயத்துக்கான மிஷன் இடி குரல் இயக்கத்தின் திட்ட இயக்குனர் திருச்செல்வம் பேசும்போது, "பொதுவாக மத்திய அரசோ, மாநில அரசோ யாராக இருந்தாலும், விவசாயத்தில் சரியான திட்டமிடல், அறிவியல் ரீதியான சாகுபடி முறைகளை பின்பற்றவில்லை. ஒரு வட்டாரத்துக்கு 5-6 விவசாய அதிகாரிகள் இருப்பார்கள். அவர்கள் அந்த வட்டாரத்தில் உள்ள 3 முதல் 4 ஆயிரம் விவசாயிகளுக்கு மழைக் காலத்தில் பயிர் ஆலோசனை வழங்குவார்கள். அவரை கதியில் வழங்கப்படும் ஆலோசனைகள் இதுபோன்ற பல சிக்கல்களை எதிர்காலத்தில் உருவாக்கிவிடும். இந்த அதிகாரிகளுக்கு வேலைப் பளு அதிகம். அதனால், ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு பெரும்பாலும் ஒரே பயிரை பரிந்துரை செய்யும் வாய்ப்புகள் அதிகம். மண்வளம், நீர்ப்பிடிப்பு, நீண்ட நாட்கள் நீர் தேவைப்படும் பயிர்கள் என்ற பிரித்து அறிந்து திட்டம் கொடுக்க மாட்டார்கள். அந்த சீசனில் வரும் பிரச்னையை சமாளிக்க முடிந்தால் போதும் என்ற நினைப்பார்கள். இதனால், விளைச்சல் அதிகரித்த காலங்களில் விலை வீழ்ச்சியால் திணறுவதும், விளைச்சலே இல்லாத காலத்தில் ஏதாவது ஒரு வேறு பயிர்/காய்கறி/தானியமாவது வராதா? என்ற எதிர்பார்ப்புமே மிஞ்சி நிற்கிறது.

இது டிஜிட்டல் யுகம். பரிவர்த்தனை முறை மட்டுமல்ல, விவசாயத்தையும் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் டிஜிட்டல் மயமாக்க வேண்டும். ஆந்திராவின் கடப்பா மாவட்டத்தில் உள்ள புலிவெந்தலா பகுதியில் பரிசோதனை முறையில் தகவல் தொழில்நுட்ப மேலாண்மை மையத்தைத் தொடங்கினோம். கிட்டத்தட்ட 30 கிராமங்களுக்கும் சேர்ந்து 11 மையங்கள் தொடங்கப்பட்டன.

ஒரு கிராமத்தின் மண் வளம், அதில் என்னென்ன பயிர்கள் சாகுபடி செய்யலாம். ஒரே கிராமத்தில் உள்ள விவசாயிகளில் எத்தனை பேர் ஒரே விதமான பயிரை சாகுபடி செய்துள்ளனர். எத்தனை ஏக்கரில் சாகுபடி செய்துள்ளனர். எத்தனை வாரங்கள் இடைவெளியில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது? எவ்வளவு நாட்களில், இடைவெளியில் அறுவடையாகும்? சந்தைக்கு வரும் நாட்கள்? வரத்தை சமன்படுத்துவது அல்லது ஒரே பயிராக அல்லாமல், மாற்றுப் பயிர்களை பகிர்ந்து சாகுபடி செய்வது உட்பட பல தகவல்கள் இந்த விவசாய தகவல் தொழில்நுட்ப மேலாண்மை மையத்தின் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கும்.

இதனால், இந்த விவசாய தொழில்நுட்ப மேலாண்மை மையம் புலிவெந்தலா பகுதியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. கிராம அளவில் செயல்படும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த இந்த தீர்வினால் விவசாயிகளின் உற்பத்திச்செலவு குறையும். உற்பத்தி அதிகரிக்கும். தரம் கூடும் , சரியான விலை கிடைக்கும். விவசாயம் செய்வதில் உள்ள கடினத்தன்மை குறையும். அரசாங்கத்தை பொறுத்தவரை உணவு விலையைக் கட்டுக்குள் வைத்தல், விவசாயக் கடன், பயிர்க்காப்பீடு, மானியங்கள் போன்றவற்றை சிறப்பாக கையாள முடியும். நாட்டின் வளர்ச்சி வீதம் உயர்வதற்கு கிராமப்புறப் பொருளாதாரம் சிறப்பான பங்களிப்பு செய்வதற்கு வழி வகுக்கும். தரமான, விவசாயம் சார்ந்த வர்த்தக அமைப்புகள் தங்கள் வணிகத்தை விரிவாக்கம் செய்து கொள்ள முடியும்.

விவசாயிகளுக்குத் தேவையான குடோன்கள், இருப்பில் உள்ள வேளாண் பொருட்கள் எவ்வளவு? புதிய பயிராண்டில் எவ்வளவு நிலத்தில் எந்தெந்த பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும். அது அரசுக்கும், விவசாயிகளுக்கும் எவ்வளவு நன்மை கொடுப்பதாக இருக்கும்? என்பது போன்ற எண்ணற்ற தகவல்களை இந்த மையத்தில் பெற முடியும். பொதுமக்களுக்கும் வேளாண்பொருட்கள் நியாயமான விலையில், தரமானதாகவும் கிடைக்கும். அரசின் ஒருங்கிணைப்பும், கிராமத்து விவசாயிகளின் ஆதரவும் இருந்தால், இந்த முறை தமிழகம் மட்டுமல்ல, நாடு முழுமைக்கும் சரியான தீர்வைக் கொடுக்கும்." என்றார்.

✍ அ.மகேந்திரன்.

# கண்மாய்களை தத்தெடுத்து மழை நீர் சேமிப்பு



■ கல்லல் அருகே வேப்பங்குளம் கிராம மக்கள் இணைந்து கண்மாய்களில் இருந்த கருவேல மரங்களை அப்புறப்படுத்தி மழைநீரை சேகரித்ததால் கண்மாய் நிரம்பி காட்சியளிக்கிறது.

சிவகங்கையில்
முன்னோடி
கிராமம்



■ வேப்பங்குளம் பகுதியில் கண்மாய்க்கு செல்லும் வரத்து கால்வாய்கள் கிராமத்தினர் சுத்தம் செய்ததால் கால்வாயில் மழை தண்ணீர் ஓடி மணல் திட்டுகளாக தெரிகிறது.

சிவகங்கை மாவட்டம் வேப்பங்குளம் கிராம மக்கள் மழை நீரை நான்கு கண்மாய்களில் சேமித்து நீர் மேலாண்மையில் முன்னோடியாக விளங்குகின்றனர்.

தமிழகத்தில் அணைகள் கட்டுவதற்கு முன்பு கண்மாய்கள், குளங்கள், ஊருணிகள் முக்கிய நீராதாரமாக விளங்கின. குடிநீர், விவசாயம் என அனைத்துக்கும் நீர் நிலைகளையே மக்கள் நம்பி இருந்தனர். இவற்றிற்கு மழை நீரே முக்கிய நீராதாரமாக இருந்தன. கிராமம், சுற்றுப்புறங்களில் சேகரிக்கப்படும் மழை நீர் கண்மாய்களுக்கு நேரடியாக அடைய வரத்து கால்வாய்கள் அமைத்தனர். அதில் கழிவு நீர் கலந்து விடாமல் பார்த்து கொண்டனர். 'கிராம ஊழியம்' செய்ய தாமாக முன் வந்து நீர் நிலைகளை பராமரித்தனர். இதனால் மழை பெய்யும் போதும், கண்மாய் உபரி நீரை வெளியேற்றும் நுட்பங்கள் அத்துபடி. அதிக மழையால் கரைகள் உடையாமல் பார்த்து கொண்டனர்.

**மாயமான கண்மாய்கள்**

கண்மாய்களை பராமரிக்கும் பொறுப்பு பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. எப்போதாவது வரும் அதிகாரிகள் கண்மாய்களை பார்வையிட்டு பராமரிப்புக்கு பல லட்சம் ரூபாய் மதிப்பிற்கு திட்டமிடுவர். ஒப்பந்ததாரர் மூலம் பணிகளை செய்வர். 'கமிஷன்' அடிப்படையில் பணிகள் நடப்பதால் கண்மாய் பராமரிப்பு பெயரளவு என்றானது. 'பொதுப்பணித்துறை வரவு, நீர் நிலைகளுக்கு செலவு' என்றானது. இலவச அரிசி, மதுக்கடைகள், விளை பொருட்களுக்கு உரிய விலையின்மை, 100 நாள் வேலை உறுதியளிப்பு திட்டம், விவசாயிகள் மாற்று தொழிலுக்கு மாறியது, பல ஆண்டுகளாக வறண்டு கிடக்கும் கண்மாய்களால் பஞ்சம் பிழைக்க வழியின்றி இடம் பெயரும் விவசாயிகள் என பல்வேறு காரணங்களால் கண்மாய்கள் அழிந்து விட்டன.

## சபாஷ் கலெக்டர்!



லதா



ஜெயகாந்தன்

சிவகங்கை முன்னாள் கலெக்டர் லதா, வேப்பங்குளம் மக்கள் பின்பற்றும் நீர் மேலாண்மை திட்டம் குறித்து பாராட்டினார். வேப்பங்குளம் கண்மாய்களுக்கு வரும் மடைகளை பராமரிக்க 30 லட்சம் ரூபாய் ஒதுக்கினார். கண்மாய் கரைகளை பலப்படுத்தவும், சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காக ஆயிரம் பலன் தரும் மரக்கன்றுகள் நட்டு மூன்று ஆண்டுகள் பராமரிக்க 20 லட்சம் ரூபாய் ஒதுக்கினார். சிவகங்கை கலெக்டராக அண்மையில் பொறுப்பேற்றுள்ள ஜெயகாந்தன் நீர் மேலாண்மை திட்டப் பணிகளை வேப்பங்குளம் மக்கள், விவசாயிகள் முன்னணியில் ஒப்பந்ததாரர் மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

**வீணான நீர் நிலைகள்**

கிராம மக்கள் பின்பற்றிய நீர் மேலாண்மை முடிவுக்கு வந்து விட்ட நிலையில் சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றியம் வேப்பங்குளம் கிராம மக்கள் நீர் மேலாண்மை திட்டத்தை கையில் எடுத்தனர். இதன் பயன் நான்கு கண்மாய்களில் மழை நீர் சேமித்து விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

இங்கு 980 குடும்பத்தினர் வசிக்கின்றனர். 4,100 ஓட்டுகள் உள்ளன. இக்கிராமம் தென்னை, எலுமிச்சை விவசாயத்தில் முன்னோடியாக விளங்கியது. மேலக் கண்மாய், செட்டிக்கண்மாய், பேரிக்கண்மாய், சந்தனம் கண்மாய், பிடாரி கண்மாய், தென்மால் கண்மாய், அச்சாணி கண்மாய் ஆகியன முக்கிய நீராதாரமாக இருந்தன. வாணியம் தம்மம், கல்குளம் ஊரணிகளை குடிநீருக்கு பயன்படுத்தினர்.

இவற்றில் மழை நீர் சேமித்து குடிநீர், விவசாயத்திற்கு தடையின்றி பயன்படுத்தி வந்தனர். கண்மாய்களில் மழை நீரை சேமிக்க கிராம சபை கூட்டம் முடிவு செய்தது. தங்களால் இயன்ற நிதியை வழங்கினர். நான்கு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் சேமிப்பானது. கண்மாய்களில் மண்டிக்கிடந்த கருவேல மரங்களை அகற்றினர்.

மழை நீர் வரத்து கால்வாய்களை பராமரித்தனர். சமீபத்தில் பெய்த மழையின் பயனாய் வேப்பங்குளம் கண்மாய்களில் மழை நீர் எட்டிப்பார்த்தது. அடுத்தடுத்து பெய்த தொடர் மழையால் நான்கு கண்மாய்களிலும் பாதியளவு தண்ணீர் நிரம்பி காட்சியளிக்கிறது.





■ கண்மாய் நீரை விவசாயத்துக்காக திறந்து விடப்படுகின்றன. **அடுத்த படம்:** கண்மாய் மடையிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் வெளியாகிறது.

## டிஜிட்டல் இந்தியா திட்டம்

நீர் மேலாண்மையை மீண்டும் கையில் எடுத்தோம். இதற்காக முன்னோடி விவசாயிகள், மென்பொருள் பொறியாளர்கள் ஜெயக்குமார், உத்தம்குமார், வெங்டேஷ்குமார், விஜய் ஆகியோருடன் இணைந்து கண்மாயை முறைப்படி துார்வாரி மழை நீரை கொண்டு வந்தோம். 'டிஜிட்டல் இந்தியா' திட்டத்தின் கீழ் ஆந்திரா ஒருங்கிணைந்த மாநிலமாக இருந்தபோது 'தகவல் மற்றும் விவசாய செயல் மேலாண்மை மையம்' அமைத்து சிறு, குறு விவசாயிகளுக்கு உதவினர். இத்திட்டத்தை வேப்பங்குளத்தில் செயல்படுத்த உள்ளோம்.



**திருச்செல்வம்**
மென்பொருள் பொறியாளர்

## 'தண்ணீர் மனிதர்' பாராட்டு

முன்னோர் கடைப்பிடித்த நீர் மேலாண்மை திட்டத்தை முறையாக பயன்படுத்தினால் நல்ல பயன் கிடைக்கும் என்பதற்கு வேப்பங்குளம் உதாரணம். இந்தியாவின் 'தண்ணீர் மனிதர்' என அழைக்கப்படும் ராஜேந்தர் சிங் கடந்த ஏப்.,9 ல் வேப்பங்குளம் வந்தார். இங்கு பின்பற்றப்படும் நீர் மேலாண்மை திட்டத்தை பாராட்டினார். நீர் மேலாண்மையை முன்பே கையில் எடுத்திருந்தால் கண்மாய்களில் தண்ணீர் நிரம்பியிருக்கும். தற்போது சேகரித்த மழை நீர் முதல்முறையாக விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்காக மடையை திறந்து விட்டுள்ளோம். இனி ஆண்டு தோறும் கண்மாய்களை பராமரித்து மழை நீரை சேமிப்போம்.



**நாச்சியப்பன்**, விவசாயி

## ஒற்றுமையால் வெற்றி

இங்கிருந்து 4 கி.மீ., தொலைவில் உள்ள குருந்தமபட்டு கிராமத்தின் அருகில் செல்லும் மணிமுத்தாறு கால்வாய் மூலம் மேலக்கண்மாய் பின்பகுதி வழியாக நீர் வரத்து இருந்தது. இக்கால்வாய் பராமரிக்கபடாமல் துார்ந்து விட்டது. இதனால் மணிமுத்தாறு பிரதான கால்வாயில் தண்ணீர் பெருக்கெடுத்தாலும் மேலக் கண்மாய்க்கு வராது. இதை துார்வார பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்தடுத்து மழை பெய்தால் கண்மாய்கள் முழு கொள்ளளவை எட்டும். இது கிராம மக்களின் முயற்சிக்கு கிடைத்த வெற்றி.



**கார்வண்ணன்**
விவசாயி

–கா.சுப்பிரமணியன்
–படம்: எஸ்.மாதவன்

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்



கல்லல் வேப்பங்குளம் பகுதியில் உள்ள கண்மாய் வரத்து கால்வாய்களை ஆய்வு செய்த தண்ணீர் மனிதர் ராஜேந்திரசிங் மற்றும் குழுவினர்.

# வறட்சிக்கு காரணம் ஆக்கிரமிப்புகளே தண்ணீர் மனிதர் ராஜேந்திரசிங் கருத்து

காரைக்குடி, மே 10–

''தமிழகம், கர்நாடகா, ஆந்திர மாநிலங்களில் வறட்சிக்கு ஆக்கிரமிப்புகளே காரணம்,'' என, ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த, தண்ணீர் மனிதர் ராஜேந்திரசிங் தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும், நீர் நிலைகள் புனரமைப்பது, தண்ணீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வை ராஜேந்திரசிங் மேற்கொண்டுள்ளார். கல்லல் வேப்பங்குளம் பகுதியில், கண்மாய் மற்றும் வரத்துக்கால்வாய்களை அவ்வூரை சேர்ந்த தன்னார்வலர்கள் சீரமைத்தனர்.

அதை பார்வையிட்ட அவர் கூறியதாவது:

நீர் மேலாண்மை தன்மையை மத்திய, மாநில அரசுகள் இழந்து விட்டன. மக்களே நீர் நிலைகளை பராமரிக்க வேண்டும். இதற்காக குடிமராமத்தை அமல்படுத்த வேண்டும். வட்ட, கிராம அளவில் நீர் சேமிக்கும் குழுக்கள் அமைக்க வேண்டும்.

சுதந்திரத்துக்கு முன், தமிழகம், கர்நாடகா, ஆந்திர மாநிலங்களில் வறட்சி கிடையாது. தற்போது வறட்சிக்கு காரணம் ஆக்கிரமிப்புகளே. சிவகங்கை மாவட்டத்தில், நீர் உறிஞ்சும் மரமான யூக்கலிப்டஸ் உள்ளிட்ட மரங்களை வனத்துறையே வளர்ப்பது வேதனைக்குரியது.

இவ்வாறு அவர் கூறினார்.

புதிய தலைமுறை
மலர் 9 இதழ் 38 21 ஜூன் 2018 விலை ₹ 20 சமூக விழிப்புணர்வு வார இதழ்

# கைகொடுத்தது கணினி செழித்தது கழனி

## விவசாயத்திற்கு மறுமலர்ச்சி தரும் திருச்செல்வம்

**ஊருக்கு** ஒருத்தர் இப்படி இருந்தால் போதும் நாடே சுபிட்சம் அடையும் என்று விவசாயிகளின் பாராட்டை பெற்றுக்கொண்டிருக்கிறார் வேளாண் புரட்சி செய்துவரும் திருச்செல்வம். விவசாயத்தை லாபகரமான தொழிலாக்க விவசாயிகள் தவிதவிக்கும் சூழலில் சூழலில், தகவல் தொழில்நுட்பம் மூலமாக விவசாயத்தை வெற்றிகரமான தொழிலாக்க முடியும் என்று சொல்வதுடன் அதனை தனது சொந்த கிராமத்தில் செய்து காட்டியும் இருக்கிறார் சிவகங்கையை சேர்ந்த திருச்செல்வம்.

என்ன பயிர் செய்வது, எப்போது செய்வது,என்ன உரமிடுவது, எங்கே விற்பது,எப்படி மதிப்புக்கூட்டுவது, விவசாயக்கருவிகள், விதைகள், நாற்றுகளை எங்கே வாங்குவது என்ற எந்த தகவலும் தெரியாமல் தவிப்பதால்தான் விவசாயிகள் விவசாயத்தில் தோற்பதற்கான காரணம். இந்த சிக்கல்களை தீர்ப்பதற்கான மென்பெருளை உருவாக்கி விவசாயிகளின் மேம்பாட்டுக்காக பணியாற்றி வருகிறார் திருச்செல்வம்.

''விவசாயத்தில் பல்வேறு தகவல் தொழில்நுட்பப் பணிகளை இணையம் மூலமாக செய்துவருகிறேன். அதனை எல்லா இடங்களுக்கும் கொண்டுசெல்ல முன்மாதிரியாக ஒரு கிராமத்தை எடுத்து செயல்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில்தான் சிவகங்கை மாவட்டம் வேப்பங்குளத்தை முன்மாதிரி கிராமமாக உருவாக்க களத்தில் இறங்கினேன். அந்த கிராமத்தில் உள்ள எட்டு கண்மாய்களும், வாய்க்கால்களும் தூர்ந்துபோய் கிடந்தன. நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் போர்வெல்களும் இயங்காமல் 90 சதவீதம் விவசாயம் பொய்த்துப்போய் விளைநிலங்கள் வெடித்துக் கிடந்தன.

இவற்றை மீட்டெடுக்க முதலில் ஒரு கண்மாயை எடுத்து அதற்கு தண்ணீரை கொண்டுவர முடிவு செய்தோம். இந்த கண்மாய்க்கு நீர் கொண்டுவரும் நான்கு கிலோமீட்டர் நீளமுள்ள இரண்டு வாய்க்கால்கள் முழுவதும் கருவேல மரங்கள், குப்பைகள், புதர்செடிகள் மண்டி தூர்ந்து கிடந்தன. அதனை பற்றி எங்கள் இணையத்தில் அறிவிப்பு செய்து பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடம் தூர்வாரவும், சீரமைக்கவும் நிதியுதவி கோரினோம், அவர்களும் ஆர்வத்துடன் உதவிசெய்தனர். அதன் பின்னர் மக்கள் பங்களிப்பு மற்றும் இயந்திரங்கள் உதவியுடன் தூர்வாரினோம். தூர்வாரியபோது ராஜஸ்தானின் 'தண்ணீர் மனிதர்' ராஜேந்திரசிங் வந்து பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கி பாராட்டினார்.


சீரமைக்கப்படும் கால்வாய்


திருச்செல்வம்



அனுமதி வழங்கியுள்ளதுடன், மற்ற உதவிகளும் செய்வதாக சொல்லியுள்ளார்'' என்னும் திருச்செல்வம் இத்திட்டத்தை சிவகங்கை மாவட்டம் முழுவதும் விரிவுப்படுத்தவுள்ளார்.

''விவசாயத்தில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தவேண்டும் என்ற ஐடியா எப்படி வந்தது?''

''சிவகங்கை அருகிலுள்ள ஆலம்பட்டு கிராமம்தான் என் சொந்த ஊர். முதுநிலை கணினி அறிவியல் படித்துவிட்டு மென்பொருள் நிறுவனங்களில் பணியாற்றினேன். 2000-ஆம் ஆண்டில் கணினித்துறை வளர ஆரம்பித்த நேரத்தில்தான் விவசாயம் சரிந்துகொண்டிருந்தது. ஒருநாள் 'தக்காளி விலை வீழ்ச்சியால் விவசாயிகள் சாலையில் தக்காளியை கொட்டினார்கள்' என்று நாளிதழில் வந்த செய்தி, என்னை உலுக்கியது. அந்த சம்பவம்தான் என்னை விவசாயத்தின் பக்கம் தள்ளியது.



> **பல்வேறு விவசாய விளைபொருட்களை வெளிநாடுகளுக்கு எங்கள் இணைய மையத்தின் உதவியுடன் ஏற்றுமதி செய்தோம். 8 ஆயிரம் ரூபாய்க்கு விற்ற மாதுளையை இடைத்தரகர் இல்லாமல் நேரடியாக 20 ஆயிரத்திற்கு விற்று கொடுத்தோம்**

அப்போதுதான் தேவைக்கு ஏற்ப பயிர்செய்வது, சந்தைவாய்ப்பு உள்ள பயிரை பயிரிடுவது, விதைகள், உரங்கள், கருவிகள் உள்ளிட்ட விவசாயிகளுக்கு தேவையான அத்தனை தகவல்களையும் ஒருங்கிணைத்து ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தகவல் தொழில்நுட்ப இணையதள மையத்தை ஆரம்பிக்கலாம் என்ற யோசனை தோன்றியது. இந்த யோசனையை அரசுக்கு சொல்வோம் என்று திட்ட அறிக்கை தயார் செய்து அரசுக்கு 2001-இல் அனுப்பினேன். வேளாண்துறை இயக்குனராக இருந்த பிரனேஷ் ஆர்வத்துடன் இந்த யோசனையை முன்னெடுத்தார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சோதனை அடிப்படையில் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிதித் திட்டம் நிதி அமைச்சகத்திடம் சென்றபோது துரதிர்ஷ்டவசமாக ஜெயலலிதா பதவி விலக நேரிட்டது. இயக்குனர் பிரனேஷும் இந்த துறையில் இருந்து மாறியதால் இந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

2004-இல் ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியை சந்தித்து, கடப்பா தொகுதியில் புலிவெந்துலா ஒன்றியத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் வாங்கினோம். இந்த தொகுதில் உள்ள 30 கிராமங்களின் 30 ஆயிரம் பேரின் விவசாய தகவல்கள் தொகுக்கப்பட்டன. மாதுளை, சாத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு விவசாய விளைபொருட்களை வெளிநாடுகளுக்கு எங்கள் இணைய மையத்தின் உதவியுடன் ஏற்றுமதி செய்தோம்.

8 ஆயிரம் ரூபாய்க்கு விற்ற மாதுளையை இடைத்தரகர் இல்லாமல் நேரடியாக 20 ஆயிரத்திற்கு விற்றுக் கொடுத்தோம், அதுபோல சூழலுக்கு, சந்தைக்கு ஏற்ப என்ன பயிர் செய்வது, விதைகள், உரங்கள், சந்தைவாய்ப்பு என பலவற்றை ஏற்படுத்திக்கொடுத்தோம். உதவி, ஆலோசனைகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு பயிர்முறைகளை பற்றிய வீடியோவை இணைய மையத்திலேயே காண்பித்து விளக்கமளித்தோம். இரண்டரை ஆண்டுகள் மிகச்சிறப்பாக செயல்பட்ட இந்த தகவல் இணைய மையங்களின் வளர்ச்சியை பார்த்த ஆந்திர அரசு மேலும் ஆயிரம் கிராமங்களில் இந்த சேவையை வழங்க சொன்னார்கள். இந்திய விவசாயத்தின் போக்கையே இந்த திட்டம் மாற்றும் என்று வேளாண் விஞ்ஞானிகள் மகிழ்ச்சியுடன் சொன்னார்கள். அந்த நேரத்தில் ராஜசேகரரெட்டி விமான விபத்தில் மரணமடைய... அதன் பின்னர் நடந்த அரசியல் குழப்பங்கள், தெலங்கானா பிரச்சினை என்று அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

இந்த திட்டத்தை செயல்முறைப்படுத்தினால் விவசாயிகளின் வாழ்வாதாரம், மக்களின் உணவுப் பாதுகாப்பு ஒருங்கே காக்கப்படும். அதுபோல நாட்டின் வளர்ச்சியும் ஆச்சரியப்படும் வகையில் வளரும். இதன் மூலமாக விவசாயிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் நியாயமான, கட்டுப்படியான விலையில் பொருட்களை விற்கவும், வாங்கவும் முடியும்'' நம்பிக்கையோடு சொல்கிறார் திருச்செல்வம். ■

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

தினமலர் www.dinamalar.com
www.facebook.com/Dinamalardaily

# சிவகங்கை

மதுரை பதிப்பில் அதிகம் விற்கும் நாளிதழ்

மதுரை • செவ்வாய் • ஏப்ரல் 2, 2019

**சிவகங்கை மாவட்டம்**
**இன்றைய**
**பெட்ரோல், டீசல் விலை (ரூ)**

| | |
|---|---|
| பெட்ரோல் | 76.49 |
| டீசல் | 70.63 |

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்
தூரத்திற்கேற்ப விலை மாறும்

# ஆந்திரா 'ஸ்டைலில்' கண்மாய்கள் மேம்பாடு

✔ வறட்சியிலும் குடிநீர் தரும் வேப்பங்குளம் ஊரணி ✔ சிவகங்கை வேட்பாளர்கள் கவனிப்பார்களா...





■ சிவகங்கை மாவட்டம் கல்லல் அருகே வேப்பங்குளம் கிராமத்தில் கிராம மக்களே வாணிய தம்மம் குடிநீர் ஊரணியை துார்வாரியதால் கோடையிலும் தண்ணீர் நிரம்பி குடிநீர் பிரச்னையை தீர்க்கிறது. **அடுத்த படம்:** துாரெடுப்பதற்கு முன் வற்றிய நிலையில் உள்ள ஊரணி.

''தண்ணீரை சேமித்தால் பஞ்சமும், பரிதவிப்பும் இல்லை. தண்ணீரை சேமித்தால் பெரும கிழ்ச்சி'', என்பார்கள்.

அந்த நீரின் அவசியத்தை உணர்ந்ததால் சிவகங்கை மாவட்டமே வறட்சி என அறிவித்த நிலையில் கல்லல் அருகே வேப்பங்குளம் மக்கள் பங்களிப்புடன் துார்வாரிய ஊரணி இன்றைக்கும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. நீரின் அவசியத்தை உணர்ந்த இக்கிராம மக்கள் 'நீரின்றி அமையாது உலகு' என்ற கூற்றை மெய்பித்துள்ளனர்.

## தண்ணீர் சேமிப்பில் வேப்பங்குளம்

இங்கு 32 ஏக்கரில் செட்டி, 60 ஏக்கரில் மேல, 22 ஏக்கரில் பேரிக் கண்மாய்கள், 8 ஏக்கரில் வாணியதம்மம் குடிநீர் ஊரணி உள்ளன. மழை காலங்களில் இக்கண்மாய்களில் தேங்கும் மழை நீரை வைத்து 500 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது. கிராமத்தில் நீரின் சேமிப்பு அவசியம் என்பதை உணர்ந்த, இக்கிராமத்தை சேர்ந்த சாப்ட்வேர் இன்ஜினியர்கள் ஒன்றிணைந்து வேப்பங்குளத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க, ஆந்திராவில் ஆய்வு செய்து அங்கு பின்பற்றும் நீர் ஆதார மேலாண்மை திட்டத்தை இங்கு செயல்படுத்தினர்.

கிராமத்தினர் பங்களிப்பு நிதியில் கடந்த 2018 ல் குடிநீர் ஊரணி உட்பட 4 கண்மாய்களின் வரத்து கால்வாயை துார்வாரியும்,இயந்திரம் மூலம் கண்மாய் கரையை உயர்த்தியும், 10 அடிக்கு ஆழப்படுத்தினர்.

## ரூ.1 கோடிக்கு நெல் விற்பனை

2018 மார்ச்சில் பெய்த மழை நீர் வரத்து கால்வாய் மூலம் முறையாக சென்று கண்மாய் மற்றும் குடிநீர் ஊரணியை நிரப்பியது. இக்கண்மாய் பாசன வசதி மூலம் 250 ஏக்கரில் விவசாயிகள் நெல் நடவு செய்தனர். 2019 பிப்ரவரியில் நெல் அறுவடை செய்தனர். நீர் சேமிப்பினால் ஏக்கருக்கு 2 டன் நெல் அறுவடை செய்தனர்.

இந்த நெல்லை அரசு நிதி ரூ.5.5 லட்சத்தில் கட்டிய நெற்களத்தில் பக்குவப்படுத்தி, கிலோ 8 முதல் 10 ரூபாய்க்கு விற்ற நெல், வேப்பங்குளம் கிராம விவசாயிகள் முறையாக விவசாயம் செய்து கிலோ 16 ரூபாய்க்கு விற்றனர். வேப்பங்குளம் கிராம விவசாயிகள் 2019 மார்ச்சில் ரூ.1 கோடிக்கு நெல் விற்பனை செய்தனர்.

## காவிரி சுவை மிஞ்சிய குடிநீர்

குறிப்பாக எக்காலத்திலும் இக்கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு வந்துவிடக்கூடாது என்ற நோக்கத்தில் சாப்ட்வேர் இன்ஜினியர்கள் ஆலோசனைப்படி 8 ஏக்கரில் உள்ள வாணியதம்மம் குடிநீர் ஊரணியை 10 அடி ஆழத்திற்கு ஆழப்படுத்தி, கரையை பலப்படுத்தினர். 2018 ல் பெய்த மழையின் மூலம் இந்த ஊரணி நிரம்பியது.

மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவிய போதும், இந்த ஊரணியில் இன்றைக்கும் 4 அடி ஆழத்திற்கு தண்ணீர் தேங்கியுள்ளது.

இக்கிராமம் வழியே செல்லும் காவிரி கூட்டு குடிநீர் கைகொடுக்காத போது, கிராமத்தினர் குடிநீர், சமையல் உள்ளிட்ட தேவைக்காக இன்றைக்கும் வாணியதம்மம் ஊரணியில் இருந்து குடிநீர் எடுத்து செல்கின்றனர்.

காவிரியின் சுவையை மிஞ்சும் விதத்தில் இந்த ஊரணி குடிநீர் உள்ளதென கிராமத்தினர் தெரிவிக்கின்றனர். விவசாயத்தையே நம்பியுள்ள சிவகங்கை மாவட்ட கிராமங்களில் நீர்மேலாண்மையின் அவசியத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து, அரசின் திட்டங்களை எதிர்பார்க்காமல், மக்கள் பங்களிப்போடு வேப்பங்குளம் போல் மாற்றினால், வளம் கொழிக்கும் பூமியாகும் சிவகங்கை.

## நீர் மேலாண்மைக்கு வாக்குறுதி தாருங்கள்



**ஆர்.எம்.,திருச்செல்வம் ராமு, சாப்ட்வேர் இன்ஜினியர், வேப்பங்குளம்:** எங்கள் கிராமத்தில் 5 சாப்ட்வேர் இன்ஜினியர்கள் உள்ளோம். ஆந்திராவில் நடைபெற்ற நீர்மேலாண்மை திட்டம் பற்றி அறிந்து, அத்திட்டம் போன்றே ஏன் வேப்பங்குளத்திலும் நீர்மேலாண்மையை செயல்படுத்தக்கூடாது என முடிவு செய்தோம்.

இதற்காக மக்களிடம் பங்களிப்பு நிதி பெற்று, பாசன கண்மாய், குடிநீர் ஊரணியை துார்வாரினோம். இன்றைக்கு வறட்சியிலும் வேப்பங்குளத்தின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்கிறது வாணியதம்மம் ஊரணி.

இது மட்டுமின்றி ஊரணியை சுற்றி மரங்கள் பசுஞ்சோலை போல் காட்சி அளிக்கின்றன. நெல் அறுவடையில் ஒரு சிறிய கிராம விவசாயிகள் ரூ.1 கோடி வருவாய் ஈட்டியுள்ளனர்.

தமிழகத்தில் பாசன, குடிநீர் கண்மாய்கள் அதிக எண்ணிக்கை உள்ள 2 வது மாவட்டம் சிவகங்கை.

லோக்சபா தேர்தலை முன்னிட்டு பல்வேறு கட்சியினர் வாக்குகள் சேகரிக்க கிராமங்களை நாடி வருவர்.

அவர்களிடம் தொகுதியில் உள்ள கண்மாய்களை வேப்பங்குளம் கிராமம் போன்று மேன்மைபடுத்தி தருவதாக உறுதி தர வேண்டும் என கோரிக்கை வையுங்கள்.

வெற்றி பெறும் எம்.பி.,யும் இங்கு நீர் மேலாண்மை திட்டத்தை முறைப்படி செயல்படுத்தினால், சிவகங்கை நெல் விளையும் பூமியாகும் என்பது உறுதி, என்றார்.

தேசிய தமிழ் நாளிதழ்

Date: 09-10-18



கல்லல் ஒன்றியம் வேப்பங்குளத்தில் மடை திறக்கும் நிகழ்ச்சியை விமரிசையாக கொண்டாடிய கிராமத்தினர்.

# மக்களால் நிறைந்த கண்மாய் மடை திறந்த விவசாயிகள்

**கல்லல், செப்.10–**

கல்லல் ஒன்றியம் வேப்பங்குளத்தில் 300–க்கும் மேற்பட்ட விவசாயிகள் 400 ஏக்கரில் விவசாய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். 9 கண்மாய் உள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக வரத்து கால்வாய் துார்வாராததால் நீர்வரத்தின்றி விவசாயம் குறைந்தது.

இந்நிலையில் கடந்த ஐந்து மாதத்துக்கு முன்பு சமூக ஆர்வலர் திருச்செல்வம் முயற்சியால் ஊர்மக்கள் ஒருங்கிணைந்து 4,5 லட்சம் ரூபாய் செலவழித்து வரத்து கால்வாய் மற்றும் கண்மாய்களை சீரமைத்தனர்.

கடந்த மாதம் பெய்த பருவமழையால் கண்மாய்களில் 60 சதவீதம் நிரம்பியது. மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள், நேற்று விவசாய பணிக்காக கண்மாய் மடை திறக்கும் நிகழ்ச்சியை கொண்டாடினர். பூஜை செய்து, பூத்துாவி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

மக்களின் ஆர்வத்தை புரிந்து கொண்ட மாவட்ட நிர்வாகம் வேப்பங்குளம் ஊராட்சிக்கு, குடிமராமத்து திட்டத்தில் மடை சீரமைத்தல், கண்மாய் சீரமைப்புக்காக 30 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

தினகரன்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

# தரிசு நிலம் தங்கமாக மாறிய அதிசயம்

## காரைக்குடி அருகே அசத்திய கிராமம் | கலெக்டரிடம் விருது பெற்று சாதனை

காரைக்குடி, ஆக. 19: காரைக்குடி அருகே கருவேலம் மண்டி கிடந்த கண்மாயை கிராம மக்கள் ஒருங்கிணைந்து மராமத்து செய்ததன் பயனாக, தரிசு நிலங்கள் எல்லாம் விளை நிலங்களாக மாறி பச்சை பசேலென காட்சியளிக்கின்றன.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே கல்லலில் உள்ளது வேப்பங்குளம் கிராமம். இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். 400 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. விவசாயத்திற்கென 8க்கும் மேற்பட்ட கண்மாய்கள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக பருவமழை ஏமாற்றியதால், கண்மாய்களை கருவேலமரங்கள் ஆக்கிரமித்துக்கொண்டன. இதனால் நிலத்தடி நீர்மட்டம் அதலபாதாளத்துக்கு சென்றது. விளைநிலங்கள் அனைத்தும் தரிசாக போடப்பட்டன. விவசாயிகள் பிழைப்பு தேடி வெளியூர் செல்லும் கொடுமை ஏற்பட்டது.

இந்த அவலநிலையை போக்க கிராம மக்கள் முடிவு செய்தனர். ஒருவேளை பருவமழை பெய்தால் தண்ணீரை தேக்கும் வகையில், அனைவரும் ஒன்றிணைந்து 4 கண்மாய்கள் மற்றும் 15 கிமீ வரத்து கால்வாய்களை கடந்த ஆண்டு மராமத்து செய்தனர். இவர்களின் உழைப்பு வீணாகவில்லை. சமீபத்தில் பெய்த மழையால் கண்மாய்களில் தண்ணீர் தேங்கியது. இதை வைத்து விவசாய பணிகளை மேற்கொண்டனர். இதனால் தரிசாக கிடந்த நிலங்கள் எல்லாம் பச்சை பசேலென மாறிவிட்டன. கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால் கண்மாய்கள் விறுவிறுவென நிரம்பி வருகின்றன. இதனால் ஒட்டுமொத்த கிராமமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.





காரைக்குடி அருகே கல்லல் வேப்பங்குளத்தில் மக்கள் தூர்வாரிய கண்மாயில் தண்ணீர் தேங்கியுள்ளது. அடுத்தபடம்: தரிசாக கிடந்த நிலத்தில் பசுமையாக நாற்று விளைந்துள்ளது.



நீர்நிலையை மேம்படுத்தியதற்காக சுதந்திரதின விழாவில் கலெக்டரிடம் விருதுபெற்ற விவசாயிகள்.

மக்களை ஒருங்கிணைத்து நீர் மேலாண்மையில் சிறப்பாக பணியாற்றிய கிராமத்தை சேர்ந்த திருச்செல்வம், கார்வண்ணன், நாச்சியப்பன், காளிதாஸ், கணேசன், செந்தில், மணிகண்டன், முருகதாஸ், சந்திரன் ஆகிய விவசாயிகளுக்கு சுதந்திரதின விழாவில் கலெக்டர் ஜெயகாந்தன் விருது வழங்கி பாராட்டினார்.



கிராமத்தை சேர்ந்த திருச்செல்வம் கூறுகையில்,

"இரண்டு போகம் விளைந்த பூமி. மழை இல்லாமல் தரிசாக கிடந்தது. அரசை நம்பாமல் மக்கள் இணைந்து கணமாயில் இருந்த கருவேலம் மற்றும் வரத்து கால்வாயில் இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றினோம். பல ஆண்டுகளுக்கு பிறகு வறண்டு கிடந்த வயல்கள் எல்லாம் நெல் விளையும் பூமியாக மாறியுள்ளது. வேளாண் அதிகாரிகள் ஆலோசனையில் ஒற்றை நெல் சாகுபடியில் 250 ஏக்கரில் நெல் விளைச்சல் செய்யப்பட்டது. நீர்நிலை மேலாண்மையால் எங்கள் கிராமத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பு நெல் உற்பத்தி கிடைத்துள்ளது. வரும் ஆண்டுகளில் இன்னும் அதிகரிக்கும்" என்றார்.



கார்வண்ணன் கூறுகையில்,

"மக்கள் இணைந்து கண்மாய்களை தூர்வாரியதால் தண்ணீர் நிறைந்துள்ளது. பணியை பாராட்டி கலெக்டர் விருது கொடுத்துள்ளார். மக்களின் ஒற்றுமையாலேயே சாதிக்க முடிந்தது" என்றார்.



சிவக்குமார் கூறுகையில்,

"தண்ணீரும் கிடைத்துள்ளது. பசுமையும் கிடைத்துள்ளது. இதுபோல அனைத்து கிராமங்களும் செய்ய வேண்டும். நீர்நிலைகளை தூர்வாரினால் அதற்கான நல்ல பலன்களை நாம் பெற முடியும் என்பதை நாங்கள் உணர்த்தியுள்ளோம்" என்றார்.

உள்ளாட்சித் தேர்தலை

நியூட்ரினோ திட்டத்திற்கு எதிராக பிரசாரம் செய்ய வந்த

இந்து தமிழ் திசை

சார்பில் போராட்டம் நடத்தவும் தயங்க மாட்டோம்.
- கனிமொழி, திமுக எம்.பி.

அதாவது வெறும் 7%.

# நவீனத் தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயிகளுக்கு உதவ முடியும்!

கேள்விகள் 5 பதில்கள்

கே.கே.மகேஷ்

எம்சிஏ பட்டதாரியான எஸ். திருச்செல்வம், விவசாயிகளின் பிரச்சினைக்குத் தகவல் தொழில்நுட்பம் வாயிலாகத் தீர்வு காண முயல்பவர். ஆந்திரத்தில் செயல்படுத்தப் பட்ட இவரது திட்டம், தமிழகத்தில் அரசின் ஒப்புதலுக்காகக் காத்துக் கிடக்கிறது. விவசாயிகளின் பிரச்சினை உச்சத்தில் இருக்கும் சூழலில் அவருடன் ஒரு பேட்டி...

**1 விவசாயிகளின் பிரச்சினை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பயிரிடத் திட்டமிடுவதில் தொடங்கி, மழை பொய்த்தல், வேலையாட்கள் பற்றாக் குறை, இடுபொருட்கள் தட்டுப்பாடு, விளை பொருட்களின் விலைச் சரிவு வரை நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. ஒரு இட்லிக் கடை போடுவதற்குக் கடன் கேட்டாலே ஆயிரம் கேள்விகள் கேட்கிறார்கள் வங்கி மேலாளர்கள். விவசாயிகளின் வருமானத் துக்கு எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையில், அவர்களுக்குக் கடன் பரிந்துரைப்பது நிரந்தரத் தீர்வாகாது .

**2 இதற்கு நீங்கள் முன்வைக்கிற தீர்வு?**

ஒவ்வொரு கிராமத்திலும் அரசு உதவி யோடு தகவல் மற்றும் செயல் மேலாண் மை மையம். அங்கே ஒரு கணினி, 'பிரிண்டர்', இணைய இணைப்பு, படித்த உள்ளூர் இளைஞர்கள் இருவர் இருந்தால் போதும். உள்ளூர், வெளியூர் விவசாயிகள், வேளாண் அதிகாரிகள், வியாபாரிகள், வேளாண் விஞ்ஞானிகள் ஆகியோருக்கிடையேயான பாலமாக அது செயல்படும். இந்தப் பயிர், இந்த வாரத்தில் அறுவடைக்கு வரும் என்று நாம் முன்கூட்டியே வியாபாரிகளுக்குத் தெரிவித்து, அலைச்சலின்றி நல்ல விலைக்கு விற்க முடியும்.

**3 நெல் உள்ளிட்ட விளைபொருட்களின் விலையை தமிழ்நாடு வேளாண் பல்கலை இணையதளத்திலேயே பார்த்துவிடலாமே ?**

வெறும் தகவல் மட்டும் தருவது வேறு, தொடர்பை ஏற்படுத்தித் தருவது வேறு. உதார ணமாக, ஆந்திரத்தில் கிராமம் கிராமமாகச் சென்ற வேளாண் அதிகாரிகள், 'துவரையில் இதுவரை பயிரிட்ட, எல்ஆர்ஜி– 30 ரகத்துக்குப் பதில் எல்ஆர்ஜி – 41 பயிரி டுங்கள்.. விளைச்சல் அதிகரிக்கும்' என்று தகவல் தந்தார்கள். ஆனால், 'நாங்கள் நிலக்கடலைதான் சாகுபடி செய்கிறோம். ஊடு பயிராகத் துவரை போட 250 கிராம் விதை போதும். அதை வாங்குவதற்கு யாராவது 75 கி.மீ. தள்ளியுள்ள கடப் பாவுக்குப் போவார்களா ?' என்று யாரும் அதைப் பயிரிட முன்வரவில்லை. தகவல் மற்றும் செயல் மேலாண்மை மையம் இருந் தால், மொத்தமாக இவ்வளவு விதை என்று வரவழைத்து, விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்க முடியும். இதேபோல விளை பொருட்களையும் மொத்தமாகச் சேகரித்து, வியாபாரிகளை ஊருக்கே வரவழைத்து விற்பனை செய்ய முடியும்.

**4 களத்தில் இதைப் பரிசோதித்திருக்கிறீர்களா?**

ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி, தன்னுடைய சொந்த ஊராட்சி ஒன்றியத்தில் (கடப்பா மாவட்டம், புலிவேந்திலா ஒன்றியம்) 2004 முதல் 2006 வரை இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தரவிட்டார்.

இது அவருக்குத் தனிப்பட்ட முறையில் நல்ல பெயரைப் பெற்றுத் தந்தது. அடுத்ததாக, கடப்பா மாவட்டம் முழுவதும் 2007 முதல் 2010 வரை செயல்படுத்த ரூ.64 கோடியில் திட்ட ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆனால், எதிர்பாராத அவரது மறைவு, ஆட்சி மாற்றம், தெலங்கானா போராட்டம் போன்றவற்றால் இத்திட்டத்தைத் தொடர முடியாமல் போய்விட்டது.

**5 இத்திட்டத்தைத் தமிழகத்தில் செயல்படுத்த முயற்சிக்கவில்லையா?**

2000–ல் இருந்தே வேளாண் துறைச் செயலாளர்களின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டுசென்றும், திட்டத்துக்கு இதுவரையில் அனுமதி கிடைக்கவில்லை. 'டிஜிட்டல் இந்தியா' திட்டத்தைத் தன் கனவுத் திட்டமாக அறிவித்திருக்கும் பிரதமருக்கும் மின்னஞ்சல், இணையதளம் வழியாகத் தகவல் அனுப்பினோம். அவை அவரது கவனத்துக்குச் சென்றதாகத் தகவல் இல்லை. அரசை மட்டுமே நம்பியிருக்க வேண்டாம் என்று, சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றியம் வேப்பங்குளம் கிராமத்தில் நாங்களே இச்சேவையை ஜூனில் தொடங்கத் திட்டமிட்டிருக்கிறோம். விவசாயிகளின் ஒத்துழைப்பை நாடியிருக்கிறோம். அந்த வெற்றியைப் பார்த்தாவது, அரசு இத்திட்டத்தை ஏற்கும் என்று நம்புகிறோம்.



எஸ்.திருச்செல்வம்

இந்து தமிழ் திசை

இந்து தமிழ் திசை

# நிலமும் வளமும்

உழவே தலை

சனி, மார்ச் 23, 2019

# வறட்சியை வென்ற கிராமம்



விளைந்த வயல்வெளியில் வேப்பங்குளம் விவசாயி நாச்சியியப்பன் (உள்படம்: முன்பு வறண்டிருந்த வயல்வெளி)



கண்மாய்களைச் சீரமைக்க ஆலோசனைக் கூட்டம்

■ மேனா.உலகநாதன் ■

பல ஆண்டுகளாக மழை போதிய அளவு இல்லாததால் நாட்டின் விவசாய உற்பத்தித் தொடர்ந்து குறைந்து வருகிறது. ஆற்றுவழிப் பாசனம் நம்பகத்தன்மையை இழந்துள்ளது. கண்மாய் வழிப் பாசனம் ஏறக்குறைய கைவிடப்பட்டுவிட்டது. இதுதான் பல கிராமங்களின் நிலை. சிவகங்கை மாவட்டம், கல்லல் ஒன்றியத்துக்கு உட்பட்ட வேப்பங்குளம் கிராமமும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இரண்டு போகம் விளைந்த, வளம் நிறைந்த கிராமமாக இருந்தது வேப்பங்குளம். இப்போது விவசாயம் நிரந்தரமாக கைவிடப்பட்டுவிடுமோ என்கிற நிலையில் உள்ளது. ஆனால், இந்த நிலையை அந்தக் கிராம மக்கள் ஒன்றுசேர்ந்து மாற்றியிருக்கிறார்கள். கண்மாய்களைத் தூர்வாரி சுமார் 250 ஏக்கரில் நெல் பயிரிட்டு வெற்றிகரமாக அறுவடை செய்திருக்கிறார்கள் அந்தக் கிராம மக்கள்.

மழை குறைவு என்று குறைபட்டுக் கொள்கிறோம். ஆனால், மழை நீரைச் சரியாகச் சேகரித்து வைத்துக்கொள்வதில்லை. மழை நீரைச் சேகரித்துப் பயன்படுத்த ஏற்கெனவே அங்கு கண்மாய்கள் இருந்தன. ஆனால், பராமரிப்பு இல்லாத காரணத்தால் அந்தக் கண்மாய்களில் நீர்வரத்து இல்லாதிருந்தது. இந்நிலையில் நான்கு பெரிய கண்மாய்களைச் சீரமைப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. முதலில் திட்ட அறிக்கையைத் தயார் செய்தனர். அதற்குத் தேவைப்படும் ரூ. 5 லட்ச ரூபாயை ஊர் மக்களிடமும் நண்பர்களிடமும் பெற்று நான்கு மாதக் காலத்திற்குள் கண்மாய்கள் சிறப்பாகச் சீரமைக்கப்பட்டன.

கண்மாய்கள் சீரமைக்கப்பட்ட செய்தி கேள்விப்பட்டு, அதை நேரில் பார்வையிட வேப்பங்குளம் கிராமத்துக்கு வந்த இந்தியாவின் தண்ணீர் மனிதர் ராஜேந்திர சிங், கிராம மக்களை வெகுவாகப் பாராட்டிச் சென்றார்.

சிவகங்கை மாவட்டத்தில் மழையளவு மிகக் குறைவு. இருந்தபோதிலும், பெய்த குறைந்த அளவு மழையால் கண்மாய்கள் முக்கால் பாகம் நிரம்பின. கிராமமே தாங்கள் செய்த பணியின் பலனை உணர்ந்தனர்.

அடுத்த கட்டமாக, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் சார்ந்த 'விவசாய செயல் மேலாண்மை மையம்' அமைத்து அதன் மூலம் டிஜிட்டல் கிராமங்களுக்கு முன்னுதாரணமாக மாறும் பணியில் தீவிரமாக இருக்கிறது வேப்பங்குளம் கிராமம். விளைபொருள்களின் விலை வீழ்ச்சி/ விலை அதிகரிப்பைக் கட்டுக்குள் வைக்கத் தேவைப்படும் 'பயிர்கள் பயிரிடப்பட்டிருக்கும் நடப்பாண்டைய பரப்பளவு புள்ளிவிபரம்' (Live Crop Variety Production Data), பயிர்க்கடன், பயிர்க் காப்பீட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் போன்ற அத்தியாவசியமான அம்சங்களை இந்த முறை உள்ளடக்கியிருக்கிறது.

நம்பிக்கையின்மையால் விதைப்பு மூலம் நெல் பயிரிடும் முறைக்கு மாறியிருந்த விவசாயிகள் பலர், நாற்று பாவி விவசாயம் செய்யத் தொடங்கினர்.

பல வருடங்களுக்குப் பிறகு மடைகள் திறந்து விவசாயம் செய்யப்பட்டது. கண்மாய்களில் நிறைந்திருந்த நீரால் நிலத்தடி நீர் உயர்ந்து ஆழ்துளைக் கிணறுகள் முழுத்திறனுடன் செயல்பட்டன.

விவசாய வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்பட்ட தொடர் விவசாயக் கூட்டங்கள் துல்லிய வேளாண்மைக்கான அவசியத்தை மக்களுக்கு உணர்த்தின. பலர் திருந்திய நெல்சாகுபடி முறையைப் பின்பற்ற வழிசெய்தது. பூச்சி தாக்குதல், ஊட்டச்சத்து குறைவு போன்ற பிரச்சினைகளுக்கு அரசு, விவசாய வல்லுநர்கள் மூலமாகத் தீர்வு காணப்பட்டது. சிறந்த பயிர் மேலாண்மை பின்பற்றப்பட்டது.

சிவகங்கை மாவட்டத்தில் பெரும்பாலான கிராமங்களில் விவசாயம் பொய்த்துப்போயிருக்கும் நிலையில், வேப்பங்குளம் கிராமம் வெற்றிகரமாக விவசாயத்தைச் செய்திருக்கிறது.

ஐந்து லட்ச ரூபாயில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் இன்று வேப்பங்குளம் கிராமம் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான நெல் உற்பத்தி (கிலோ 17 ரூபாய் என்கிற கணக்கில்) செய்த கிராமமாக மாறியிருக்கிறது. இந்த வெற்றி, பயிரிடப்படாத மேலும் 250 ஏக்கர் வரும் காலங்களில் பயிரிடப்பட வழிவகுக்கும். பிற பயிர்களான எலுமிச்சை, நார்த்தை, புளி போன்ற விளைபொருள்களைச் சிறப்பாகச் சந்தைப்படுத்துதல் மூலம் மூன்று கோடி ரூபாய் உற்பத்தித் திறன் கொண்ட கிராமமாக விரைவில் மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களின் முயற்சியைப் பார்த்த மாவட்ட நிர்வாகம் கண்மாய்களின் மடைகளை மாற்றித் தருதல், நெற்களம் அமைத்துத் தருதல், ஆயிரம் மரக் கன்றுகளை நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் உருவாக்குதல் ஆகியவற்றுக்கு உறுதி அளித்துள்ளது.

வேப்பங்குளம் கிராம மக்கள் இந்திய விவசாயிகளுக்கு முன்வைக்கும் வேண்டுகோள் என்னவென்றால், கிராமப்புற மறுசீரமைப்பு சாத்தியமே. எனினும்கூட, கிராமப்புறங்கள் மிக வேகமாகத் தங்கள் ஆற்றலை இழந்து வருகின்றன. வெகுவிரைவில் நாம் செயல்படவில்லையென்றால் அவை நிரந்தரமாகச் செயல் இழந்துவிடும் ஆபத்து உள்ளது. கிராம நீர்நிலைகளைச் சிறப்பாகச் செப்பனிட்டுப் பராமரிப்பது கிராம மறு சீரமைப்புக்கு அடிப்படை. நமது காலத்துக்கும், எதிர்காலச் சந்ததியினருக்கும் தேவைப்படும் நீர், விவசாய மேலாண்மையைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து செயல்படுத்த வேண்டியது அவசியமானது.

தொடர்புக்கு: menaulaganathan@gmail.com

பசுமை விகடன்
10.03.24 மண்ணின் வளமே மக்கள் வளம்



சாதனை

ஆர்.குமரேசன் படங்கள்: எஸ்.சாய்தர்மராஜ்









# வறட்சியை வென்ற கிராமம்... தரிசு நிலங்களில் நெல் சாகுபடி...

வறட்சி... விவசாயத்தின் மிகப்பெரும் பிரச்னை. நிலத்தடி நீர்மட்டம் பாதாளத்துக்குப் போய்விட்டது. மூன்று போகம் விளைந்த நிலங்களில் ஒரு போகம் சாகுபடி செய்வதே கேள்விக்குறியாகிவிட்டது. தண்ணீர் இல்லாமல் தரிசாகிக்கிடக்கின்றன, விளைநிலங்கள். வறட்சிக்குக் காரணம் கேட்டால், 'மழை பெய்யவில்லை' என்பதுதான் பொதுவான பதில். மழைப்பொழிவு சராசரி அளவைவிடச் சற்றுக் குறைந்திருப்பது உண்மைதான்

பசுமை விகடன்
10.03.24 மண்ணின் வளமே மக்கள் வளம்



● திருச்செல்வம்...





● சீரமைக்கப்படும் கால்வாய்...

என்றாலும், நம்மைவிடக் குறைவான மழை கிடைத்த சில மாநிலங்களில் விவசாயம் பொய்க்கவில்லை. அதற்குக் காரணம், அங்கே முன்னெடுக்கும் நீர் மேலாண்மை முறையும், நீர்நிலைகளைப் பராமரிக்கும் முறைகளும்தான்.

பண்டைய தமிழர்களின் நீர் மேலாண்மையைப் பார்த்து உலகின் பல நாடுகளும் இன்று வரை வியந்து கொண்டிருக்கின்றன. கிராமந்தோறும் குளங்கள். ஒரு குளம் நிறைந்த பிறகு அடுத்தக் குளம் நிறையுமாறு அடுக்கடுக்காகக் குளங்கள். தண்ணீர் செல்லும் வாய்க்கால்கள் என மிகவும் துல்லியமாகச் செயல்படுத்தப்பட்ட நீர் சேகரிப்பு முறை, நம் முன்னோர் நமக்கு வைத்துவிட்டுப் போன சொத்து. அந்த நீர்நிலைகளை முறையாகப் பராமரிக்காமலும் பயன்படுத்தாமலும் போனதன் விளைவுதான், தஞ்சைத் தரணியிலும் தரிசு நிலங்கள் பெருகுவதற்குக் காரணம். கிராமங்களில் உள்ள குளங்கள் மற்றும் வாய்க்கால்களைச் சீரமைத்தால் விவசாயம் செழிக்கும் என்பதை நடைமுறையில் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள், சிவகங்கை மாவட்டம், வேப்பங்குளம் கிராம மக்கள். இவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்கள், தமிழகத் தகவல் தொழில்நுட்பக் குழு நண்பர்கள்.

சிவகங்கை மாவட்டம், கல்லல் ஒன்றியத்தில் இருக்கிறது, வேப்பங்குளம் ஊராட்சி. ஒரு காலத்தில் மூன்று போகம் விளைந்த பகுதி. கடந்த சில ஆண்டுகளாக ஒரு போகமே விளைகிறது. பல விவசாயிகள் விவசாயத்திலிருந்து ஒதுங்கிவிட்டனர். இக்கிராமத்தில், பல ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த போகத்தில் 250 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி நடந்திருக்கிறது. நெல் விளைந்த வயல்களில் பெரும்பாலானவை, சீமைக்கருவேல் மண்டிக் கிடந்த நிலங்கள். இது எப்படிச் சாத்தியமானது என்று, தகவல் தொழில்நுட்பக் குழுவைச் சேர்ந்த திருச்செல்வம் இங்கே சொல்கிறார்.

**"இன்றைய சூழ்நிலையில், சந்தைகள் நவீன மயமாக்கப்பட்டு இருக்கின்றன. டிஜிட்டல் முறையில் வியாபாரம் நடக்கிறது. ஆனால், இதுபற்றிய விவரங்கள் பெரும்பாலான விவசாயிகளுக்குத் தெரிவதில்லை."**

"நமது நாட்டில் 70 சதவிகிதத்துக்கும் மேல் சிறு குறு விவசாயிகள்தான் இருக்கிறார்கள். 50 சதவிகிதத்துக்கும் மேல் மழையை நம்பி விவசாயம் செய்யும் விவசாயிகள் இருக்கிறார்கள். இன்றைய சூழ்நிலையில், சந்தைகள் நவீனமயமாக்கப்பட்டு இருக்கின்றன. டிஜிட்டல் முறையில் வியாபாரம் நடக்கிறது. ஆனால், இதுபற்றிய விவரங்கள் பெரும்பாலான விவசாயிகளுக்குத் தெரிவதில்லை. 'மழை பெய்தால் விதைக்கிறோம், விளைந்தால் அறுவடை செய்கிறோம்' என்ற மனநிலையில்தான் விவசாயிகள் இருக்கிறார்கள். ஒரு விவசாயி, தக்காளிச் சாகுபடி செய்தால்,





● சீரமைக்கப்பட்ட கண்மாய்...



● மக்கள் பங்கேற்புடன் கால்வாய் சரிசெய்யும் பணி......

கிராமத்தில் உள்ள அத்தனை விவசாயிகளும் தக்காளிச் சாகுபடி செய்கிறார்கள். இதனால், சந்தையில் விலை கிடைப்பதில்லை. எனவே நாம் பயிர் செய்யும் காலத்தின் சூழ்நிலை, அவை அறுவடையாகும் நேரத்தில் சந்தையின் விலை நிலவரம், பயிர் செய்யும்போது தேவையான பயிர் மேலாண்மை, ஆலோசனை போன்றவை விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. இதனால்தான் விவசாயம் நஷ்டமான தொழிலாகவே இருக்கிறது.

நான் முன்பு ஆந்திர மாநிலத்திலிருந்தேன். விவசாயிகளின் இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் என்னைப் போன்ற தகவல் தொழில்நுட்பத் துறையில் உள்ள நண்பர்கள் இணைந்து 'தகவல் தொழில்நுட்பக் குழு' ஒன்றை அமைத்தோம். அக்குழுவின் மூலம் விவசாய மேலாண்மை நிலையங்கள் அமைக்கும் திட்டத்தை உருவாக்கினோம்.

அப்போதைய ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியைச் சந்தித்து, 'ஒவ்வொரு கிராமங்களிலும் விவசாயிகளுக்கான தகவல் தொழில்நுட்ப மையம் ஒன்றை அமைக்க வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும், அந்த மையத்தின் மூலம் வழங்கலாம்' என்ற செயல் திட்டத்தைச் சொன்னோம். அதில் உள்ள நன்மைகளைப் புரிந்துகொண்டவர், கடப்பா மாவட்டத்தில் புலிவேந்துலா ஒன்றியத்தில் 30 கிராமங்களில் இந்த மையங்களை அமைத்துக் கொடுத்தார். அந்தப் பகுதியில் வாழை, சாத்துக்குடி, கொய்யா போன்ற பயிர்கள் அதிகம். அந்தப் பகுதியில் விளையும் பழங்கள் ருசியானவை. விவசாய மேலாண்மை மையங்கள் தொடங்கப்பட்ட பிறகு சிங்கப்பூரில் இருக்கும் ஒரு நிறுவனத்துடன் பேசி, விவசாயிகள் நேரடியாக ஏற்றுமதி செய்யும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தோம்.

அதுவரை ஒரு கிலோ சாத்துக்குடி 8 ரூபாய்க்கு விற்பனை ஆனது. இந்த ஏற்றுமதி வாய்ப்பு மூலமாக ஒரு கிலோ 20 ரூபாய்க்கு விற்பனையானது. கிட்டத்தட்ட 100 சதவிகிதத்துக்கு மேல் விவசாயிகளுக்கு லாபம். தொடர்ந்து பெங்களூரு, சென்னை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலிருந்த பெரும் பழக்கடைகளிலும் விற்பனை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தோம். இடைத்தரகர்கள் ஒழிக்கப்பட்டதால் விவசாயிகளுக்கு 40 சதவிகிதத்துக்கும் மேலான லாபம் கிடைத்தது. இரண்டரை ஆண்டுகள் கடப்பா மாவட்டத்தில் எங்கள்

“மக்கள் பங்கேற்புடன் ஐந்து லட்சம் ரூபாய் செலவில் நான்கு குளங்களையும், பதினைந்து கிலோமீட்டர் தூரமுள்ள ஏழு கால்வாய்களையும் சரி செய்தோம். அந்தப் பணி முடிந்த நிலையில் மழை பெய்தது. குளங்கள் முக்கால்வாசி நிறைந்தன. விவசாயிகள் உற்சாகமானார்கள்.”



ஆலோசனை கூட்டம்...

பணிகள் நடைபெற்றன. ராஜசேகர ரெட்டி விபத்தில் இறந்தவுடன் அதற்குப் பிறகு வந்த அரசு, இந்தப் பணிகளுக்கு உதவி செய்யாத காரணத்தால் அது நிறுத்தப்பட்டது” என்ற திருச்செல்வம் வேப்பங்குளம் கிராமத்தில் செய்த பணிகளைச் சொல்ல ஆரம்பித்தார்.

“அடுத்து நமது மாநில விவசாயிகளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தோம். அதற்காகத் தமிழக அரசிடம் எங்கள் திட்டத்தைக் கொண்டு சேர்க்கப் பல முயற்சிகள் செய்தோம். ஆனால், தமிழகத்தில் அது சாத்தியப்படவில்லை. அதனால், எனது சொந்த ஊரான வேப்பங்குளத்தில் மக்கள் பங்கேற்புடன் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று முடிவு செய்தோம்.

எங்கள் ஊரில் நான்கு குளங்கள் இருக்கின்றன. இதோடு மணிமுத்தாறு ஆறும் இருக்கிறது. குளங்களும் வாய்க்கால்களும் பராமரிப்பு இல்லாமல் சிதைந்துபோய்க் கிடந்தன. இவற்றைச் சரிசெய்தால் நாம் மீண்டும் விவசாயத்தைச் சிறப்பாகச் செய்யலாம் என்பதை மக்களிடம் எடுத்துச் சொன்னோம். ஊர் மக்களை ஒருங்கிணைத்துக் கூட்டம் போட்டோம். மக்களும் ஆர்வமுடன் கலந்துகொண்டார்கள். அதன் முடிவில் மக்கள்






சீரமைக்கப்படும் கால்வாய்...

பங்கேற்புடன் ஐந்து லட்சம் ரூபாய் செலவில் நான்கு குளங்களையும், பதினைந்து கிலோமீட்டர் தூரமுள்ள ஏழு கால்வாய்களையும் சரி செய்தோம். அந்தப் பணி முடிந்த நிலையில் மழை பெய்தது. குளங்கள் முக்கால்வாசி நிறைந்தன. விவசாயிகள் உற்சாகமானார்கள். சீமைக் கருவேல் முள் மண்டிக்கிடந்த நிலங்களைச் சுத்தப்படுத்தி உழவு செய்தார்கள். ஆழ்துளைக் கிணறுகளில் நீராதாரம் அதிகரித்தது. பலகாலமாகத் திறக்கப்படாத மடைகள் திறக்கப்பட்டன. 250 ஏக்கர் நிலத்திலும் நெல் சாகுபடி செய்யப்பட்டது. சில விவசாயிகள் ஒற்றை நாற்று நடவு முறையில் சாகுபடி செய்தார்கள். தொடர்ந்து விவசாய ஆலோசகர்கள், வேளாண் அதிகாரிகளைக் கொண்டு பயிர் பாதுகாப்பு, பூச்சி மற்றும் நோய்களுக்கான தீர்வுகள் குறித்து ஆலோசனைகள் கொடுக்கப்பட்டன.

ஒருங்கிணைந்த மேலாண்மையின் கீழ் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் அறுவடை செய்தபோது, ஒரு ஏக்கருக்கு ஒன்றரை முதல் இரண்டு டன் வரை மகசூல் கிடைத்தது. விளைச்சல் கிடைத்தும் விலை கிடைக்கவில்லை. ஒரு கிலோ நெல் 16 ரூபாய்க்குத்தான் விற்பனையானது. எங்கள் கிராம மக்களின் முயற்சியைப் பார்த்து, மாவட்ட நிர்வாகம் உதவிகள் செய்ய முன்வந்தது. நெல்லை அவித்து, அரைத்து, அரிசியாக விற்றால் அதிக விலைக்கு விற்கலாம் என முடிவு செய்தோம். ஆனால், நெல்லை வேக வைக்கும் வசதி அனைத்து வீடுகளிலும் இல்லை. அதனால், மாவட்ட நிர்வாகத்திடம் நெற்களம் அமைத்துத் தரக் கேட்டோம். மாவட்ட கலெக்டர் உடனடியாக ஏற்பாடு செய்து கொடுத்தார். தற்போது களம் அமைக்கும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது. அடுத்த அறுவடையின்போது, இங்கு வேக வைத்து, அருகில் உள்ள ரைஸ்மில்லில் அரைத்து அரிசியாக விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளோம். அதன் மூலம் வருமானம் அதிகமாகும்” என்ற திருச்செல்வம் நிறைவாக,

“ஒவ்வொரு கிராமத்திலும் மக்களே தங்கள் நீராதாரங்களைச் சரிசெய்து விவசாயம் செய்தால் சிறப்பாக விளைவிக்க முடியும். அந்தந்த பகுதிக்கு ஏற்பப் பயிர்களை மாற்றிக்கொள்ளலாம். விவசாய மேலாண்மை மையங்கள், அனைத்து ஊராட்சிகளிலும் உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலமாக, விவசாயிகளுக்குத் தேவையான தகவல்களை அளிக்க முடியும். என்னென்ன பொருள், எவ்வளவு தேவை என்பதைக் கணக்கிட்டு அதற்கேற்ப சாகுபடி செய்யுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்த முடியும்.

விவசாயிகளுக்குத் தங்கள் விளைபொருளின் மதிப்பைத் தெரிந்துகொள்ள வழிகாட்ட முடியும். அதற்கான செயல் திட்டங்கள் எங்களிடம் இருக்கின்றன. அவற்றை அரசுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்” என்றார் உறுதியான குரலில். கிராமங்களில் விவசாய மேலாண் மையங்களை அமைக்க அரசு ஏற்பாடு செய்தால், விவசாயிகளுக்குப் பல வகைகளில் நன்மைகள் கிடைக்கும்.

→ தொடர்புக்கு,
திருச்செல்வம்,
செல்போன்: 98403 74266

### “ஊர் மக்கள் எல்லாம் ஒன்னு சேர்ந்தோம்!”



**வே**ப்பங்குளம் பகுதி விவசாயி காளிதாஸிடம் பேசினோம். “இது நல்லா விளைகிற பூமி, ஒரு காலத்துல எலுமிச்சைச் சாகுபடிக்குப் பேர்போன ஊர். தண்ணியில்லாம எல்லாம் போச்சு. இந்த நேரத்துலதான் ஊர் மக்களை ஒண்ணு சேர்த்து, கண்மாயைச் சரிசெய்யலாம்னு சொன்னாங்க. எல்லோரும் முடிஞ்ச அளவுக்குக் காசு போட்டோம். வெளியே இருந்தும் சிலர் காசு கொடுத்தாங்க. அந்தப் பணத்தை வெச்சு, கண்மாயைச் சரி பண்ணினோம். மழை பெய்ஞ்சதும் கண்மாய்க்குத் தண்ணி வந்துச்சு.

போன தடவை மழையில்லாம சீமைக்கருவேல் காடா இருந்த நிலத்தைச் சுத்தமாக்கி நெல் விதைச்சேன். ரொம்ப வருஷத்துக்குப் பிறகு நெல் விதைச்சது சந்தோசமா இருந்துச்சு. இப்ப கண்மாயில தண்ணியில்லை. ஆனா, வர்ற மழைக்காலத்துல நிறைஞ்சுடும். இந்தத் தடவை விவசாயத்தை விட்டுட்டுப் போன பல பேரு திரும்பவும் விவசாயத்துக்கு வரப்போறாங்க” என்றார். இவரது கருத்துகளை மற்ற விவசாயிகளும் ஆமோதித்தனர்.

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்



தினமலர்
கோயம்புத்தூர் | வெள்ளி | 10.4.202

சொல்கிறார்கள்

## இளைஞர்களால் விவசாயத்தில் புதுமை!

சிவகங்கை மாவட்டம், கல்லல் அருகே, கிராமப் புற மக்களை இணைத்து, விவசாயத்தில் புதுமை செய்துள்ள திருச் செல்வம்: எங்கள் பகுதி யில், 500 ஏக்கர் நிலம் இருந்தும், தண்ணீர் இல்லாததால், 40 ஏக்க ரில் தான் விவசாயம் நடந்தது. நீர்வரத்து கால்வாய்கள் தூர்ந்து

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

### விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்முதல்

# 'வேப்பங்குளம் பிராண்ட்' பெயரில் அரிசி தயார்



வேப்பங்குளத்தில் விவசாயிகளிடம் நேரடியாக வாங்கி வைத்துள்ள நெல் மூடைகள்.

**சிவகங்கை, பிப். 20**
சிவகங்கை மாவட்டம், கல்லல் அருகே வேப்பங்குளத்தில் அறுவடைக்கு பின் வியாபாரிகளிடம் ஏமாந்து அடிமாட்டு விலைக்கு நெல்லை விற்காமல், மார்க்கெட்டிங் துறையிலும் கால்பதிக்கும் நோக்கில் வேப்பங்குளம் பிராண்ட்' என்ற பெயரில் சமூகவலைதளம் மூலம் அரிசி விற்பனை செய்யும் திட்டத்தை துவக்கியுள்ளனர்.

வேப்பங்குளத்தில் சந்தனம், பிடாரி உட்பட 7 கண்மாய் பாசன வசதி மூலம் 300 ஏக்கரில் விவசாயிகள் நெல் நடவு செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு குடிமராமத்து பணிக்கு பின் நல்ல மழை பெய்து கண்மாய் நிரம்பியதால் விவசாயிகள் ஆர்வமுடன் டீலக்ஸ், ஜெ.சி.எல்., ஆர்.என்.ஆர்., அட்சயா, ஐ.ஆர்., 20 ரக நெல்லை நடவு செய்து, தை பிறப்பிற்கு பின் அறுவடை செய்து வருகின்றனர். அறுவடை செய்த நெல்லை விற்க அரசு கொள்முதல் நிலையம் அமைக்கவில்லை. இதனால், வியாபாரிகள் அடிமாட்டு விலைக்கு வாங்க முற்பட்டனர். ஆனால், கிராம இளைஞர்கள், விவசாயிகள் ஒன்றிணைந்து வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு நெல்லை வழங்காமல், வேப்பங்குளம் பிராண்ட்' என்ற பெயரில் அரிசி விற்பனை செய்வதென திட்டமிட்டனர்.

இதற்காக இளைஞர் குழுவினர் நெல் அறுவடை நடக்கும் விவசாயிகளிடமே நேரடியாக சென்று மூடைக்கு (62 கிலோ) ரூ.ஆயிரத்து 100 விலை கொடுத்து வாங்கினர். குறிப்பாக, இயற்கை விவசாய முறையை பின்பற்றி நெல்லுக்கு பஞ்சகாவ்யத்தை உரமாக போட்டு வளர்த்தவர்களிடமே 300 மூடைகள் வரை கொள்முதல் செய்துள்ளனர். அரிசி ஆலையில் கொடுத்து பட்டை தீட்டாத அரிசியாக தயாரித்து, வேப்பங்குளம் பிராண்ட்' என்ற பெயரில் மூடைகளாக தயாரித்து விற்பனை செய்து, விவசாயிகளுக்கு, இடைத்தரகர்களின்றி, லாபம் பெற்றுத்தரும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இது குறித்து சமூக வலைதளங்களில் பதிவு செய்து, வியாபாரிகளிடம் நேரடியாக ஆர்டரும் பெற்றுள்ளனர். கிராம இளைஞர்களின் உற்பத்தி, மார்க்கெட்டிங் திட்டங்களுக்கு கிராம மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இளைஞர்களின் இந்த முயற்சி குறித்து அறிந்த சிவகங்கை கலெக்டர் ஜெயகாந்தன், நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் முதன் முறையாக வேப்பங்குளத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை துவக்கி வைத்து, விவசாயிகளிடம் இடைத்தரகர்கள் 'தலையீடின்றி நெல் கொள்முதல் செய்து வருகின்றனர்.



திருச்செல்வம்



சந்திரன்

### வேப்பங்குளத்தில் அரிசி மார்க்கெட்

ஆர்.எம்.திருச்செல்வம், சாப்ட்வேர் இன்ஜி., வேப்பங்குளம்: கடந்த ஆண்டு, ஆந்திராவில் செயல்படுத்தியது போன்றே வேப்பங்குளத்திலும் நீர்மேலாண்மை திட்டம் மூலம் விவசாயம் செய்ய வைத்தோம்.

அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு வியாபாரிகள் தலையீடின்றி விளையும் இடத்திலேயே மார்க்கெட்டிங் செய்யும் புதிய திட்டத்தை அறிமுகம் செய்துள்ளோம்.

தற்போது நெல்லை மட்டும் மார்க்கெட்டிங் செய்கிறோம். படிப்படியாக இங்கு விளையும் பயறு வகைகளும் மார்க்கெட்டிங் செய்யப்படும். இதன் மூலம் உழைக்கும் விவசாயிக்கு நேரடி வருவாய் கிடைக்கும். இக்கிராமத்தில் மட்டுமே நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் ஒரு கோடி ரூபாய்க்கு வணிகம் செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளோம், என்றார்.

### நெல்லில் நேரடி லாபம்

சி.சந்திரன், விவசாயி, சந்தனேந்தல்: கலெக்டரின் குடிமராமத்து பணி மூலம் இங்குள்ள 7 பாசன கண்மாய்களும் நிரம்பின. இதனால், விவசாயிகள் ஆர்வமுடன் நெல் நடவு செய்து, அதிகளவில் மகசூல் எடுத்துள்ளனர். மேலும் வியாபாரிகள் ஊடுருவல் இன்றி, கிராம இளைஞர்கள், நெல் தூத்துதல், ஈரம் காயவைத்தல் போன்ற இதர செலவுகளின்றி, நேரடியாக வயலுக்கு வந்து மூடைக்கு (62கிலோ) ஆயிரத்து 100 ரூபாய் கொடுத்து நெல்லை வாங்கி சென்றனர்.

இதன் மூலம் நேரடியாக லாபம் பெற்றுள்ளோம். இதையடுத்தே நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை அமைத்துள்ளது வரவேற்கதக்கது, என்றார்.

கிராம இளைஞர்களின் மார்க்கெட்டிங்' திட்டத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

### பசி போக்கும் களத்து தோசை



ஊழியர்களுக்கு குறைந்த விலைக்கு வழங்கும் 'களத்து தோசை'.

நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் மூடைகள் தூக்குவோர், நெல் தூத்தும் பெண்கள், மூடை கட்டுவோர் உட்பட அனைத்து தொழிலாளிக்கும் குறைந்த விலையில் கிராமத்து சாண்ட் விஜ்' போல் களத்து தோசை என்ற பெயரில் தோசை வழங்குகின்றனர். அரிசியுடன், பழைய கஞ்சியை சேர்த்து மாவு தயாரிப்பர். அந்த மாவில் இரண்டு தோசை சுட்டு, 'சாண்ட் விச்' போல், ஒரு தோசை மேல் வெல்லம், சுக்கு சேர்த்து அதன் மேல் மற்றொரு தோசையை வைத்து, நன்கு வேக வைத்து, சாப்பிட வழங்குவதே களத்து தோசை'. கொள்முதல் நிலையம் வரும் விவசாயிகள், ஊழியர்கள் உட்பட அனைவருக்கும் கிராமத்தினர் சார்பில் பகல் முழுவதும் நார்த்தங்காய்' சர்பத் இலவசமாக வழங்கி உபசரிப்பது தனிச்சிறப்பு.

பசுமை விகடன்
10.03.24 மண்ணின் வளமே மக்கள் வளம்





ஓவியம்: ரமணன்

# விற்பனைக்குத் தீர்வு சொல்லிய வேப்பங்குளம் பிராண்ட்!

வயலில் ஆட்கள் வேலை செய்துகொண்டிருக்க, நாற்காலியில் அமர்ந்து மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார் வாத்தியார் வெள்ளைச்சாமி. அப்போது அங்கு வந்த ஏரோட்டி ஏகாம்பரம், “என்ன வாத்தியாரே வெயில்ல குடையைப் பிடிச்சுக்கிட்டு உக்காந்திருக்கீங்க... நம்ம ஆளுங்க வேலையைச் சுத்தமாச் செய்வாங்க. நீங்க வீட்டுப் பக்கம் போய் நிழல்ல உக்காருங்க” என்றார்.

“அட வீட்டுலயே அடைஞ்சுகிடக்க முடியலைனுதான் வயலுக்கு வந்தேம்ப்பா... ஆனா, இங்கே வெயிலு இந்தப் போடு போடுது'' என்றார். “இன்னிக்கு வெயில் கொஞ்சம் அதிகம்தாம்யா... கொஞ்சம் இருங்க, நான் உங்களுக்கு இளநி வாங்கிட்டு வர்றேன்” என்று சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினார் ஏரோட்டி.

ஏகாம்பரம் அந்தப் பக்கம் போகவும், இந்தப் பக்கம் காய்கறி கண்ணம்மா வரவும் சரியாக இருந்தது. ''வாம்மா... வியாபாரத்தை முடிச்சுட்டியா... அதென்ன சுரைக்காய் மட்டும் விக்கலையாக்கும்” என்று கேட்டார் வாத்தியார். “காயெல்லாம் வித்துடுச்சு வாத்தியாரே... வர்ற வழியில அக்கா வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கேயிருந்து வீட்டுக்காக இந்தச் சுரைக்காயைப் பிடிங்கிட்டு வந்தேன்” என்றார் கண்ணம்மா. அப்போது கையில் இளநீரோடு ஏகாம்பரம் வந்து சேர, களை கட்டியது மாநாடு.

“விவசாயம் செய்யறதைவிட விளையுற பொருளை விக்குறதுக்குத்தான் படாதபாடு பட வேண்டியிருக்கு” என்றார் கண்ணம்மா. “ஆமாங்கய்யா... அது ஒண்ணுதான் நம்ம விவசாயிகளுக்குப் பெரிய பிரச்னை. அதுக்காகத்தான் அரசாங்கம் சில பொருள்களுக்குக் கொள்முதல் நிலையம் அமைச்சிருக்கு. ஆனா, அங்கேயும் இதே சிக்கல்தான். இந்த வருஷம் காவிரி டெல்டா மாவட்டங்கள்ல சம்பாப் பட்டத்துல நல்ல மழை கிடைச்சுது. விளைச்சலும் திருப்தியா இருந்தது. ஆனாலும், விவசாயிகளால அதைக் கொண்டாட முடியலை. காரணம், கொள்முதல் நிலையத்துக்குக் கொண்டு போற நெல்லை விற்பனை செய்யறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடுதாம். ‘ரொம்ப நேரம் காக்கவெக்கிறாங்க... லஞ்சம் கேக்குறாங்க’னு விவசாயிங்க புலம்புறாங்க. ‘ஏன் இப்படிப் பண்றீங்க?’னு கேள்வி கேட்டா, ‘சாக்கு இல்லை, இடம் இல்லை, ஆள் இல்லை’னு அலைக்கழிக்கிறாங்களாம் கும்பகோணத்துல இருக்குற எங்க சொந்தக்காரங்க நொந்துபோய்ச் சொன்னாங்க” என்றார் ஏகாம்பரம்.

இருவர் பேசுவதையும் கவனமாகக் கேட்டுக்கொண்ட வாத்தியார், ''மக்கள் களத்துல இறங்கினாத்தான்யா விடிவு பிறக்கும். இதேபோல விற்பனை செய்யக் கஷ்டப்படுற விவசாயிகளுக்கு உதவி செய்யறதுக்காக இளசுக களம் இறங்கியிருக்காங்க. சிவகங்கை மாவட்டம் வேப்பங்குளத்துல இந்தத் தடவை நெல் விளைச்சல் நல்லா இருந்திருக்கு. விளைஞ்சதை வியாபாரிங்க கம்மியான விலைக்குக் கேட்டிருக்காங்க. அதனால உள்ளூர் இளைஞர்கள் ஒண்ணு சேர்ந்து விவசாயிககிட்ட நெல்லைக் கொள்முதல் செஞ்சிருக்காங்க.

62 கிலோ எடையுள்ள மூட்டையை 1,100 ரூபாய்க்கு விவசாயிக வீட்டுக்கே போய் கொள்முதல் செஞ்சிருக்காங்க. அதனால விற்பனை பிரச்னை விவசாயிகளுக்கு இல்லை. அந்த நெல்லை அரிசியாக்கி, ‘வேப்பங்குளம் பிராண்ட்’னு ஊர் பேர்ல ஆன்லைன்ல விளம்பரம் போட்டு, ஆர்டரும் பிடிச்சிட்டாங்களாம். இதனால இந்தத் தடவை இடைத்தரகர்கள்கிட்ட ஏமாறாம வியாபாரிகள் சந்தோஷமாகிட்டாங்க. இதைக் கேள்விப்பட்டு, சிவகங்கை மாவட்ட கலெக்டர் ஜெயகாந்தன், அங்கே நேரடி கொள்முதல் நிலையத்தைத் தொடங்கி வெச்சிருக்காராம்” என்றார்.

“அட இது நல்லாயிருக்கே... இப்போ பல மாவட்டங்கள்ல இளசுக இது மாதிரி நல்ல காரியத்துல இறங்கியிருக்காங்க. குளம் வெட்டுறது, பனை விதை நடவு செய்யறது, மரம் நடுறதுனு சுற்றுச்சூழல் ஆர்வம் இளைஞர்கள்கிட்ட உருவாகிவர்றது நல்ல விஷயம்தான்” என்றார் ஏரோட்டி.

“வாத்தியாரே... தூத்துக்குடியில விளைஞ்சு நிற்குற வாழை, நெல் பயிர்களை அழிச்சுட்டு எரிவாயுக் குழாய்களைப் பதிக்கிறாங்கன்னு போராட்டம் பண்றாங்களாம். என்னய்யா விஷயம்...” என்றார் ஏகாம்பரம்.

“சென்னை எண்ணூர் முதல் திருவள்ளூர், பெங்களூரு, புதுச்சேரி, நாகை, மதுரை வழியா தூத்துக்குடி வரைக்கும் எரிவாயுக் குழாய் பதிக்கும் திட்டத்தை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் செஞ்சுகிட்டு இருக்கு. ராமநாதபுரம் மறவர் கரிசல்குளம் பகுதியில இருந்து, ஓ.என்.ஜி.சி எரிவாயு மற்றும் சுழற்சி திரவ இயற்கை எரிவாயுவை ஆர்.எல்.என்.ஜி குழாய்கள் மூலம் எடுத்துட்டுப் போய், தூத்துக்குடியில இருக்குற ஸ்பிக், ஸ்டெர்லைட், தாரங்கதாரா கெமிக்கல் மாதிரியான பெரிய கம்பெனிகளுக்கு விநியோகம் செய்யறதுதான் இந்தத் திட்டத்தோட முக்கிய நோக்கம்.

தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் தாமிரபரணி பாசனம் மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர்ல வாழை, நெல் விளைஞ்சு அறுவடைக்குத் தயாரா இருக்கு. அந்த நிலங்கள்லயும் இப்போ பயிர்களை அழிச்சுட்டு எரிவாயுக் குழாயை பதிக்கிறாங்களாம். அதுதான் இப்போ அங்கே இருக்கிற பிரச்னை. அதை நிறுத்தணும்னுதான் விவசாயிக போராட்டம் பண்ணிட்டு இருக்காங்க” என்றார் வாத்தியார்.

''அரசாங்கம்தான் விவசாயிகளைப் பாதுகாக்கணும். ஆனா, ஒருபக்கம் நல்லது செய்யற மாதிரியும் இருக்கு. இன்னொரு பக்கம் இடைஞ்சல் கொடுத்துக்கிட்டு இருக்கர மாதிரியும் இருக்கு'' சலிப்புடன் சொல்லிக்கொண்டே காய்கறி கிளம்ப, முடிவுக்கு வந்தது மாநாடு.



புதிய தலைமுறை
மலர் 9 இதழ் 38 21 ஜுன் 2018 விலை ₹ 20 சமூக விழிப்புணர்வு வார இதழ்

தூர்வாரி நீர் சேர்த்தோம்
நீர் பாய்ச்சி நெடுவயல்
நிறையக் கண்டோம்!
நாற்று நட்டோம், களை பறித்தோம்!
விளைந்த நெல்லை
கொள்முதல் செய்தோம்!
லாபம் கொழிக்கிறது
வாழ்வு செழிக்கிறது!

# வேப்பங்குள இளைஞர்களின் விவசாய எழுச்சி!



**விவசாயம்** செய்ய தண்ணீர் இல்லை; தண்ணீர் இருந்தால் பயிர்செய்ய காசு இல்லை; இதையும் தாண்டி உயிரைக் கொடுத்து வேளாண்மை செய்தால் விளைபொருளுக்கு விலையே இல்லை - இதுதான் பரவலாக எல்லா ஊர்களிலும் விவசாயிகளின் இன்றைய நிலைமை. இந்த சோக நிலைக்கு தங்கள் ஊரில் முடிவு கட்டி, எழுச்சி பெற்றிருக்கிறது வேப்பங்குளம் என்ற சிறிய ஊர்!

பழைய நீர்நிலைகள் எல்லாம் பாழ்பட்டு, கிட்டத்தட்ட விவசாயமே கைவிடப்பட்ட நிலத்தில் மீண்டும் நீர்நிலைகளை செப்பனிட்டு, பயிர்செய்து, பாடுபட்டு விளைவித்த நெல்லுக்கு உரிய விலையும் கொடுத்து, உழவர்களைக் காப்பாற்றி வென்று காட்டியிருக்கிறது வேப்பங்குளம். ஓர் அரசாங்கம் செய்யவேண்டிய வேலையை, தனக்குத்தானே செய்துகொண்டு தன்னெழுச்சியாக எழுந்து நிற்கிறது. தன்னெழுச்சியாய் எழுந்து நிற்கும் உழவர்களுக்கு உறுதுணையாக அரசும் கை கோர்த்துள்ளது.

### பாலைவனம் சோலைவனமாச்சு!

என்னதான் நடந்தது வேப்பங்குளத்தில்? விவரிக்கிறார் திருச்செல்வம். "எங்கள் ஊரான வேப்பங்குளம் பஞ்சாயத்தில் 500 ஏக்கர் பாசன நிலம் உள்ளது. இந்த பஞ்சாயத்தில் புதுவேப்பங்குளம், பழைய வேப்பங்குளம், தேர்வலசை, கல்குளம், சந்தனேந்தல் உள்ளிட்ட ஏழு கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் மொத்தம் 2000க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். செட்டி கண்மாய், பேரி கண்மாய், மேல கண்மாய், வாணியம் கம்மம் போன்ற எட்டு முக்கிய நீர்நிலைகள் உள்ளன. இதன் மொத்த பரப்பளவு சுமார் 120 ஏக்கர். இதற்கான வரத்து கால்வாய்கள்,



புதிய தலைமுறை
மலர் 9 இதழ் 38 21 ஜூன் 2018 விலை ₹ 20 சமூக விழிப்புணர்வு வார இதழ்



● மேல கண்மாய்



● நடவு



● உளுந்து விதைப்பு



● அறுவடை



திருச்செல்வம்

வாய்க்கால்கள் மொத்தமாக 17 கிலோமீட்டர் நீளமுடையது. இந்த நான்கு நீர்நிலைகளும், வரத்து வாய்க்கால்களும் பெருமளவு தூர்ந்துபோன நிலையில் கிடந்தன.

கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கும் மேலாக சரியான விவசாயம் இல்லாத காரணத்தால் விளைநிலங்கள் முழுவதும் சீமை கருவேலமரங்கள் முளைக்க ஆரம்பித்து, நிலத்தடி நீரும் அதளபாதாளத்திற்கு போய் குடிநீருக்கே வழியில்லாமல் போனோம். குடிக்கவும் தண்ணீர் இல்லை; விவசாயத்திற்கும் தண்ணீர் இல்லை, விவசாயிகளின் பிழைப்பிற்கும் வழியில்லை. இந்நிலையில், வேப்பங்குளத்தில் உள்ள இளைஞர்கள் சேர்ந்து விவசாயிகளுடன் இணைந்து ஆளுக்கு கொஞ்சம் பணம் சேர்த்து நீர்நிலைகளைத் தூர்வார திட்டமிட்டோம்'' என்று முன்கதை சுருக்கத்தை சொல்கிறார்

''முதல்கட்டமாக ஒரு கண்மாயைத் தூர்வாரி அதற்கு தண்ணீரைக் கொண்டுவர முடிவு செய்தோம். அதன்படி செட்டி கண்மாய்க்கு நீர் கொண்டுவரும் நான்கு கிலோமீட்டர் நீளமுள்ள இரண்டு வாய்க்கால்கள் முழுவதும் கருவேல மரங்கள், குப்பைகள், புதர்செடிகள் மண்டி தூர்ந்து கிடந்தன. அதனை பற்றி எங்கள் இணையத்தில் அறிவிப்பு செய்து பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடம் தூர்வாரவும் சீரமைக்கவும் நிதியுதவி கோரினோம். அவர்களும் ஆர்வத்துடன் உதவிசெய்தனர்.

அதன் பின்னர் மக்கள் பங்களிப்பு மற்றும் இயந்திரங்கள் உதவியுடன் தூர்வாரினோம். தூர்வாரியபோது ராஜஸ்தானின் தண்ணீர் மனிதர் ராஜேந்திரசிங் வந்து பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கி பாராட்டினார். இந்த பணியை பார்த்த மக்கள் மற்ற கண்மாய்களை தூர்வார நிதியுதவி வழங்கினார்கள். எங்கள் பணிகளை பார்த்த சிவகங்கை மாவட்ட ஆட்சியர் நூறுநாள் வேலைத்திட்ட பணியாளர்களை இந்த பணிக்கு பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளதுடன், மற்ற உதவிகளும் செய்துகொடுத்தார்'' என்கிறார் மகிழ்ச்சியுடன்.



● இயற்கை உணவகம்

### நமக்கு நாமே!

தூர்வாரிய பின் நடந்த மாற்றங்கள் பற்றி தொடர்ந்து பேசுகிறார் விவசாயி நாச்சியப்பன். ''2017இல் தொடங்கி நீர்நிலைகளை தூர்வாரியவுடன் 2018ஆம் ஆண்டு இரண்டு கண்மாய்களிலும் நன்றாக நீர் தேங்கியது. இதனால், விவசாயிகள் நம்பிக்கையுடன் விவசாயம் செய்ய ஆரம்பித்தனர். அந்த ஆண்டு நல்ல விளைச்சல் கிடைத்தது. அதன்பிறகு கடந்த வருடம் எங்கள் பணிகளை பாராட்டிய மாவட்ட ஆட்சியர் மக்களிடமே நிர்வாகத்தை கொடுத்து மேலும் இரண்டு கண்மாய்களை குடிமராமத்து செய்யும் பணியை வழங்கினார். கடந்த ஆண்டு நல்ல மழையும் பெய்த காரணத்தால் அனைத்து நீர்நிலைகளும் நிரம்பி தளும்பியது. இதனால், கடந்த ஆண்டு இன்னும் அதிகமான நிலங்களில் விவசாயிகள் பயிர் செய்தனர். இப்போது இன்னும் தண்ணீர் அதிகம் உள்ளதால் கோடைப் பயிராக உளுந்து சாகுபடியும் 50 ஏக்கரில் செய்துள்ளனர்.

ஒருகாலத்தில் 500 ஏக்கர் விளைந்த எங்கள் ஊரில் கண்மாய்கள் தூர்ந்ததால், பாசனப் பரப்பு கிட்டத்திட்ட 50 ஏக்காராக சுருங்கியது. இப்போது மீண்டும் நீர்நிலைகளை தூர்வாரியதால் 400 ஏக்கர் அளவிற்கு விவசாயம் செய்ய ஆரம்பித்துள்ளோம். இன்னும் மூன்று நீர்நிலைகள் மட்டும் தூர்வாரப்படாமல் உள்ளது. அதையும் இந்த வருடம் தூர்வாரினால் நூறு சதவீதம் பழையபடி அனைத்து நிலங்களிலும் பயிர் செய்வோம்'' என்கிறார் பூரிப்புடன்.



சிவக்குமார்

**நீர்**பங்கீடு பற்றியும் சொல்கிறார் நாசியப்பன் ''நீர் நிலைகளிலிருந்து நீரினை பங்கிட்டு நிலங்களுக்கு வழங்க 'நீர்பிச்சு' என்று ஒருவர் எங்களால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கண்மாயில் உள்ள நீரினை சமமாக பங்கிட்டு, தேவையான விவசாயிகளுக்கு, தேவையான நேரத்தில் வழங்குவார். இந்த நீர்பிச்சுவிற்கு

புதிய தலைமுறை
மலர் 9 இதழ் 38 21 ஜூன் 2018 விலை ₹ 20 சமூக விழிப்புணர்வு வார இதழ்



● நெல் எடை பார்த்தல்



● களத்திலேயே விவசாயிகளுக்கு பணம்

ஊதியம் விவசாயிகளே பங்கிட்டு கொடுப்பார்கள். இதனால், நீர்ப்பாசனம் செய்வதில் எங்களுக்குள் சிக்கல் வருவதே இல்லை" என்கிறார்.

**சந்தைப்படுத்துதலிலும் சாதனை!**

இளைஞர்கள் கொள்முதலில் இறங்கியது பற்றி பேசும் திருச்செல்வம், "கிட்டத்தட்ட இதுவரை 10 இலட்சம் ரூபாய் அளவுக்கு இளைஞர்களும் விவசாயிகளும் செலவு செய்துதான் இந்த நீர்நிலைகளை மீட்டெடுத்து நெல்லை விளைவித்துள்ளோம். ஆனால், நன்றாக விளைந்த நெல்லுக்கு சரியான விலை இல்லை. 65 கிலோ மூட்டையை வெறும் 850 ரூபாய்க்குத்தான் வியாபாரிகள் கேட்டனர். இதனால், எங்களுக்கு பெருந்த மனவேதனை. இத்தனை பாடுபட்டு நெல்விளைவித்தும், அதற்கு சரியான விலை இல்லையென்றால் எப்படி விவசாயிகள் அடுத்த போகம் பயிர் செய்வார்கள். இத்தனை உழைத்தும் நட்டம் என்றால் விளைநிலங்கள் தரிசாகவே கிடக்கட்டும் என்று உழவர்கள் விவசாயத்தை கைவிட்டுவிடுவார்களே என்ற கலக்கத்தில் இங்குள்ள இளைஞர்கள் ஒரு முடிவெடுத்தோம்.

அதன்படி நாங்கள் ஆளுக்கு கொஞ்சம் பணம் சேர்த்து எங்கள் பகுதியில் நாங்களே கொள்முதல் செய்ய ஆரம்பித்தோம். அதன்படி நாங்கள் விவசாயிகளிடம் நேரடியாக சென்று 62 கிலோ நெல்லை 1100 ரூபாய்க்கு கொள்முதல் செய்தோம். அவ்வாறு கொள்முதல் செய்த நெல்லை அரைத்து வேப்பங்குளம் பிராண்ட் அரிசியாக மாற்றி விற்பனையும் செய்தோம். இதனால், விவசாயிகளுக்கும் லாபம், எங்களுக்கும் சிறிதளவு லாபம் கிடைத்தது.

இந்த தகவலை அறிந்த சிவகங்கை மாவட்ட ஆட்சியர் எங்கள் ஊரில் நேரடி கொள்முதல் நிலையம் ஆரம்பிக்க உத்தரவிட்டார். இதனால், இப்போது விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கிறது." என்கிறார் மகிழ்ச்சியுடன்.

தொடர்ந்து இதுபற்றி பேசும் இளைஞர் சிவக்குமார், "நெல் மட்டும் இல்லை, இனிமேல் உளுந்து, எள், கடலை போன்ற எந்த பயிர் செய்தாலும் அதற்கு உரிய விலை கிடைக்கவில்லை என்றால் நாங்களே இணைந்து விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்து அதனை மதிப்புக்கூட்டி விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளோம். இதனை அனைத்து கிராம இளைஞர்களும் செய்ய முன்வர வேண்டும். இவ்வாறு கிடைக்கும் லாபத்தை இளைஞர்கள் அமைப்புகள் நீர்நிலைகளைத் தூர்வாருதல், மரம் நடுதல், சீமைக்கருவேல மரங்களை அகற்றுதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தலாம்.



'நீர் நிலைகளிலிருந்து நீரினை பங்கிட்டு நிலங்களுக்கு வழங்க 'நீர்பிச்சு' என்று ஒருவர் எங்களால் நியமிக்கப்பட்டுள்ளார், அவர் கண்மாயில் உள்ள நீரினை சமமாக பங்கிட்டு, தேவையான விவசாயிகளுக்கு, தேவையான நேரத்தில் வழங்குவார்





● நெல் கொள்முதல்



● நெல் சேமிப்பு

எங்கள் பகுதியில் அமைந்த நேரடி கொள்முதல் நிலையத்தில் நாங்கள் இயற்கை உணவகத்தையும் அமைத்துள்ளோம். அதில் முக்கியமாக கலத்து தோசை அனைவராலும் வரவேற்பை பெற்ற பாரம்பரிய உணவு. இரண்டு தோசைகளுக்கு இடையில் வெல்லக்கட்டி, சுக்கு, ஏலக்காய் போன்றவற்றை வைத்து செய்வோம். இது எங்களின் ஸ்பெஷல் உணவு. அதுபோல மதியம் இலவசமாக நார்த்தங்காய் சாறு, மாலையில் தேநீர் போன்றவற்றை இலவசமாகவே விவசாயிகளுக்கு வழங்குகிறோம்.

இனிவரும் காலங்களில் எங்கள் பகுதி மகளிர் சுய உதவிக் குழுக்கள், இளைஞர் அமைப்புகள் மூலமாக சிறுதானிய உணவகங்கள் அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம்" என்கிறார்.

நிறைவாக பேசிய திருச்செல்வம், "எங்கள் பகுதியில் உள்ள நீர்நிலைகளைத் தூர்வாரிய காரணத்தால் இங்கு நிலத்தடி நீர் நன்றாக உயர்ந்துள்ளது. அதுபோல இங்கிருந்த புளிய மரங்கள், தென்னை, மாமரங்களும் நன்றாக காய்க்க ஆரம்பித்துள்ளன. பல்லுயிர்ச் சூழலும் நன்றாக இருக்கிறது. இப்போது சுமார் ஆயிரம் மரங்கள் நட்டு வளர்த்தும் வருகிறோம்.

இனிவரும் காலங்களில் நேரடி இணைய விவசாய திட்டம் பற்றி திட்டமிட்டுள்ளோம். இதன்படி ஒவ்வொரு கிராமத்திலும் என்ன பயிர் செய்துள்ளனர், எவ்வளவு ஏக்கரில் செய்துள்ளனர் என்ற விவரங்கள் உடனுக்குடன் பதிவாகும். இதன் காரணமாக என்ன பயிருக்கு சந்தை வாய்ப்புள்ளது, எந்த பயிரை பயிரிடலாம் என்று விவசாயிகள் அறிந்துகொள்ளலாம். விவசாய சிக்கல்கள், அதன் தீர்வுகள் பற்றியும் உடனுக்குடன் இணையம் மூலமாக அறியும் திட்டத்தையும் செயல்படுத்த உள்ளோம்.

எங்கள் ஊரில் உள்ள இளைஞர்கள், விவசாயிகள் இணைந்து எங்கள் கிராமத்தை முன்னேற்ற சில முன்னெடுப்புகளை செய்தோம். அதனைப் பார்த்த மாவட்ட நிர்வாகமும், மாவட்ட ஆட்சியர் ஜெயகாந்தனும் எங்களுக்கு நல்ல உதவிகள் செய்து வருகின்றனர். எப்போதும் விவசாயிகள் அரசிடம் மோதல் போக்கை கடைப்பிடிக்கவேண்டும் என்று இல்லை. நாம் உத்வேகத்துடன் முதலடி எடுத்துவைத்தால் நமக்கு உதவி செய்ய அரசும், இன்னும் ஆயிரம் கரங்களும் துணை நிற்கும். அதற்கு வேப்பங்குளமே சாட்சி" என்கின்றனர் நம்பிக்கையுடன். ■



"நாம் உத்வேகத்துடன் முதலடி எடுத்துவைத்தால் நமக்கு உதவி செய்ய அரசும், இன்னும் ஆயிரம் கரங்களும் துணை நிற்கும், அதற்கு வேப்பங்குளமே சாட்சி"

இந்து தமிழ் திசை

நெல் கொள்முதல் நிலையத்துக்கு வரும்

# விவசாயிகள் பசியைப் போக்க களத்து தோசை, நார்த்தம் பழம் ஜூஸ்

● வேப்பங்குளம் கிராம மக்கள் கரிசனம்

இ. ஜெகநாதன்



▲ வேப்பங்குளம் நெல் கொள்முதல் நிலையத்துக்கு வரும் விவசாயிகளுக்காக தயாராகும் களத்து தோசை.



▲ விவசாயிகளுக்கு நார்த்தப்பழம் ஜூஸ் கொடுக்கும் பெண்.

காரைக்குடி

சிவகங்கை மாவட்டம், கல்லல் அருகே வேப்பங்குளத்தில் நெல் கொள்முதல் நிலையத்துக்கு பசியோடு வரும் விவசாயிகளுக்கு நார்த்தம் பழம் ஜூஸ், களத்து தோசை வழங்கி கிராம மக்கள் அரவணைக்கின்றனர்.

கல்லல் அருகே உள்ளது வேப்பங்குளம் கிராமம். இந்த ஊர் மக்களின் கூட்டு முயற்சியால் 2 ஆண்டுகளுக்கும் மேலாக அங்குள்ள நான்கு கண்மாய்களும் நிரம்பின. இதனால் விளைச்சலுக்கு குறைவில்லை. ஆனால், இக்கிராமத்தில் விளையும் நெல்லை, வியாபாரிகள் அடிமாட்டு விலைக்கு (66 கிலோ எடையுள்ள மூட்டை ரூ.850) கொள்முதல் செய்தனர். இதனால் அதிருப்தி அடைந்த மக்கள் அதைத் தடுக்க முடிவு செய்தனர்.

பணத் தேவையுள்ள விவசாயிகளிடம் மட்டும் மூட்டைக்கு ரூ.1,100 கொடுத்து நெல்லை கொள்முதல் செய்தனர். அந்த நெல்லை அரிசியாக மதிப்புக் கூட்டி, அதற்கு 'வேப்பங்குளம் பிராண்ட்' என்று பெயரிட்டு விற்க திட்டமிட்டனர். மேலும் நெல் கொள்முதல் செய்வதற்கான பணத்தைத் திரட்ட 'அரிசி தேவைப்படுவோர் முன்கூட்டியே பணம் செலுத்தினால், குறைந்த விலையில் ஒரு மாதத்துக்கு அரிசி விநியோகிக்கப்படும்' என கிராம மக்கள் சார்பில் சமூக வலைதளங்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் மூலம் வசூலித்த பணத்தில் 300 மூட்டைகளைக் கொள்முதல் செய்தனர். தற்போது கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக மாற்றும் பணி நடந்து வருகிறது.

இதை அறிந்த ஆட்சியர் ஜெ.ஜெயகாந்தன், வேப்பங்குளத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க உத்தரவிட்டார். அதன்படி பிப்.7-ம் தேதி முதல் கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. இங்கு 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து தினமும் 40 விவசாயிகள் வந்து செல்கின்றனர். மேலும் நெல்லை எடை வைப்பது, பேக்கிங் செய்வது போன்ற பணிகளில் 10-க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்.

வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கிராம மக்கள் சார்பில் இலவசமாக நார்த்தம் பழம் ஜூஸ் கொடுத்து உபசரிக்கின்றனர். மேலும் வெளியூர்களில் இருந்து வரும் விவசாயிகளுக்கு உணவு கிடைப்பது சிரமம் என்பதால் கிராம மக்கள் சார்பில், மிகவும் குறைந்த விலையில் 'களத்து தோசை' என்ற பலகாரத்தையும் வழங்குகின்றனர். இதனால் விவசாயிகள் நெல் கொள்முதல் நிலையத்துக்கு வந்தால் பசியோடு செல்வதில்லை.

இது குறித்து திருச்செல்வம், கணேசன் ஆகியோர் கூறியதாவது:

விவசாயிகளிடம் அடிமாட்டு விலைக்கு நெல் வாங்குவதைத் தடுக்க நாங்களே நெல் கொள் முதல் செய்து, அரிசியாக மதிப்புக் கூட்டி விற்பனை செய்ய முடிவு செய்துள்ளோம். இதே வழிமுறையை மற்ற கிராமங்களிலும் பின்பற்றினால் விவசாயப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும்.

எங்களுக்காக கொள்முதல் நிலையத்தை ஆட்சியர் அமைத்து கொடுத்தார். அங்கு மூட்டைக்கு ரூ.1,075 தருகின்றனர். இதனால் நாங்கள் கொள்முதலை நிறுத்தி விட்டோம். மேலும் வெளியூர் விவசாயிகளின் பசியைப் போக்க நார்த்தம்பழம் ஜூஸ், களத்து தோசை வழங்குகிறோம். 'களத்து தோசை ' என்பது செட்டிநாட்டுப் பகுதியில் ஒரு காலத்தில் மிகப் பிரபலமான பலகாரம். இதை 'இரட்டை தோசை' என்றும் கூறுவர். வழக்கமான தோசை மாவுடன் நாட்டுச் சர்க்கரை, ஏலம், சுக்கு உள்ளிட்டவற்றை கலந்து களத்து தோசையை தயாரிப்பர். ஒருவர் 2 தோசைகள் சாப்பிட்டாலே போதும். பசியாறி விடும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்து தமிழ் திசை

# கல்லல் அருகே விவசாயிகளின் வீடு தேடி வரும் விதை நெல்

• கிராம மக்கள் உதவியோடு விவசாயத்தை மீட்டெடுத்த பட்டதாரி இளைஞர்

இந்து தமிழ்

இ.ஜெகநாதன்

காரைக்குடி

சிவகங்கை மாவட்டம் கல்லல் அருகே விவசாயத்தை கைவிட்ட பலரையும் மீண்டும் விவசாயத்தை நோக்கி வர வைத்துள்ளார் பட்டதாரி இளைஞர் ஒருவர்.

கல்லல் அருகேயுள்ள வேப்பங்குளம் ஊராட்சியில் புதுவேப்பங்குளம், பழைய வேப்பங்குளம், தேர்வலசை, அச்சினி, கல்குளம், சந்தனேந்தல் தெம்மாவயல் என 7 கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் 2,000 பேர் வசிக்கின்றனர். 600 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் உள்ளன.

வானம் பார்த்த பூமியாக உள்ள இக்கிராமங்களில் வறட்சி, விவசாய இடுபொருட்கள் கிடைப்பதில் சிரமம், விளைபொருட்களுக்கு விலை கிடைக்காதது போன்ற காரணங்களால் பலரும் விவசாயத்தை கைவிட்டனர்.

தனது தாயார் ஊரான வேப்பங்குளத்தில் விவசாயம் அழிந்து வருவதை அறிந்த எம்சிஏ பட்டதாரியான திருச்செல்வம், அதை மீட்டெடுக்க முடிவு செய்தார்.



▲ வேப்பங்குளத்தில் ஆட்டோவில் விவசாயிகளின் வீடுகளுக்கே சென்று விதை நெல்லை விநியோகிக்கும் உழவர் உதவி மையத்தினர்.

இதற்காக 2019-ம் ஆண்டு அக்கிராம மக்களிடம் ரூ.5 லட்சம் வசூலித்து, அங்குள்ள கண்மாய்கள், வரத்துக் கால்வாய்களை சீரமைத்தார். அந்த ஆண்டு ஒரு சில மழைக்கே கண்மாய்கள் நிரம்பியதால், நெல் விவசாயம் செழித்தது. தொடர்ந்து விவசாயத்தில் உள்ள ஒவ்வொரு இடர்ப்பாடுகளையும் நீக்க நடவடிக்கை எடுத்தார். விளைந்த நெல்லை, சமூக வலைதளங்கள் மூலம் விற்பனைசெய்தார்.

கடந்த ஆண்டு வேளாண் அதிகாரிகள் உதவியோடு வேப்பங்குளத்தில் உழவர் உதவி மையம் அமைக்கப்பட்டது. இதன் ஒருங்கிணைப்பாளராக திருச்செல்வம் நியமிக்கப்பட்டார். இம்மையம் மூலம் விவசாயிகள் விளைவித்த மா, சப்போட்டா, எலுமிச்சை, நார்த்தை, புளி, பனங்கிழங்கு, இளநீர், தேங்காய், காய்கறிகள் ஆகியவை தமிழகம் முழுவதும் அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

விவசாயம் லாபகரத் தொழிலாக மாறத் தொடங்கியதால், விவசாயத்தை கைவிட்ட பலரும் மீண்டும் விவசாயத்துக்கு திரும்பினர். தற்போது உழவர் உதவி மையத்தினர் அரசு பரிந்துரைக்கும் தரமான நெல் விதைகளை கொள்முதல் செய்து, குறைந்த விலையில் விவசாயிகளின் வீடுகளுக்கே சென்று வழங்கி வருகின்றனர்.

அடுத்த கட்டமாக உழவு, நடவு, விதைப்பு பணிகள், உரத் தேவை குறித்து புள்ளி விவரங்களை சேகரித்து, அதற்கான தீர்வுக்கும் உழவர் உதவி மையத்தினர் தயாராகி வருகின்றனர். இதனால் 3 ஆண்டுகளில் தரிசாகக் கிடந்த 400 ஏக்கர் நிலங்கள் சாகுபடி பரப்பாக மாறியுள்ளன.

இது குறித்து திருச்செல்வம் கூறியதாவது: விதை நெல்லுக்காக விவசாயிகள் அலைவதை தவிர்க்க, வீடுகளுக்கே சென்று விநியோகிக்கிறோம். அடுத்ததாக உரங்களையும் வழங்க உள்ளோம். விவசாயிகள் விவசாயப் பணிகளை மேற்கொண்டால் போதும்.

விவசாயத்துக்குத் தேவையான தண்ணீர், இடுபொருட்கள் எளிதில் கிடைக்க நடவடிக்கை எடுப்பதோடு, விளைபொருட்களை லாபகரமான விலையில் விற்கவும் ஏற்பாடு செய்து கொடுக்கிறோம், என்றார்.

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்



# வீடு தேடிச் செல்லும் விதை நெல்: அசத்தும் உழவர் உதவி மையம்

**காரைக்குடி, ஆக.19**

கல்லல் அருகே உள்ள வேப்பங்குளம் ஊராட்சி விவசாயிகள் வறட்சி காலத்தில் 300 ஏக்கரில் நெல் அறுவடை செய்து பலரின் பாராட்டுகளை பெற்றனர். விவசாயிகள் வியாபாரிகளிடம் ஏமாறுவதை தவிர்க்கவும் மார்க்கெட்டிங் துறையில் சாதித்திடவும் வேப்பங்குளம் பிராண்ட் என்ற பெயரில் சமூக வலைதளம் மூலம் அரிசி விற்பனை திட்டத்தை அறிமுகம் செய்தனர்.

தங்களது விளைபொருட்களை தாங்களே விற்பனை செய்திட தங்களது ஊராட்சியில் உழவர் உதவி மையம் அமைக்க அரசிடம் கோரிக்கை வைத்ததால், வேளாண் துறை சார்பில் உழவர் உதவி மையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வந்தது. உழவர் உதவி மையத்தினர், விவசாயிகள் விதைநெல் வாங்குவதில் ஏமாறுவதை தவிர்த்திடவும் விதை நெல்லின் தரத்தை உறுதி செய்யும் நோக்கிலும் விவசாயிகளுக்கு நேரடியாக விதை நெல் வழங்கிட முடிவு செய்தனர்.

தரமான சான்றிதழ் பெற்ற விதை நெல் மூடைகளை கொள்முதல் செய்து அதனை விவசாயிகளிடம் நேரடியாக கொண்டு சேர்த்துள்ளனர். இதன் மூலம் விவசாயிகள் தரமற்ற விதை நெல் வாங்கி ஏமாறுவதை தவிர்ப்பதோடு, பண விரயமும் அலைச்சலும் தவிர்க்கப்படும். நேரடியாக தரமான விதை நெல் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.




## ப்பில் அதிருப்தி

இந்து தமிழ் திசை

## கல்லல் அருகே கால்நடைகளிடமிருந்து பயிர்களை காக்க

# 40 விவசாயிகள் சேர்ந்து கம்பி வேலி அமைப்பு

இ.ஜெகநாதன்

இந்து தமிழ்



↑ வேப்பங்குளத்தில் நிலத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட கம்பி வேலி.

● காரைக்குடி

சிவகங்கை மாவட்டம், கல்லல் அருகே ஆடு, மாடுகளிடமிருந்து கோடை பயிர்களை காப்பாற்ற 40 விவசாயிகள் ஒருங்கிணைந்து கம்பி வேலி அமைத்துள்ளனர்.

கல்லல் அருகேயுள்ள வேப்பங்குளம் ஊராட்சியில், புதுவேப்பங்குளம், பழைய வேப்பங்குளம், தேர்வலசை, அச்சினி, கல்குளம், சந்தனேந்தல் தெம்மாவயல் என 7 கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் 2 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். 600 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் உள்ளன. வானம் பார்த்த பூமியாக உள்ள இக்கிராமங்களில் வறட்சி, விவசாய இடுபொருட்கள் கிடைப்பதில் சிரமம், விளைபொருட்களுக்கு விலை கிடைக்காதது போன்ற காரணங்களால் பலரும் விவசாயத்தை கைவிட்டனர்.

இந்நிலையில், விவசாயத்தை மீட்டெடுக்க முடிவு செய்த எம்.சி.ஏ. பட்டதாரியான திருச்செல்வம், 2019-ம் ஆண்டு கிராம மக்கள் உதவியோடு அங்குள்ள கண்மாய்கள், வரத்துக் கால்வாய்களை சீரமைத்தார். அந்த ஆண்டு ஒரு சில மழைக்கே கண்மாய்கள் நிரம்பியதால், நெல் விவசாயம் செழித்தது. விளைவித்த நெல்லை, சமூக வலைதளங்கள் மூலம் விற்பனை செய்கின்றனர். உழவர் உதவி மையத்தை ஏற்படுத்தி, மா, சப்போட்டா, எலுமிச்சை, நார்த்தை, புளி, பனங்கிழங்கு, இளநீர், தேங்காய், காய்கறிகள் ஆகியவற்றை தமிழகம் முழுவதும் அனுப்பி விற்பனை செய்து வருகின்றனர்.

விவசாயம் லாபகரமான தொழிலாக மாறத் தொடங்கியதால், விவசாயத்தை கைவிட்ட பலரும் மீண்டும் விவசாயத்துக்கு திரும்பினர். இந்நிலையில். கண்மாயில் தண்ணீர் இருந்தும், ஆடு, மாடுகள் தொல்லையால் கோடை விவசாயம் செய்வதில் சிரமம் இருந்தது. எனவே, செட்டிய கண்மாயைச் சுற்றியுள்ள 16 ஏக்கர் நிலத்தை, மொத்தமாக 40 விவசாயிகள் இணைந்து கம்பி வேலி அமைத்துள்ளனர். அதில், கேழ்வரகு, நிலக்கடலை, காய்கறி பயிர்களை பயிரிட்டு வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயி திருச்செல்வம் கூறியதாவது:

விவசாயிகளிடம் 20 செண்ட் முதல் ஒரு ஏக்கர் வரை நிலம் இருக்கிறது. அவர்கள் தனித்தனியாக கம்பி வேலி அமைத்தால், ஒவ்வொரு நிலத்துக்கும் நான்கு புறமும் அமைக்க வேண்டும். மொத்தமாக அமைக்கும்போது ஒருபுறம் அமைத்தால் போதுமானது. இதனால் செலவு குறையும். ஏக்கருக்கே சராசரியாக ரூ.20 ஆயிரம்தான் செலவாகியுள்ளது. முதல் கட்டமாக, 16 ஏக்கரில் அமைத்துள்ளோம். படிப்படியாக மற்ற நிலங்களுக்கும் கம்பி வேலி அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். மூன்று ஆண்டுகளில் தரிசாகக் கிடந்த 400 ஏக்கர் நிலங்கள் சாகுபடி பரப்பாக மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்து தமிழ் திசை

Date: 21-11-18



# கம்பி வேலி அமைத்து கோடை விவசாயம்

## சாதித்து காட்டிய வேப்பங்குளம் விவசாயிகள்

இ.ஜெகநாதன்

● காரைக்குடி

சிவகங்கை மாவட்டம், கல்லல் அருகே ஆடு, மாடுகளிடம் இருந்து பாதுகாக்க கம்பி வேலி அமைத்து கோடை விவசாயம் செய்து வேப்பங்குளம் விவசாயிகள் சாதித்துள்ளனர்.

கல்லல் அருகே வேப்பங்குளம் ஊராட்சியில் புதுவேப்பங்குளம், பழைய வேப்பங்குளம், தேர்வலசை, அச்சினி, கல்குளம், சந்தனேந்தல் தெம்மாவயல் என 7 கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் 2,000 பேர் வசிக்கின்றனர். 600 ஏக்கருக்கு மேல் விளை நிலங்கள் உள்ளன.

வானம் பார்த்த பூமியாக உள்ள இக்கிராமங்களில் வறட்சி, விவசாய இடுபொருட்கள் கிடைப்பதில் சிரமம், விளைபொருட்களுக்கு விலை கிடைக்காதது போன்ற காரணங்களால் பலரும் விவசாயத்தைக் கைவிட்டனர்.

விவசாயத்தை மீட்டெடுக்க முடிவு செய்த எம்சிஏ பட்டதாரியான திருச்செல்வம், 2019-ம் ஆண்டு கிராம மக்கள் உதவியோடு அங்குள்ள கண்மாய்கள், வரத்துக் கால்வாய்களைச் சீரமைத்தார்.

அதே ஆண்டு ஒரு சில மழைக்கே கண்மாய்கள் நிரம்பியதால், நெல் விவசாயம் செழித்தது. விளைவித்த நெல்லை, சமூக வலைதளங்கள் மூலம் விற்பனை செய்கின்றனர். உழவர் உதவி மையத்தை ஏற்படுத்தி மா, சப்போட்டா, எலுமிச்சை, நார்த்தை, புளி, பனங்கிழங்கு, இளநீர், தேங்காய், காய்கறிகள் ஆகியவற்றை தமிழகம் முழுவதும் அனுப்பி விற்பனை செய்து வருகின்றனர்.




வேப்பங்குளம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட கோடைப் பயிர்

விவசாயம் லாபகரமான தொழிலாக மாறத் தொடங்கியதால், விவசாயத்தைக் கைவிட்ட பலரும் மீண்டும் விவசாயத்துக்கு திரும்பினர். கண்மாயில் தண்ணீர் இருந்தும், ஆடு, மாடுகள் தொல்லையால் கோடை விவசாயம் செய்வதில் சிரமம் இருந்தது.

இந்நிலையில் செட்டிய கண்மாயைச் சுற்றியுள்ள 16 ஏக்கர் நிலத்தை மொத்தமாக 40 விவசாயிகள் இணைந்து கம்பி வேலி அமைத்தனர். அதில் கேழ்வரகு, நிலக்கடலை, காய்கறி பயிர்களைச் சாகுபடி செய்தனர். தற்போது அவை பலன் தரத் தொடங்கி உள்ளன. அவற்றை விவசாயிகள் உழவர் உதவி மையம் மூலம் விற்பனை செய்து வருகின்றனர்.



திருச்செல்வம்

இது குறித்து விவசாயி திருச்செல்வம் கூறியதாவது: எங்கள் பகுதியில் ஒரு போக விவசாயம் செய்வதே குதிரைக்கொம்பாக இருந்தது. தற்போது எங்களது முயற்சியால் கோடை விவசாயத்திலும் சாதித்துள்ளோம். சிலர் இயற்கை விவசாயமும் செய்தனர். கண்மாய் மட்டுமின்றி சமுதாய ஆழ்துளைக் கிணறுகளும் இருந்ததால் கோடை விவசாயத்துக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படவில்லை.

விவசாயிகளிடம் 20 சென்ட் முதல் ஒரு ஏக்கர் வரை நிலம் இருக்கிறது. தனித்தனியாக கம்பி வேலி அமைத்தால், செலவு அதிகம் என்பதால், ஒருங்கிணைந்து செயல்பட்டோம். இதனால் ஏக்கருக்கு ரூ.20,000-தான் செலவானது.

இதேபோல் மற்ற கிராமங்களிலும் விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால் லாபம் இரட்டிப்பாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

# சிவகங்கை அருகே விவசாயத்தை மீட்டெடுத்த பட்டதாரி

## தலைமைச் செயலர் இறையன்பு பாராட்டு

■ காரைக்குடி

'இந்து தமிழ் திசை' செய்தி எதிரொலியால் சிவகங்கை மாவட்டம், கல்லல் அருகே கிராம மக்கள் உதவியோடு விவசாயத்தை மீட்டெடுத்த பட்டதாரி இளைஞருக்கு தலைமைச் செயலர் பாராட்டுக் கடிதம் அனுப்பியுள்ளார்.

கல்லல் அருகேயுள்ள வேப்பங்குளம் ஊராட்சிக்குட்பட்ட 7 கிராமங்களில், பல்வேறு காரணங்களால் பலரும் விவசாயத்தைக் கைவிட்டனர். தனது தாயார் ஊரான வேப்பங்குளத்தில் விவசாயம் அழிந்து வருவதை அறிந்த எம்சிஏ பட்டதாரியான திருச்செல்வம், அதை மீட்டெடுக்க முயற்சி எடுத்தார்.

முதற்கட்டமாக 2019-ம் ஆண்டு கிராம மக்கள் உதவியோடு அங்குள்ள கண்மாய்கள், வரத்துக் கால்வாய்களைச் சீரமைத்தார். தானும், கிராம மக்களும் விளைவித்த நெல்லை, சமூக வலைதளம் மூலம் விற்பனை செய்தார். வேளாண்மைத்துறை அதிகாரிகள் உதவியோடு உழவர் உதவி மையத்தை ஏற்படுத்தி விவசாயிகள் விளைவித்த மா, சப்போட்டா, எலுமிச்சை, நார்த்தை, புளி, பனங்கிழங்கு, இளநீர், தேங்காய், காய்கறிகள் போன்றவற்றை தமிழகம் முழுவதும் விற்பனை செய்து வருகிறார்.

விவசாயம் லாபகரமான தொழிலாக மாறத் தொடங்கியதால், அக்கிராமத்தில் விவசாயத்தைக் கைவிட்ட பலரும் மீண்டும் விவசாயத்துக்குத் திரும்பினர். தற்போது உழவர் உதவி மையத்தில் அரசு பரிந்துரைக்கும் தரமான நெல் விதைகளை கொள்முதல் செய்து, குறைந்த விலையில் விவசாயிகளின் வீடுகளுக்கே சென்று திருச்செல்வம் வழங்கி வருகிறார்.

இதுகுறித்த செய்தி 'இந்து தமிழ் திசை' நாளிதழில் ஆக.27-ம் தேதி வெளியானது. இதைப் பார்த்த தமிழக தலைமைச் செயலர் வெ.இறையன்பு, திருச்செல்வத்துக்கு பாராட்டுக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது: தங்களது செய்தியை நாளிதழ் மூலம் தெரிந்து கொண்டேன். பட்டதாரியான நீங்கள் வாழ்வின் ஆதாரமாக விளங்கும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதை மனதாரப் பாராட்டுகிறேன். உங்களுடைய கிராம மக்களுக்கு மீண்டும் விவசாயத்தில் ஆர்வம் ஏற்படுத்தி, அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருவது மகிழ்ச்சியாக உள்ளது.

இன்னும் பல படித்த இளைஞர்கள் தங்களை போன்று விவசாயத்தில் ஈடுபட வேண்டும் என கூறப்பட்டிருந்தது.

இதுகுறித்து திருச்செல்வம் கூறுகையில் 'தலைமைச் செயலரின் பாராட்டு எனக்கு மேலும் உத்வேகம் அளித்துள்ளது.' என்றார்.

பசுமை விகடன்
10.03.24 மண்ணின் வளமே மக்கள் வளம்

முன்னேற்றம்

செ.சல்மான்
படங்கள்: நா.ராஜமுருகன்



# நீர்நிலைகள் புனரமைப்பு, ஆன்லைனில் விளைபொருள்கள் விற்பனை... முன்னுதாரணமாகத் திகழும் வேப்பங்குளம் ஊராட்சி!

"சிவகங்கை மாவட்டத்தில் உள்ள வேப்பங்குளம் ஊராட்சியை முன்மாதிரியாகக் கொண்டு, தமிழகத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தினாலே போதும்... விவசாயம் மேம்படும், விவசாயிகளின் பொருளாதார நிலை வளர்ச்சி அடையும் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும்" எனத் தமிழக அரசுக்குக் கோரிக்கை வைக்கிறார்கள், இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள்.

நீராதாரங்களை மேம்படுத்துதல், விவசாயத்தை விட்டு விலகிச் சென்றவர்களை மீண்டும் விவசாயத்தில் ஈடுபடுத்துதல், இயற்கை விவசாயம் மற்றும் பாரம்பர்ய நெல் சாகுபடியில் ஆர்வம் காட்டுதல், விவசாய விளைபொருள்களை இணைய வழியில் சந்தைபடுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கை





பசுமை சூழ்ந்த வேப்பங்குளம் ஊராட்சி

களால் வேப்பங்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்களில் விவசாயமும், பொருளாதார நிலையும் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது. காரைக்குடியைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப பொறியாளர் திருச்செல்வம் ஒருங்கிணைப்பில் உருவான மிஷன் ஐ.டி- ரூரல் (*Mission IT- Rural*) என்ற அமைப்பு மேற்கொண்ட முன்முயற்சிகளால் இந்த மாற்றங்கள் சாத்தியமாகியுள்ளன.

இதுகுறித்து அறிந்துகொள்ள வேப்பங்குளம் ஊராட்சிக்குட்பட்ட புது வேப்பங்குளம், பழைய வேப்பங்குளம், அச்சினி, தேர்வலசை, கல்குளம், சந்தனேந்தல், தெம்மாவயல் ஆகிய கிராமங்களுக்குப் பயணம் செய்தோம். ஒருகாலத்தில் முப்போகமும் செழிப்பாக விவசாயம் நடைபெற்ற பூமி இது. காலப்போக்கில் நீர்நிலைகள் தூர்ந்துபோயி, பாசனத்துக்குப் போதுமான அளவு தண்ணீர் கிடைக்காததாலும், விவசாயத்தில் உழைப்புக் கேற்ற லாபம் கிடைக்காததாலும் இப்பகுதி விவசாயிகளில் பலர் விவசாயத்தைக் கைவிட்டு மாற்றுத் தொழில்களுக்கும், கூலி வேலைகளுக்கும் செல்லத் தொடங்கினார்கள். இதனால் பெரும்பகுதி நிலங்கள் தரிசாக மாறின. இந்நிலையில்தான் திருச்செல்வத்தின் முன்னெடுப்பால், இங்கு கடந்த 5 ஆண்டுகளாக விவசாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருவதாக நெகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்கள், இப்பகுதி மக்கள்.

வேப்பங்குளம் ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில் மிஷன் ஐ.டி-ரூரல் அமைப்பும், மாவட்ட நிர்வாகமும் இணைந்து செயல்படுத்தி வந்த உழவர் உதவி மையம் அமைந்துள்ளது. அரசால் அனுமதிக்கப்பட்ட காலம் முடிந்துவிட்டதால் தற்போது இந்த மையம் மூடப்பட்டுள்ளது. வெயில் சுட்டெரிக்கும்

பசுமை விகடன்
10.03.24 மண்ணின் வளமே மக்கள் வளம்

நிலையிலும் கண்மாய்களில் தண்ணீர் ஓடுகிறது. நெல், காய்கறிகள் உள்ளிட்ட பயிர்கள் செழிப்பாக விளைந்து கொண்டிருப்பதால் இப்பகுதி முழுவதும் பசுமை படர்ந்துள்ளது


பெரியகருப்பன்


வருணதேவன்

நம்மிடம் பேசிய விவசாயி பெரிய கருப்பன், "கண்மாய்கள்ல தேங்கி கிடக்குற மழைத் தண்ணியை நம்பிதான் காலம்காலமாக விவசாயம் செஞ்சுகிட்டு இருந்தோம். காலப் போக்குல கண்மாய்களும், நீர்வரத்து கால்வாய்களும் முறையாகப் பராமரிக்கப்படாமல் போனதால கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்பட ஆரம்பிச்சது. விவசாயத்துல ஏற்கெனவே லாபம் கிடைக்காத நிலையும் இருந்ததுனால, ரொம்ப விரக்தி அடைஞ்சுப்போன விவசாயிகள்ல பலர், வேற வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டாங்க. நான் மலேசியாவுக்குப் போயி சில வருஷங்கள் வேலை பார்த்தேன். 2019-ம் வருஷம், பாசனத்துக்குத் தண்ணீர் கிடைக்க ஆரம்பச்சதுனால, சாகுபடி பரப்பு படிப்படியா அதிகரிக்க ஆரம்பிச்சு, விவசாயிகளோட உற்பத்திப் பொருள்களை, மிஷன் ஐ.டி-ரூரல் அமைப்பினர் ஆன்லைன் மூலமா நல்ல விலைக்கு விற்பனை செஞ்சு கொடுத்தாங்க. ஊர்லயே பிழைக்க வழி ஏற்பட்டதால, இந்தப் பகுதியைச் சேர்ந்த பலரும் மறுபடியும் விவசாயம் செய்ய ஆரம்பிச்சாங்க. இதுக்கு நானே உதாரணம். வெளிநாட்டுக்கு போய் பிழைக்குற எண்ணத்தைக் கைவிட்டு, இப்ப நானும் விவசாயம் செஞ்சுகிட்டு இருக்கேன்'' எனத் தெரிவித்தார்.

இதே பகுதியைச் சேர்ந்த வருணதேவன், "வேப்பங்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்கள்ல சுமார் 400 ஏக்கர்ல விவசாயம் நடந்துகிட்டு இருந்துச்சு. கண்மாய்கள் தூர்ந்துபோனதால், சாகுபடி பரப்பு 100

> ஊர்மக்களோட பங்களிப்போடும்... செட்டி கண்மாய், மேல கண்மாய், பேரி கண்மாய், சந்தனங்கண்மாய், பீடாரி கண்மாய்... இதெல்லாமே சீரமைக்கப்பட்டுச்சு. இந்தக் கண்மாய்களோட வரத்து வாய்க்கால்களும் தூர்வாரப்பட்டதால, மழைக்காலத்துல தண்ணீர் தேங்க ஆரம்பிச்சு, பாசனத்துக்கு வழி பிறந்துச்சு. இதனால், தரிசா கிடந்த நிலங்கள்ல எல்லாம் செழிப்பா விவசாயம் நடக்க ஆரம்பிச்சு, இப்ப சுமார் 250 ஏக்கர்ல விவசாயம் நடந்துக்கிட்டு இருக்கு.

திருச்செல்வம் எங்க ஊருக்கு வந்திருந்தப்ப, ஒரு முக்கியமான தகவலைப் பகிர்ந்துகிட்டார்.

ஆந்திராவுல உள்ள சில கிராமங்கள்ல சிதிலமடைஞ்சு கிடந்த நீர்நிலைகளைப் புனரமைச்சு, விவசாயத்தை மீட்டெடுத்த விஷயத்தைச் சொன்னார். எல்லாத்துக்கும் அரசாங்கத்தை மட்டுமே முழுமையா நம்பியிருக்காம, நாமளே இங்கவுள்ள கண்மாய்களைச் சீரமைச்சோம்னா... சிறப்பா விவசாயம் செய்யலாம்னு சொன்னார். அவர் சொன்னதைக் கேட்டு, இதெல்லாம் சாத்தியப்படுமானு ஊர்க்காரங்களுக்கு முதல்ல சந்தேகமாத்தான் இருந்துச்சு. ஆனாலும், அவரோட தொடர் முயற்சிகளால், நம்பிக்கை ஏற்பட்டு, இந்தப் பகுதிகள்ல உள்ள மக்கள் எல்லாரும் சேர்ந்து பல லட்சம் ரூபாய் பணம் போட்டு, கண்மாய்களையும், வரத்துக்கால்வாய்களையும் சீரமைச்சோம்.

ஏக்கருக்கும் கீழ குறைஞ்சு போயிடுச்சு. இந்த நிலையிலதான் திருச்செல்வத்தோட முன் முயற்சியோடும் ஊர்மக்களோட பங்களிப்போடும்... செட்டி கண்மாய், மேல கண்மாய், பேரி கண்மாய், சந்தனங்கண்மாய், பீடாரி கண்மாய்... இதெல்லாமே சீரமைக்கப் பட்டுச்சு. இந்தக் கண்மாய்களோட வரத்து வாய்க்கால்களும் தூர்வாரப்பட்டதால, மழைக்காலத்துல தண்ணீர் தேங்க ஆரம்பிச்சு, பாசனத்துக்கு வழி பிறந்துச்சு. இதனால், தரிசா கிடந்த நிலங்கள்ல எல்லாம் செழிப்பா விவசாயம் நடக்க ஆரம்பிச்சு, இப்ப சுமார் 250 ஏக்கர்ல விவசாயம் நடந்துகிட்டு இருக்கு.

முன்னாடி காய்ஞ்சு கிடந்த கண்மாய்கள்ல எல்லாம் இப்ப தண்ணீர் நிக்குது. திருச்செல்வத்தை ஒருங்கிணைப்பாளராகக் கொண்ட மிஷன் ஐ.டி- ரூரல் அமைப்பும்






திருச்செல்வம்

மாவட்ட நிர்வாகமும் இணைஞ்சு, எங்க ஊர்ல உழவர் உதவி மையம் ஏற்படுத்தி விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்க ஆரம்பிச்சாங்க. எந்தப் பயிர்களை எப்ப பயிர் செஞ்சா, நல்ல விளைச்சல் கிடைக்கும், நல்ல விலை கிடைக்கும்ங்கற யோசனைகள் சொன்னதோடு, இந்தப் பகுதி விவசாயிகள் உற்பத்தி செஞ்ச அரிசி, மாம்பழம், எலுமிச்சை, நார்த்தை, புளி, பனங்கிழங்கு உள்ளிட்ட பொருள்களை ஆன்லைன் மூலம் நல்ல விலைக்கு விற்பனை செஞ்சும் கொடுத்தாங்க.

இப்ப எங்க ஊர்ல நெல், காய்கறிகள், பழங்கள்னு பலவிதமான பயிர்களும் விளைவிக்கப்படுது. எங்க மாவட்டத்துல உள்ள அரசு அலுவலகங்களுக்கு ஏதாவது வேலையா போகும்போது, வேப்பங் குளம்ங்கற எங்க ஊர் பேரைச் சொன்னாலே ரொம்ப மதிப்போடு நடந்துக்குறாங்க" எனத் தெரிவித்தார்.

இதற்கெல்லாம் காரணமான மிஷன் ஐ.டி-ரூரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருச் செல்வத்தைக் காரைக்குடியிலுள்ள அவருடைய வீட்டில் சந்தித்தோம். உடல்நலக் குறைவு காரணமாகச் சமீபகாலமாகச் சிகிச்சை எடுத்து வருகிறார். வேப்பங்குளம் பகுதி மக்கள், இவருக்கு இரண்டு முறை விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளார்கள்.

நம்மிடம் பேசிய திருச்செல்வம், "'விவசாயிகள்தான், நம் நாட்டின் முதுகெலும்பு'னு காந்தியடிகள் சொன்னார். ஆனா, அந்த விவசாயிகள் நிம்மதியா இல்லை. பெரும்பாலான விவசாயிகள் கடன் வாங்கிதான் விவசாயம் செய்றாங்க. தண்ணீர் தட்டுப்பாட்டாலும், அதிக மழை வெள்ளத்தாலும் கடுமையான நெருக்கடிகளைச் சந்திக்குறாங்க. ஆனா, விளைவிச்ச பொருள்களுக்கு லாபகரமான விலை கிடைக்காததால நஷ்டம் ஏற்பட்டு, மேலும் மேலும் கடன்காரர்கள் ஆகுறாங்க. இதனால் விவசாயமே வேண்டாம்னு சிலர் முடிவெடுத்து, மாற்றுத் தொழில்களை நோக்கிப் போகக்கூடிய நிலை இப்பவும் சில பகுதிகள்ல இருக்கத் தான் செய்யுது. இதுக்கு ஒரு தீர்வு காணணும்ங்கற எண்ணம், என் மனசுல நீண்டகாலமாகவே இருந்துச்சு.

நான் எம்.சி.ஏ பட்டப்படிப்பு முடிச்சுட்டு, 2000-ம் வருஷம், ஆந்திராவுல உள்ள ஐ.டி நிறுவனத்துல வேலை பார்த்தேன். அந்தச் சமயத்துல, தக்காளி விலை வீழ்ச்சியால், மதனப்பள்ளியில உள்ள விவசாயிகள் தாங்கள் விளைவிச்ச தக்காளியை டன் கணக்குல சாலையில வீசினதா, ஊடகங்கள்ல வந்த செய்தி என்னை ரொம்பவே பாதிச்சது. என்கூட வேலைபார்த்த நண்பர்களுமே அதைப் பார்த்து கவலைப்பட்டாங்க. காரணம், நாங்க எல்லோருமே விவசாயத்தைப் பின்புலமாகக் கொண்ட குடும்பங்கள்ல இருந்து வந்தவர்கள்.

நல்ல முறையில விளைவிச்சும்கூட, தங்களோட பொருள்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் வீதியில் கொட்டும் விவசாயிகளுக்கு... நவீன தகவல் தொழில்நுட்பம் மூலம் ஏதாவது உதவி செய்யணும்னு முடிவெடுத்தோம். எந்தக் காலகட்டத்துல, எந்தப் பொருளை, எந்தளவுக்கு உற்பத்தி செஞ்சா, ஓரளவுக்கு லாபகரமான

பசுமை விகடன்
10.03.24 மண்ணின் வளமே மக்கள் வளம்

விலை கிடைக்கும்னு விவசாயிகளுக்கு வழிகாட்டுறக்காக நானும் என்னோட நண்பர்களும் சேர்ந்து 'மிஷன் ஐ.டி- ரூரல்'ங்கற பேர்ல ஓர் அமைப்பைத் தொடங்கினோம். தகவல் தொழில்நுட்பம் மூலம் கிராமப்புற மேம்பாடுதான், இந்த அமைப்போட முதன்மையான நோக்கம்.

2004 முதல் 2006-ம் வருஷம் வரைக்கும் ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டத்துல உள்ள புலிவெந்துலா தாலுகாவுக்கு உட்பட்ட 30 கிராமங்கள்ல எங்களோட செயல்திட்டத்தைச் செயல்படுத்தினோம். அப்போதைய முதலமைச்சர் ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டியோட தொகுதிக்கு உட்பட்டப் பகுதி அது. அந்தப் பகுதி மக்களோட ஒத்துழைப்போடு, முதல்கட்டமா நீராதாரங்களை மேம்படுத்தினோம்.

அந்தப் பகுதி விவசாயிகள் விளைவித்த பொருள்களை, தகவல் தொழில்நுட்ப வசதிகள் மூலம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செஞ்சு, நல்ல லாபத்தைப் பெற்றுக் கொடுத்தோம். அதைக் கண்காணிச்ச ஆந்திர அரசு, எங்கள் செயல் திட்டத்தைக் கடப்பா மாவட்டம் முழுக்க 2007 முதல் 2009 வரை செயல்படுத்த அனுமதி அளிச்சது. நிதி உதவிகளும் செஞ்சது. எங்களோட செயல்பாடுகள் சிறப்பாகப் போய்க்கிட்டு இருந்த நிலையில், அங்கு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் எங்களோட பணிகளைத் தொடர முடியாமல் போயிடுச்சு. ஆனாலும், நாங்க மேற்கொண்ட பணிகளால் பயனடைஞ்ச அந்தப் பகுதி விவசாயிகள் மனப்பூர்வமா எங்களை வாழ்த்தினாங்க.

ஆந்திராவில் செயல்படுத்தி வெற்றி கண்ட எங்களுடைய திட்டத்தைத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த நினைச்சோம். எந்த ஊரை தேர்ந்தெடுக்கலாம்ங்கற யோசனையில இருந்தப்பதான் என்னோட அம்மா 2016-ம் வருஷம் காலமானார். என் அம்மாவோட நினைவாக, அவரோட பூர்வீகமான வேப்பங்குளத்தைத் தேர்வு செஞ்சேன்.

வேப்பங்குளத்தைத் தேர்வு செஞ்சதுக்கு இன்னொரு முக்கியமான காரணமும் உண்டு. கண்மாய்கள், ஊருணிகள் எல்லாம் தூர்ந்துபோய், செடி, கொடிகள் மண்டி மோசமான நிலையில கிடந்துச்சு. இந்த ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்கள்ல ஆற்றுப்பாசனத்துக்கு வழி கிடையாது. போர்வெல்களும் அதிகம் கிடையாது. சமுதாய போர்வெல்கள் உள்ளிட்ட மொத்தம் 10 போர்வெல்கள்தான் இருக்கு. கண்மாய்கள்ல தண்ணீர் இல்லாததுனால நிலத்தடிநீரும் வறண்டு போனதால், பெரும்பாலான போர்வெல்கள்ல தண்ணீர் கிடைக்கல. அந்த நிலையிலதான் 2018-ம் வருஷம் ஊர்மக்களைச் சந்திச்சுப் பேசி, கண்மாய்களையும் வரத்து கால்வாய்களையும் தூர்வாரி மேம்படுத்துறக்கான முயற்சிகள்ல இறங்கினேன்.

ஊர்மக்கள் தங்களோட பங்களிப்பாக, 9 லட்சம் ரூபாய் பங்களிப்பு செஞ்சாங்க. நானும் என்னோட நண்பர்களும் சேர்ந்து 2 லட்சம் ரூபாய் பங்களிப்பு செஞ்சோம். நவீன இயந்திரங்களை வாடகைக்குப் பயன்படுத்தி, மொத்தம் 11 லட்சம் ரூபாய் செலவுல 6 கண்மாய்கள், ஒரு குடிநீர் குளம், வரத்துக் கால்வாய்களையும் சீரமைச்சோம். 6 கண்மாய்கள் மற்றும் ஒரு குளத்தோட மொத்த பரப்பு சுமார் 150 ஏக்கர். வரத்து கால்வாய்களோட மொத்த தூரம் 20 கிலோமீட்டர். இவ்வளவு பெரிய திட்டப் பணிகளை 11 லட்சம் ரூபாய் செலவுல நல்ல முறையில செஞ்சு முடிச்சதைப் பார்த்து பலரும் ஆச்சர்யப்பட்டாங்க.

மக்களோட நேரடி கண்காணிப்பு மற்றும் பங்களிப்புனாலதான் இது சாத்தியமாச்சு.

PRESS & REGISTRATION OF BOOKS ACT, 1867
Registration of Newspapers (Central) Rules, 1956
FORM IV(SEE RULE 8) Statement about Ownership & other particulars about Newspaper

PASUMAI VIKATAN

| | |
|---|---|
| 1 Place of Publication | 757, Anna Salai, Chennai - 600 002. |
| 2 Periodicity of its Publication | Fortnightly |
| 3 Printer's Name<br>Nationality<br>Address | S.Rangaraj<br>Indian<br>Pooja Apartments, Flat F1, 1st Floor, Amman Nagar 3rd Street, Puzhuthivakkam, Chennai-600 091. |
| 4 Publisher's Name<br>Nationality<br>Address | S.Arivazhagan<br>Indian<br>6/65, Vaikasi Street Chinmaya Nagar II Stage, Virugambakkam Chennai-600 092. |
| 5 Editor's Name<br>Nationality<br>Address | S.Arivazhagan<br>Indian<br>6/65, Vaikasi Street Chinmaya Nagar II Stage, Virugambakkam Chennai - 600 092. |
| 6 Name and Address of Shareholders holding more than one percent of the Total Capital | B.Srinivasan & Family, New No.36, Old No.58, III Main Road, Gandhi Nagar, Adyar, Chennai-600 020. |

I, S.ARIVAZHAGAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated : 15.02.2024 Signature of Publisher: S.ARIVAZHAGAN





சாலைகளில் மரங்கள்

கண்மாய்கள்ல மழைநீர் நிறைய ஆரம்பிச்சதும், சாகுபடி பரப்பு அதிகரிச்சது.

முதலமைச்சர் ஸ்டாலின் தேர்தலுக்கு முன்பு 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இங்கு வந்தப்ப, எங்களோட திட்டம் குறித்து மனு அளிச்சோம். அவர் முதலமைச்சராகப் பதவியேற்றதும், முதல்வர் அலுவலகத்துல எங்களோட மனுவைப் பரிசீலனை செஞ்சு, அதை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு அனுப்பினாங்க. மாவட்ட ஆட்சியரும், மற்ற அதிகாரிகளும், எங்களோட செயல்பாடுகள் பத்தி விரிவாகக் கேட்டுத் தெரிஞ்சுகிட்டாங்க. நாங்கள் செயல்பட, உழவர் உதவி மையம் அமைச்சுக் கொடுத்தாங்க.

இணையதள வசதியைப் பயன்படுத்தி, விவசாயிகளுக்குப் பல நல்ல விஷயங்களைச் செஞ்சு கொடுத்தோம், உரக்கடைகள்ல அதிக பணம் கொடுத்து, நம்பகத்தன்மை இல்லாத தனியார் விதைகளை வாங்கிப் பயன்படுத்திக்கிட்டு இருந்த விவசாயிகளுக்கு, சான்று பெற்ற தரமான அரசு விதைகளை, அவங்களோட வீடு தேடிப் போய் கொடுத்தோம். இயற்கை விவசாயம் மற்றும் பாரம்பர்ய நெல் சாகுபடியையும் ஊக்கப்படுத்தினோம். விவசாயிகள் உற்பத்தி செஞ்சு கொடுத்த பொருள்களை 'வேப்பங்குளம் பிராண்டு'ங்கற பேர்ல, ஆன்லைன் மூலம் விற்பனை செஞ்சு கொடுத்தோம்.

என்ன விலைக்கு விற்பனை செஞ்சோம்ங்கற தகவல்களை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தினோம். பேக்கிங், டெலிவரி செலவுகளுக்காகவும், உழவர் உதவி மையத்தை நிர்வகிக்கும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குறதுக்காகவும் 5 சதவிகிதம் மட்டும் விவசாயிகள்கிட்ட கட்டணம் வாங்கினோம். வியாபாரிகள்கிட்டயும் இடைத்தரகர்கள்கிட்டயும் கிடைக்குற விலையைவிடவும் ஆன்லைன் விற்பனையில அதிக விலை கிடைச்சதுனால விவசாயிகள் சந்தோஷப்பட்டாங்க. உடனுக்குடன் பணம் கிடைச்சதுனாலயும் திருப்தி அடைஞ்சாங்க.

ஒரே விவசாயி ஒரேவிதமான பயிரை அதிகப் பரப்புல தொடர்ச்சியா பயிர் செஞ்சா நிறைய பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டியதிருக்கும். அதேபோல, எல்லா விவசாயிகளும் ஒரே சமயத்துல ஒரே விதமான பயிரைச் சாகுபடி செஞ்சாலும் நிறைய சிரமங்களைச் சந்திக்க வேண்டியதிருக்கும்.

இது பத்தி விவசாயிகள்கிட்ட விழிப்புணர்வு ஏற்படுத்தினோம். பயிற்சி சுழற்சி முறை, கலப்புப் பயிர்கள் சாகுபடி, வெவ்வேறு விவசாயிகள் வெவ்வேறு விதமான பயிர்கள் சாகுபடி செய்யும் முறைகளையும் நடைமுறைப்படுத்தினோம்.

இப்படி இன்னும் பலவிதமான செயல்பாடுகளை மேற்கொண்டோம். மிஷன் ஐ.டி-ரூரல் மேற்கொண்ட முன்முயற்சிகளாலும் விவசாயிகளோட பங்களிப்புனாலயும் வேப்பங்குளம் ஊராட்சி இப்ப முன்மாதிரி ஊராட்சியா உருவெடுத்திருக்கு. நாங்க செஞ்சது ஒரு சோதனையோட்டம்தான். இதைத் தமிழக அரசு, அனைத்து ஊராட்சிகள்லயும் செயல்படுத்தணும்.

நம்பகத் தன்மையான தனியார் அமைப்புகளோடு அரசு அதிகாரிகள் இணைஞ்சு, வேப்பங்குளம் மாதிரி திட்டத்தை அனைத்து ஊராட்சிகள்லயும் செயல்படுத்தணும். ஊராட்சிதோறும் உழவர் உதவி மையம் ஏற்படுத்தி, நவீன தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, விவசாயிகளுக்குத் தேவையான ஆக்கபூர்வமான விஷயங்களைச் செஞ்சு கொடுக்கணும். இதுதான் எங்களோட கனவு. கிராமங்கள் தன்னிறைவு அடைய இது கண்டிப்பா கைகொடுக்கும்" என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

**தொடர்புக்கு, திருச்செல்வம்,**
**செல்போன்: 98403 74266.**

தினமணி

# உழவர் உதவி மையம் தேவை

திருச்செல்வம் ராமு

பருவகால மாற்றங்கள் உலக அளவில் உணவு உற்பத்தி, விநியோகம் இவற்றில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்கிற அச்சம் நிலவி வருகிறது. இந்நிலையில், விவசாயிகள் கடினமாக உழைத்து விளைவித்த பொருள்களுக்கு உரிய விலை கிடைப்பது அவர்கள் விவசாயத்தை ஆர்வமுடன் தொடர்வதற்கு வழிவகுக்கும்.

குறைந்தபட்ச ஆதார விலை என்பது எளிய தீர்வாக தோன்றுவதால் அதற்கு விவசாயிகளிடம் அதிக எதிர்பார்ப்பு உள்ளது. ஆனால், அரசு தயங்குவதற்கு முக்கியக் காரணம் அதிக நிதிச் சுமையும் நடைமுறைச் சிக்கல்களும்.

விவசாயிகளுக்கான தேவை குறைந்தபட்ச ஆதார விலையா, நிகர லாபமா என்றால் நிச்சயம் நிகர லாபம் என்பதாகத்தான் இருக்கும். கிராம நீராதாரங்களை மேம்படுத்துவது, மகசூலை அதிகரிக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுவது, உற்பத்திச் செலவைக் குறைக்கும் நடவடிக்கைகள், நல்ல விலை போன்றவை விவசாயிகளின் நிகர லாபத்தை அதிகரிக்கும்.

அரசுகள் அந்த இலக்குடன்தான் செயல்பட்டு வருகின்றன. இருந்தபோதும் விவசாயிகள் பிரச்னைகள் ஏதாவது ஒரு வடிவில் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. அதற்கான முக்கியக் காரணிகள், தேவைக்கேற்ற உற்பத்தி என்பதில் விவசாயிகளுக்கு வழிகாட்டும் அமைப்பு இல்லாதிருந்தல், விவசாயிகள் பயிர் செய்யும் பயிர் ரகம் குறித்த தகவல்களை அன்றன்று இணையதளத்தில் பதிவு செய்யும் நடைமுறை இல்லாதிருத்தல் ஆகியவையே.

தேவைக்கேற்ற உற்பத்தி இருக்கும்போது சந்தையே உரிய விலையை விவசாயிகளுக்கு வழங்குவதைப் பார்க்கிறோம். அதிக உற்பத்தியின்போது விலை வீழ்ச்சியடைவதையும், உற்பத்தி குறையும்போது விலை ஏற்றம் பெறுவதையும் பார்க்கிறோம்.

எனவே, விவசாயப் பிரச்சனைகளுக்கான அடிப்படைத் தீர்வு, விவசாயிகள் தங்கள் நிலத்தின் தன்மைக்கேற்ற பயிர் ரகங்களைத் தேர்வு செய்யும் வழிமுறையை உருவாக்குவதில்தான் உள்ளது.

தற்போதைய கட்டமைப்பு ஒன்றிய உதவி வேளாண் அலுவலர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கிராமங்களை நிர்வகிப்பதாக உள்ளது. விவசாயம் என்பது பருவநிலை சார்ந்த தொழிலாக இருப்பதால் விவசாயிகளின் தேவைகள் குறுகிய காலத்துக்குள் நிறைவேற்றப்பட வேண்டியவையாக உள்ளன. தற்போதைய கட்டமைப்பால் அதைச் சமாளிக்க முடியவில்லை.

இது விளைபொருள் தரம்,மகசூல் போன்றவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இப்பாதிப்பு குறு, சிறு விவசாயிகளிடம் அதிகமாக உள்ளது. சுமார் 75 சதவீதத்துக்கு மேல் குறு, சிறு விவசாயிகள் உள்ள நாடாக இருப்பதால் பிரச்னை பெரிதாகிறது.

விவசாய விளைபொருள் தரம் பார்த்து, பரிசோதித்து வாங்கும் தன்மையுடையதாக இருப்பதால் அரசின் இணையதள சந்தைகளை பெரும்பாலான விவசாயிகள் (குறிப்பாக குறு,சிறுவிவசாயிகள்) சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள முடிவதில்லை. இடைத்தரகர்கள் கொண்ட அமைப்பு தற்போதைய சூழலில் தவிர்க்க முடியாததாகிறது.

இந்நிலையில் பஞ்சாயத்துதோறும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப உழவர் உதவி மையம் அமைத்தல் அவசியமாகிறது. இது அரசு தனியார் இணைந்து செயல்படும் திட்டம். கட்டமைப்பு அரசுடையது (அலுவலகம், கணினி, புரொஜக்டர், போன்றவை). தனியார் அமைப்பு, மைய மேலாளர், உதவியாளர் என இருவரை பணிக்கு அமர்த்தி, ஊதியம் வழங்கி, அரசு வழிகாட்டுதல்படி, திட்டமிடுதலில் இருந்து விற்பனை செய்யும் வரையிலான சேவைகளை விவசாயிகளுக்கு வழங்கும்.

விவசாயிகள் பயிர் செய்யத் தொடங்கியுள்ள பயிர் ரகம் குறித்த தகவல்களை அன்றன்று இணையதள தகவல்களாக கிராம அளவில் பதிவு செய்தல், தினமும் தட்பவெப்ப நிலை, மழை அளவு தகவல்களைப் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு அரசு அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் இணைப்புப் பாலமாக இருக்கும்.

இம்மையத்தில் பணிபுரிபவர்கள் விவசாயிகளுடன் நேரடித் தொடர்பில் இருப்பதால், விவசாயிகளின் விளைபொருள்களை தரம் வாரியாக ஒன்று சேர்த்து வாங்குபவர்களுக்கு (அரசு, மண்டிகள், தனியார் நிறுவனங்கள், தனி நபர்கள்) கொடுக்க முடியும். விளைபொருளின் விற்கும், வாங்கும் விலைகளை வெளிப்படையாகத் தெரிவிக்க முடியும்.

திட்டமிடுதல் முதல் உற்பத்தி வரை வழிநடத்திய அமைப்பே சந்தைப்படுத்துதலிலும் ஈடுபடும்போது வாங்குபவர்களின் நம்பிக்கை பன்மடங்கு அதிகரிக்கும். மேலும், அவர்களுக்கு, தங்கள் பணம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க உதவுகிறது என்கிற திருப்தியும் கிடைக்கும்.

விவசாய இடுபொருள், விளைபொருள் விற்பனை, விளம்பரங்கள், இணைய வழி சேவைகள் போன்ற வழிகளில் அரசு நிர்ணயிக்கும் கட்டணங்கள்படி தனியார் அமைப்பு வருமானம் ஈட்டிக்கொள்ளும்.

இம்மையத்தில் பணிபுரியும் பணியாளர்களை உள்ளூரிலிருந்து அல்லாமல் பக்கத்து ஊர்களில் இருந்து தேர்வு செய்ய வேண்டும். அப்போதுதான் அனைத்து விவசாயிகளும் எவ்வித தயக்கமுமின்றி தங்கள் ஊரில் உள்ள மையங்களுக்குச் சென்று சேவைகளைப் பெற முடியும்.

மையம் விவசாயிகளுக்கு வசதியாக காலை, மாலை நேரங்களில் செயல்பட வேண்டும். விவசாயம் தொடர்புடைய செயலி, இணையதளம், எண்ம பணப் பரிவர்த்தனை போன்றவற்றை எளிய விவசாயி கூட இந்த மையத்தின் துணையுடன் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

இத்திட்டத்தின் பணியாளர்களுக்கு அந்தந்தப் பகுதியிலுள்ள தனியார் அமைப்பு ஊதியம் வழங்குவதால், அந்தந்தப் பகுதியில் விளையும் பொருள்கள் அக்கறையுடன் விற்பனை செய்யப்படும்.

மையப் பணியாளர்கள் திறம்பட செயல்படாத நிலையில், அவர்களை நீக்கவும், தனியார் அமைப்பு சரியாக செயல்படாத நிலையில் அந்த நிறுவனத்துக்கான உரிமத்தை ரத்து செய்யவும் அரசால் முடியும். அரசு - தனியார் இணைந்து செயல்படும் அணுகுமுறையில் இந்தத் திட்டம் சிறந்த பலனைத் தருவதோடு, முன்னுதாரணத் திட்டமாகவும் அமையும்.

# தொலைகாட்சி ஊடகங்களில் வந்த சில முக்கிய செய்திகள்




**புதிய தலைமுறை**

https://youtu.be/GOO4V5H77-M




**News 18**

https://youtu.be/dk3OSSxbGC4




**News 7**

https://youtu.be/WQDw3Jkxpd4




**சத்யம்**

**https://youtu.be/XjyQ0mrEpzw**

இந்து தமிழ் திசை

Date: 27-01-24



## விவசாயத்தை மீட்டெடுத்த

# பட்டதாரிக்கு கிராம மக்கள் விருது

இந்து தமிழ்

இ.ஜெகநாதன்

**காரைக்குடி**

கல்லல் அருகே விவசாயத்தை மீட்டெடுத்த பட்டதாரிக்கு, கிராம மக்கள் விருது கொடுத்து பாராட்டினர்.

சிவகங்கை மாவட்டம் கல்லல் அருகே வேப்பங்குளம் ஊராட்சி புதுவேப்பங்குளம், பழைய வேப்பங்குளம், தேர்வலசை, அச்சினி, கல்குளம், சந்தனேந்தல், தெம்மாவயல் ஆகிய 7 கிராமங்கள் உள்ளன. இங்கு 2,000 பேர் வசிக்கின்றனர். 6 கண்மாய்கள், 600 ஏக்கரில் விவசாய நிலங்கள் உள்ளன.

தொடர் வறட்சியாலும், பராமரிப்பு இல்லாததாலும் கண்மாய், வரத்துக் கால்வாய் முழுவதும் சீமைக் கருவேல மரங்கள் ஆக்கிரமித்திருந்தன. இதனால் 600 ஏக்கரும் தரிசாக விடப்பட்டது.

இந்நிலையில், தனது தாயார் பிறந்த ஊரான வேப்பங்குளத்தில் விவசாயம் அழிந்து வருவதை அறிந்த எம்சிஏ பட்டதாரி திருச்செல்வம் அதை மீட்டெடுக்க முயற்சி எடுத்தார்.

கிராம மக்களின் கூட்டு முயற்சியோடு 2019-ம் ஆண்டு அங்குள்ள கண்மாய்கள், வரத்துக் கால்வாய்களை சீரமைத்தார். அதைத்தொடர்ந்து அந்த கிராமம் நீர் மேலாண்மையில் தன்னிறைவு பெற்றது. இதனால் கோடையிலும் காய்கறிகள், பயறு வகைகளை விவசாயம் செய்து வருகின்றனர்.

மேலும் திருச்செல்வம் நெல்லை அரிசியாக மதிப்பு கூட்டி, அந்த அரிசிக்கு 'வேப்பங்குளம் பிராண்டு' என பெயரிட்டு ஆன்லைனில் விற்பனை செய்தார். வேளாண்மை அதிகாரிகள் உதவியோடு உழவர் உதவி மையத்தை ஏற்படுத்தி விவசாயிகள் விளைவித்த மா, சப்போட்டா, தேங்காய், புளி, பனங்கிழங்கு, காய்கறிகளை இணையம் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தார்.

இந்நிலையில் அருகேயுள்ள செவரக்கோட்டை, கீழப்பூங்குடி ஆகிய 2 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தனித்தனியாக திருச்செல்வத்தை வரவழைத்து விருது வழங்கி பாராட்டினர். மேலும் செவரக்கோட்டையில் விவசாயத்தை மேம்படுத்த அவரை ஆலோசகராகவும் நியமித்துள்ளனர்.

இதுகுறித்து திருச்செல்வம் கூறுகையில், செவரக்கோட்டை, கீழப்பூங்குடி ஆகிய கிராமங்களிலும் விவசாயத்தை மீட்டெடுக்க என்னால் முடிந்த உதவிகளை செய்ய உள்ளேன்.

இதேபோல் விவசாயம் தொடர்பாக யார் கேட்டாலும் என்னால் முடிந்த உதவிகளை செய்ய தயாராக உள்ளேன் என்று கூறினார்.

THE HINDU

# 'Chettiya Kanmai' renovated

SPECIAL CORRESPONDENT
SIVAGANGA

A group of software professionals who had formed 'ICT in agriculture' to offer solutions to agriculture challenges through Information and Communication Technology has launched a strategy for village water source revival - rejuvenating water bodies and cleaning up supply channels.

Launching the first project at Veppankulam in Kallal block on Wednesday, the technocrats with the active participation of farmers and villagers, have renovated the 24 acre 'Chettiya Kanmai', which covered an 'ayacut' area of 60 acres and cleaned up two supply channels, running into 4.5 km long.

Under 'Mission Water,' they proposed to renovate six more water bodies in the village before the onset of monsoon and showcase the model for the state, said Thiruchelvam Ramu, heading the mission. "The Chettiya Kanmai is as good as what it was 25 years ago," he said.

He said the project was launched in his native Veepankulam as the village which had witnessed 'three time cultivation' in a year presented a picture of desolate for want of water. With monsoons playing truant in recent years, continued farming could be possible only if water sources in the villages were rejuvenated and readied to store rain water.

Villagers could send requests to renovate water bodies by visiting their website 'missionwater.in', he said adding once 'Mission water' received requests, it would collect half of the total cost from farmers and villagers, the stake holders and the balance from corporates and NGOs, he said. If the corporate companies were made to channelise the funds earmarked for Corporate Social Responsibility (CSR) activities, all the water bodies and supply channels in the state could be renovated, he said. Each village would have a fund manager to ensure transparency in the collection of local funding and external funding, he said. If all the water bodies in the state were renovated and made ready to store water during monsoons seasons, there would be no need to rely on Cauvery water, he opined.

Mission Water's maiden project received an impetus when Mr. Rajendra Singh, known as 'Waterman of India,' visited the village and appreciated the work. He called for decentralised approach for water management system and people's participation.

## Times of India
https://timesofindia.indiatimes.com/city/madurai/branding-their-rice-veppankulam

## Global Bihari
https://globalbihari.com/farmers-agitation-resolving-the-minimum-support

## Dinamani
https://tinyurl.com/3e3ydwwd

## FaceBook
https://www.facebook.com/share/v/19dqADdYUs/?mibextid=oFDknk

## Vikatan
https://www.vikatan.com/government-and-politics/agriculture/

## Vikatan
https:/ww.vikatan.com/agriculture/government/tn-agriculture-budget



தங்களுடைய ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டுதலில் "தகவல் தொடர்பு தொழில்நுட்பம் வலிமையுடன் விவசாய மேம்பாடு' எனும் இலக்கினை அடைவோம்.

# நன்றி